நியூ ரூபி

நகைகளும்,
திருத்த வேலைகளும்
உங்கள்
தேவைகளுக்கு
உடனுக்குடன்
செய்து தரப்படும்

7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05



ASI Boucherie

ஆடு, மாடு, கோழி
இறைச்சி வகைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

195, rue du fbg st-denis, 75010 Paris
Tel: 01 42 05 23 78



GB : Free France : 0,30€

# ஈழமுரசு®

முரசு 02 02 - 08 ஓகஸ்ட் 2011 முழக்கம் 94




பரிஸ்தமிழ்
www.paristamil.com


# நிருபமா ராவிற்கு மகிந்த கொடுத்த விருந்து!
## இந்திய நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட குழப்பம்





கண்களை திறக்கவைத்த இரண்டு உரைகள்






தமிழீழமும் அமெரிக்காவின் மத்தியத்துவமும்





கிழக்கில் உபத்திரவம்
வடக்கில் வஞ்சகம்
தெற்கில் அதிகாரம்
மேற்கில் செல்வம்

## எதிரணிக்குள் வெடித்துள்ள உள்வீட்டு முரண்பாடு கடா:.பிக்கான வெற்றி வாசலைத் திறந்துவைக்குமா?


AUTOSUR
CONTROLE TECHNIQUE AUTOMOBILE

உங்கள் வாகனங்களை Controle Technique
செய்து கொள்ள நீங்கள்
நாட வேண்டிய இடம்
Le Bourget விமானநிலையம் முன்பாக

C.T.M

Autosur C.T.M
Mathavan Balakrishnan
24 Route de Flandres,
95500 Bonneuil En France
Tél.: 01 45 91 06 78 Fax: 01 45 91 05 96
Portable: 06 68 10 83 85



EURO RESTO SERVICE

உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்

33 bis, rue du Chatêau Landon. 75010 Paris
M°: STALINGRAD / LA CHAPELLE
Tél.: 01 40 36 00 09 / 06 68 67 15 55



Pub
GANAPATHY CASH & CARRY
34-38 Ealing Road
Wembley Middlessex HAO 4TL
Tel: 020 8795 4627 Fax: 020 8903 3185



V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92



S.P.RAJU JEWELLERY
பழைய நகைகளுக்கு
புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!
நீங்கள் விரும்பும் டிசைன்களில்
குறித்த தவணையில் நகைகள்
செய்து கொடுக்கப்படும்.
13Rue du Fbg St Denis
75010 Paris
Tél : 01 58 20 17 33
13Rue cail
75010 Paris
Tél : 01 46 07 43 42



BHARATH
Spécialitées Indiene & Srilankaise
51,67,rue Louis Blanc, 75010 Paris
Tel : 01 42 09 35 84 Tel : 01 58 20 06 20 /06 03 37 38 24
www.restaurantbharath.com
www.cafe-bharath.com



VG மளிகை ஸ்தாபனம்
CASH & CARRY
இலங்கை, இந்திய, ஆபிரிக்க மற்றும்
ஆசிய மளிகைப்பொருட்கள்.
SARL VGK Cash & Carry
34, av de la Republique
93150 Le BlancMesnil
Tel: 01 48 67 56 44



VS CO Cash & Carry
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Rupali® online.com
see our full range at : www.rupalionline.com
Rupali Leicester Shop : 157 Greenlane Road, Licester LE5 3TQ, Phone :0116 2464 111
Rupali Bolton Shop: 187 Derby Street, Bolton BL3 6JT, Phone : 0120 4364 445

# CARSONS
## ESTATES & TRAVELS

LETTINGS 5% NO VAT
SALES 0.7% NO VAT
FREE EPC

Free market appraisal of your property
Low cost Flight tickets, Hotel Bookings, Excellent Worldwide Holiday Packages for very reasonable Price & India Visa Service

*4 Days/ 8 Days/ 12 Days/ 15 Days tours in India, Sri Lanka, Malaysia, Singapore, Thailand, Dubai & Mauritius for best price!*

0208 966 9500
WWW.CARSONSESTATES.COM

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# Ocean Indien

30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு

195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

"கொழும்பு, இந்தியா மற்றும் அனைத்துலக விமானசேவை"

COLOMBO from £205* +Taxes

| | | | |
|---|---|---|---|
| ETIHAD | fr £211* | SriLankan | fr £300* |
| OMAN AIR | fr £205* | JET AIRWAYS | fr £225* |
| KUWAIT AIRWAYS | fr £245* | QATAR AIRWAYS | fr £248* |
| Gulf Air | fr £340* | Emirates | fr £480* |

FLIGHTS WORLDWIDE

| | |
|---|---|
| INDIA | fr £155* |
| MALAYSIA | fr £210* |
| CANADA | fr £114* |

* Subject to availability, Terms & Conditions apply. Exclude taxes

AirChoice.co.uk
BEST AIR FARES WORLDWIDE
தமிழில் தொடர்பு கொள்ள: 0203 384 7535
Email Us: info@airchoice.co.uk
Website: www.airchoice.co.uk
IATA
For Emergency Flights - Call & Select Option 3

# Prime citizenship Test

முதன்மை குடியுரிமைபெறும் பரீட்சைகள்

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்.

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புகள் மூலமும் அதியுச்சப் பயிற்சி வழங்குகின்றோம்.
நாங்கள் வார இறுதி வகுப்புக்களும் நடாத்துகின்றோம்.

உங்கள் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் வகுப்புக்களுக்கு புதுவருட சலுகையாக
£ 165.00 மட்டுமே

Head office
14 Lombard business park,
2 purely way Croydon CR0 3JP

Branches
Tottenham
Lee Valey - Thecnopark
Ashley Road N17 9PM

North London branch
28, unimix House,
Abbey Road, NW10 7TR

Tel: 0208 150 9953 Mobile: 07538933261
www.primecitizenshiptest.co.uk

# Computer & Laptop Repairs

நாம் உங்கள் கணணிக்கு புத்துயிர் அளிக்கின்றோம்.
*Fix Your Computers/Laptops at low cost*

Half Price Anti Virus & internet Security + Installation
ITI Repairs®
Complete System With an Year Warranty From £149.00

மாவீரர் குடும்பங்களுக்கு 50% விலைக்கழிவு
(செய்கூலி மட்டும் - 19-05-2011 முதல்)
302 High Street North
East Ham, London E12 6SA
(Inside Mahalaxmy Silks)
07889 121 609 – 07961 590 496

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு®
MAISON DES MEDIAS
முரசு 02 02 – 08 ஒகஸ்ட் 2011 முழக்கம் 94

"ஆயுதப் போராட்டம் தோன்றி வளர்ந்த எதார்த்தப் புறநிலைகளை ஆராய்ந்து பார்த்தால் - அதன் காரணிகளை நீக்கிவிட உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் - ஆயுதப் பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடும்."



- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

# நிருபமா ராவிற்கு மகிந்த கொடுத்த விருந்து!

## இந்திய நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட குழப்பம்

(02.08.2011, செவ்வாய்க்கிழமை)

இந்திய வெளியுறவுத் துறைப் பணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ள நிருபமா ராவ், இறுதி மூன்று நாட்களை சிறீலங்காவில் விருந்துண்டு கழித்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஓய்வுபெற்ற அவர், அதற்கு முன்பாக வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களையும் சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சிறப்பு அழைப்பை ஏற்று சிறீலங்கா சென்று கழித்துள்ளார். கடந்த சனிக்கிழமை காலை மகிந்தவின் சிறப்பு விருந்தில் பங்கேற்ற அவர், அங்கு சிறீலங்காவின் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரையும் சந்தித்துப் பேசியுள்ளார். சிறீலங்காவுடன் சிறப்பு நட்புறவை நிருபமா ராவ் வைத்திருந்ததால்தான் அவருக்கு பாராட்டு விழா நடத்த ராஜபக்ச விரும்பியதாக சிறீலங்கா தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஸ்ராஸ்பூர்க் - பரிஸ் ஈருளிப் பயணம் → 16

1973ம் ஆண்டில் இந்திய வெளியுறவு துறைப் பணியில் (ஐ.எப்.எஸ்) சேர்ந்த நிருபமா ராவ், சிறீலங்காவிலும், சீனாவிலும் தூதராகப் பணியாற்றியுள்ளார். 2006ம் ஆண்டு மகிந்த சிறீலங்காவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாகவே இவர் சிறீலங்காவின் தூதர் பதவியில் இருந்து மாற்றப்பட்டு சீனாவிற்கான தூதராக நியமிக்கப்பட்டுவிட்டார். அதன் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றார்.

இலங்கையில் பாரிய இனப்படுகொலை நடைபெற்று முடிந்ததன் பின்னர் இந்தியாவின் வெளிவிவகார செயலராக பொறுப்பேற்றிருந்த இவர், சிறீலங்காவிற்கான பயணங்களை பல தடவைகள் மேற்கொண்டிருந்தார். சிறீலங்கா மீது சுமத்தப்பட்ட போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கைகளை எடுக்க விடாது இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனுடன் இணைந்து தடுத்து நிறுத்தியதில் இவரது பங்கு கணிசமானது என்ற குற்றச்சாட்டுக்களும் உள்ளன. அத்துடன், அண்மையில் இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தம் ஒரு சோக சம்பவம் என்றும் வடக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றும் வக்காலத்து வாங்கியிருந்தார்.

இதனாலேயே இந்தியாவின் எந்தவொருவருக்கும் வழங்காத கௌரவத்தை மகிந்த இவருக்கு சிறப்பு விருந்தளித்து கௌரவித்துள்ளதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். அத்துடன், வெளிவிவகார அமைச்சில்

(04ம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு

Redacteur: K. Jeisanthar
Editor in chief: K. Jeisanthar
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

அனைத்து தொடர்புகளுக்கும்:
MAISON DES MEDIAS
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE Gratuit
22, Rue Perdonnet,
75010 Paris, France
Tel: 00 33 1 40 05 95 15
Fax: 00 33 1 40 05 95 16

இணையத்தளம்
www.eelamurazu.com

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-eelamurazu@gmail.com
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
E.Mail-eelamurazuadm@gmail.com

Impression / Printing:
News Fax International
Unit 16, Bow Industraial Park
London E15 2DZ

பிரித்தானியா:
Eelamurasu Weekly
E.Mail-eelamurazu.uk@gmail.com
078 3087 4808
MOHAN

அவுஸ்திரேலியா:
P.O Box 1327
Glen Waverley
Victoria 3150
Tel: 61 3 8802 8368
Fax: 61 3 9803 4932

கனடா:
Pulathil Weekly
E.Mail-pulathilcanada@gmail.com
P.O.BOX # 4068, 1235 McCowan Rd,
Scarborough, ON, M1H 0A4
416 418 0822

சந்தா விபரம்
(அஞ்சற் செலவு மட்டும்)
வருட சந்தா
பிரான்ஸ் 60€
ஐரோப்பா 65€
ஏனைய நாடுகள் 70€

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதிபெறவேண்டும்.

# நிருபமா ராவிற்கு மகிந்த கொடுத்த...

இருந்து ஓய்வு பெற்றுள்ள இவரை அமெரிக்காவுக்கான இந்திய தூதராக நியமித்துள்ளது இந்திய மத்திய அரசு.

சிறீலங்காவின் மீது பொருளாதார தடைகளைக் கொண்டுவருவதற்கு அமெரிக்க கொங்கிரஸ் முயன்றுவருகின்றது. ஏற்கனவே, ஐரோப்பிய ஒன்றிய வரிச்சலுகை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறீலங்கா, அமெரிக்காவின் பொருளாதாரத் தடையினால் பாரிய பாதிப்பை எதிர்கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு மகிந்தவிற்கு ஆதரவாக எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க களமிறங்கியபோதும் சாதகமான முடிவுகள் எதனையும் எட்டமுடியவில்லை. இந்நிலையில் தமக்கு ஆதரவான நிருபமா ராவ் ஊடாக அமெரிக்காவை சாதகமான முடிவுகள் எடுக்க வைப்பதற்காகவே



மகிந்த இந்த மூன்று நாள் சிறப்பு விருந்தைக் கொடுத்து கௌரவித்திருப்பதாக தற்போது பரவலாக செய்திகள் வெளியாகிவருகின்றன.

அத்துடன், இந்த விருந்தின்போது, சிறீலங்காவின் நாடாளுமன்ற தூதுக்குழு ஒன்று இந்தியாவிற்கான பயணம் ஒன்றினை மேற்கொள்வதற்கு இவர் அழைப்பு விடுத்ததாகவும் தெரியவருகின்றது. இவரது அழைப்பை ஏற்று அவசரமாக இந்தியா சென்ற மகிந்தவின் சகோதரரும் நாடாளுமன்ற சபாநாயகருமான சமல் ராஜபக்ச குழுவினருக்கு நேற்று திங்கட்கிழமை சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் இவர்களுக்கு வரவேற்பு அளித்து இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் திருமதி மீராகுமார் உரையாற்றியபோது, சமல் ராஜபக்ச என்ற பெயரை அவர் உச்சரித்தபோது நாடாளுமன்றத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. நாடாளுமன்றத்தைக் குழப்பும் வகையில் அங்கிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக்கழக (அ.தி.மு.க) நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக எழுந்து நின்று உரத்த குரலெழுப்பி தமது எதிர்ப்பை வெளியிட்டபோது, வரவேற்று பேசிய சபாநாயகரினால் உரையாற்ற முடியாத நிலை தோன்றியது. இதனால் கடும் சீற்றமடைந்த அந்தப் பெண் சபாநாயகரின் முகத்தில் கோபக்கனல் தெறித்துடன், அமைதியாக உட்காருமாறு பல தடவைகள் கோபத்துடன் கேட்டுக்கொண்டார். ஆனாலும் அங்கு அமைதி ஏற்படுவது உடனடியாக சாத்தியமாகவில்லை. இதனால், நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, தி.மு.கவில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினரான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, தமிழினத்துக்கு விரோதமான நடவடிக்கையில் இந்திய அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவதை உறுதிப்படுத்தும் வகையில் இந்திய நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் தொடங்கிய முதல்நாள் அன்றே சிங்கள நாடாளுமன்றப் பிரதிநிதிகளை விருந்தினர்களாக அனுமதித்து தமிழர்களின் உணர்வுகளை இந்திய அரசு அவமதித்துள்ளது.

சிங்கள நாடாளுமன்ற பேரவைத் தலைவர் சமல் இராஜபக்ச தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் கொண்ட குழு இந்திய நாடாளுமன்ற மக்களவையில் பார்வையாளர்களாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்று (01.08.2011) மக்களவை தொடங்கியதும் பேரவைத் தலைவர் திருமதி மீராகுமார், 'இலங்கையிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் நமது மக்களவை நடவடிக்கைகளை கவனிக்க வந்திருக்கிறார்கள்!' என்று அறிவிப்புச் செய்திருக்கிறார். இந்த நடவடிக்கை கோடானு கோடித் தமிழர்களைக் காயப்படுத்தியுள்ளது. மேலும் இந்தக் குழு தொடர்ந்து 5 நாட்கள் தங்கியிருந்து பல்வேறு இடங்களைச் சுற்றிப் பார்க்க இருப்பதாகவும் அதற்குரிய ஏற்பாடுகளை இந்திய அரசு செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

சிங்கள இராணுவத்தினருக்கு தமிழ்நாட்டிலேயே பயிற்சியளிப்பது, இந்திய அரசின் வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் தன்னுடைய பதவி ஓய்வுபெறும் நிலையில் ராஜபக்சேவோடு விருந்தில் பங்கேற்பது போன்ற நடவடிக்கைகள் இந்திய அரசுக்கும் சிங்கள அரசுக்கும் இடையேயான உறவில் உள்ள இணக்கத்தையும் நெருக்கத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இது தமிழர்களை அவமதிப்பதாக இருக்கும், தமிழர்களுக்கு எதிராக இந்திய அரசு செயல்படுகிறது என்ற கருத்து உருவாகும் என்கிற அச்சம் இல்லாமல் இந்திய ஆட்சியாளர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர்.

பதவி ஓய்வு பெற்றுவிட்ட நிலையிலும் ராஜபக்சேவோடு விருந்து உண்ட நிருபமா ராவை அமெரிக்காவுக்கான இந்தியத் தூதராக நியமித்திருப்பதை, தமிழினத்துக்கெதிராகச் செயல்பட்டதற்காகவே நிருபமா ராவுக்கு பாராட்டிப் பரிசு வழங்கியிருப்பதாகவே உணர முடிகிறது. இந்திய அரசின் இத்தகைய தமிழின விரோதப் போக்கை விடுதலைச் சிறுத்தைகள் மிக வன்மையாகக் கண்டிக்கிறது. சமல் ராஜபக்ச தலைமையிலான பிரதிநிதிகளை உடனடியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் எனவும் இந்திய அரசை விடுதலைச் சிறுத்தைகள் கேட்டுக்கொள்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இனப்படுகொலை செய்தவர்கள் என குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு இந்திய அரசு சிகப்புக் கம்பள வரவேற்பு கொடுத்து கௌரவித்து, மக்களவைக்கு அழைத்த இந்திய அரசைக் கண்டித்துள்ளார் பா.ம.க நிறுவனர் ராமதாஸ். அவர் இன்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில், இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த மகிந்த ராசபக்சவின் சகோதரரும் அந்நாட்டு நாடாளுமன்ற சபாநாயகமான சமல் ராசபக்ச தலைமையிலான நாடாளுமன்ற குழுவினர் இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் அழைக்கப்பட்டு கௌரவிக்கபட்டுள்ளனர்.

இலங்கையில் நடைபெற்ற போரின்போது 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை ஈவு இரக்கமின்றி கொன்று குவித்ததற்காக சிறீலங்கா அரசு மீது போர்க்குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அதை மதிக்காமல், போர்க் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட வேண்டியவர்களுக்கு நாடாளுமன்றத்தில் கௌரவம் அளித்த இந்தியாவின் செயல் கண்டிக்கத்தக்கது..

இனப்படுகொலையை நடத்திய ராசபக்சவையோ அல்லது அவரது நாட்டின் தலைவர்களையோ உலகின் எந்த நாடும் வரவேற்பதில்லை. சிறீலங்கா அதிபர் மகிந்த ராசபக்ச இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்ஃபார்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றச் சென்றபோது, அங்குள்ள தமிழர்களின் எதிர்ப்பை அடுத்து அவரை பல்கலைக்கழகத்திற்குள் அனுமதிக்க இங்கிலாந்து மறுத்துவிட்டது. அதுமட்டுமின்றி ராசபக்ச எவ்வளவோ முயன்றும் அவரை சந்திக்க இங்கிலாந்து தலைவர்கள் மறுத்துவிட்டனர். இதனால் அவர் பாதியிலேயே அங்கிருந்து வெளியேற நேரிட்டது. அதேபோல் ராசபக்ச அமெரிக்கா சென்றால் அவரைக் கைது செய்ய அந்நாட்டு நீதிமன்றமும், காவல் துறையும் காத்திக்கின்றன.

இலங்கை அரசுக்கு எதிராக உலக நாடுகள் இவ்வளவு கடுமையான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ள நிலையில், தமிழர்களின் நலன்களை பாதுகாக்க வேண்டிய தார்மீக கடமை கொண்ட இந்திய அரசு மட்டும் சிறீலங்கா அதிபரையும் அந்நாட்டு தலைவர்களையும் மாதத்திற்கு ஒமுறை சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்கிறது. இலங்கை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமிழகத்திற்கு வந்தபோது வானூர்தி நிலையத்திலேயே தடுத்து திருப்பி அனுப்பப்பட்டனர். ஆனால், சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் இந்திய அரசு வரவேற்று உபசரிப்பது தமிழகத்திலுள்ள 7 கோடி தமிழர்களின் உணர்வுகளை புண்படுத்துவதாக உள்ளது. ஈழத்தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் இந்திய அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் கொலைக்குற்றம் சாட்டப்பட்ட சிங்களத் தலைவர்களை இந்தியாவிற்கு அழைப்பதை நிறுத்திவிட்டு, ராசபக்ச உள்ளிட்டோர் மீது போர்க்குற்ற விசாரணையை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இங்கு தி.மு.க•உறுப்பினர்கள் என்ன செய்தார்கள் என்பது குறித்த செய்திகள் ஏவையும் வெளிவரவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு

# 'மகிந்த சிந்தனை'யில் தமிழினம் முற்றாக அழியக்கூடும்

தமிழர் தாயகத்தை சிங்களம் மிகவும் வேகமாக விழுங்கி வருகின்றது. தமிழர் தாயகத்தின் 70 வீதத்திற்கும் மேலான பகுதிகளை மீட்டெடுத்து தமது நிர்வாகத்திற்குள் கொண்டுவந்து, உலகமே வியந்துபார்த்த சிறந்தொரு ஆட்சியை நடத்திய விடுதலைப் புலிகளை சர்வதேச நாடுகள் சிலவற்றின் துணைகொண்டு முழுமையாக ஆக்கிரமித்தது சிறீலங்கா.

போர் நிறைவுற்றதாகக் கூறப்படும் கடந்த இரண்டு வருடங்களுக்குள் தமிழ் மக்கள் தங்கள் தாயகத்தின் பெரும் பகுதியை நிரந்தரமாகப் பறிகொடுத்துள்ளார்கள். தமிழர் தாயக நிலப்பரப்பின் பெரும் பகுதியை சிங்கள குடியேற்றவாசிகளும், புத்தர்சிலைகளும் ஆக்கிரமித்துவரும் நிலையில், இப்போது நாடாளுமன்றத்தில் தமிழர்களின் பலத்தையும் சிதைக்கும் நடவடிக்கையையும் மகிந்த அரசு துரிதமாக மேற்கொண்டுள்ளது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் மூலம், தமிழர் தாயகத்தில் சிங்கள அதிகார சக்திகளால் எந்தவொரு வெற்றியையும் எட்டமுடியாது என்ற வரலாற்றும் படாத்தை திரும்பவும் சிங்கள தேசத்திற்கு தமிழ் மக்கள் உணர்த்தியிருந்தார்கள். எனவே, எதிர்காலத்திலும் இதுவே தொடரும் என்பதை உணர்ந்துகொண்டுள்ள சிங்கள ஆளும்வர்க்கம், அதனை இப்போதே தடுக்கும் வகையில் யாழ்குடாவிற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அதனூடாக தமிழர்களின் அரசியல் பலத்தையும் இல்லாமல் செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, யாழ்குடாவிற்கான நாடாளுமன்ற ஆசனங்கள் 1989ம் ஆண்டு தேர்தலின்போது 11 ஆக இருந்தன. 1994ம் ஆண்டு தேர்தலின்போது அந்த எண்ணிக்கை 10 ஆகக் குறைக்கப்பட்டது. பின்னர் 2000ம் ஆண்டு தேர்தலின்போது 9 ஆக குறைக்கப்பட்டிருந்தது. இப்போது இந்த ஒன்பதில் இருந்து ஐந்தாக குறைக்கப்பதன் ஊடாக கிடைக்கும் நான்கு ஆசனங்களையும் தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு வழங்குவதன் ஊடாக நாடாளுமன்றத்தில் சிங்களத்தின் பெரும்பான்மையை அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள அமைச்சுக்களின் செயலாளர் பதவிகள் உட்பட வடக்கு மாகாணத்தின் அரச அலுவலகங்களிலும், அரசு சார்ந்த நிறுவனங்களிலும் சிங்களவர்களுக்கே அதுவும் இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றவர்களுக்கும், சிங்கள இனவாத சிந்தனைகள் அதிகம் கொண்ட அதிகாரிகளுக்குமே முக்கிய இடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கு அடுத்த நிலைகளில் மகிந்த சிந்தனைக்கு சாமரம் வீசக்கூடிய தமிழர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். எனவே, சிங்களம் மேற்கொள்ளும் தமிழின ஆக்கிரமிப்புகளுக்கு ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கக்கூடியவர்களே அதிகாரவர்க்கத்தின் ஆசனங்களில் அமரமுடியும்.

இதனை எதிர்ப்பவர்களும், எதிரான கருத்துக்களை பரப்புபவர்களும் மகிந்த சிந்தனையாளர்களால் தாக்கப்படக்கூடும் என்பதை உதயன் செய்தி ஆசிரியர் மீதான தாக்குதல் உறுதிப்படுத்துகின்றது.

அத்துடன், தமிழர் தாயகத்தில் நடைபெறும் சாதாரண பொது மக்களின் நிகழ்வுகள் கூட சிங்களத் தலைமைகளின் கீழேயே நடைபெறும் சூழ்நிலைகள் அங்கு உருவாக்கப்பட்டுள்ளன. சாதாரண பாடசாலை நிகழ்வுகளில் கூட சிங்கள இராணுவத் தலைமைகளோ அல்லது சிங்கள அரசியல் சார்ந்த தலைமைகளோ அழைக்கப்பட்டு அவர்களின் தலைமையிலேயே நடைபெறவேண்டும் என்ற எழுதாத சட்டவிதிகளும் அங்கு இப்போது நடைமுறையாக்கப்பட்டுள்ளன.

தமிழர்கள் வெறும் பார்வையாளர்களாகவும், சிங்களம் சொல்வதைக் கேட்டு நடக்கும் அடிமைகளாகவுமே அங்கு மாற்றப்பட்டு வருகின்றனர். இந்த உண்மையை அறிந்துகொண்ட சர்வதேச செய்தி ஊடகமான ரொய்ட்டர் இலங்கையர்களின் வாழ்க்கையில் சிங்களம் தமிழ் என்ற இனப்பாகுபாடு தொடர்ந்தும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளதுடன், போரின் பின்னர் தமிழர்கள் அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள் என்றும் தனது செய்தி ஆய்வொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் வடக்கில் ரொய்ட்டர் செய்தியாளர் நேரடியாகப் பயணம் செய்து இதனை அவதானித்து எழுதியுள்ளார்.

எனவே, மகிந்த சிந்தனை இவ்வாறு தொடர அனுமதித்தால் எதிர்காலத்தில் தமிழர் தாயகத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான அடையாளமே இல்லாமல்போய்விடும் என்பதை தமிழ் மக்களை ஆள நினைக்கும் 'தமிழ்க் கட்சி' உணர்ந்துகொள்ள வேண்டும்.

# இறுதிக்கட்டத்தில் சிறீலங்கா நடத்திய கொடூரம்

## நெஞ்சை உறையவைக்கும் உண்மைகளை அம்பலப்படுத்திய சனல்-4

இறுதிப் போரில் சரணடைந்த போராளிகளைச் சுட்டுக்கொல்லும்படி 58வது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் சவேந்திர சில்வாவுக்குப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவே உத்தரவிட்டார் என்று சிறீலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் சனல்-4 தொலைக்காட்சிக்கு அளித்த வாக்குமூலத்தை சிறீலங்கா அரசும் இராணுவமும் பாதுகாப்புச் செயலரும் வழமைபோன்று அடியோடு மறுத்துள்ளனர். இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் குறித்து சிறீலங்காவின் கொலைக்களம் என்ற ஆவணப் படத்தை வெளியிட்டுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சனல்-4 தொலைக்காட்சியே இப்போது மீண்டும் இன்னொரு ஆதாரத்தை வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் வைத்து இராணுவ அதிகாரி ஒருவரிடமும் சிப்பாய் ஒருவரிடமும் பெறப்பட்டதாக சனல்-4 கூறும் வாக்குமூலங்கள் அடங்கிய 13 நிமிட செய்தித் தொகுப்பு ஒன்று கடந்த 27ம் திகதி ஒளி பரப்பப்பட்டது.

அதில், விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் சரணடைந்த போது அவர்களைச் சுட்டுக் கொல்லும்படி கோத்தபாய ராஜபக்சவே பிரிகேடியர் (இப்போது மேஜர் ஜெனரல்) சவேந்திர சில்வாவுக்கு உத்தரவிட்டார் என்று இராணுவ அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார். சிறீலங்கா அரசு இந்தக் குற்றச்சாட்டை அடியோடு மறுத்துள்ளது. சனல் 4 வெளியிட்ட சிறீலங்காவின் யுத்தக் குற்றங்கள் தொடர்பான காட்சிகளையும், சிறீலங்கா நிராகரிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். சனல்-4 யுத்தக்குற்ற ஆவணப் படம் தொடர்பாகப் பதில் அளிக்காவிட்டாலும் அரசு உலக நாடுகளுக்கு இது தொடர்பாக விளக்கமளிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. சிறீலங்கா அரசு மீது யுத்தக்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் நடவடிக்கைகள் உலக நாடுகளில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முகம் கொடுக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம் என்றார் அமைச்சர்.

சிறீலங்காவின் போர்க் குற்றம் எனக் கூறிக் கொண்டு பிரபல்யம் அடையும் அற்ப ஆசையில் சனல்-4 தொலைக்காட்சி மீண்டும் போலியான 'வீடியோ'க்களை தயாரித்து ஒளிபரப்பி வருகிறது என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார். இது மிகவும் கீழ்த்தரமான செயல் என்றும் அவர் கூறியுள்ளார். சனல்-4 வெளியிட்டுள்ள புதிய காட்சிகள் எந்த வகையிலும் உண்மையானதல்ல, போலியானது என்று சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும், இறுதிப் போரில் 58வது பிரிவில் பங்கெடுத்தார் என்று சனல்-4 அறிமுகப்படுத்தும் இராணுவ அதிகாரியை பெர்னாண்டோ என்ற பெயரால் சுட்டுகிறது.

அவர் அளித்துள்ள சாட்சியில் தெரிவித்துள்ளவை பின்வருமாறு: அவர்களுடைய இதயங்களில் மனித உணர்வு இருக்கவில்லை. அவர்களை விலங்குகள் போன்று தான் உணர்ந்தேன். அவர்கள் பொதுமக்கள் மீது கண்டபடி சுட்டார்கள். பொதுமக்களைக் குத்தினார்கள். அவர்களின் நாக்குகளை அறுத்தார்கள். பெண்களின் மார்பகங்களை வெட்டினார்கள். இவற்றையெல்லாம் நான் எனது கண்களால் பார்த்தேன். சிறுவர்கள் இறந்து கிடந்ததைக் கண்டேன். பெருமளவு சிறுவர்கள் இறந்து கிடந்தார்கள். அவர்கள் அப்பாவிகள். பெருமளவு முதியவர்களும் கொல்லப்பட்டுக் கிடந்தனர். நீரேரியைக் கடந்து வந்தபோது பெண்கள், சிறுவர்கள் என்று பொது மக்கள் மீது படையினர் சுட்டார்கள். அவர்கள் புலிப்போராளிகள் அல்ல, சாதாரண பொதுமக்கள். சாதாரண குடிமக்கள் கொல்லப்பட்டதை எனது கண்களால் பார்த்தேன். தாயும் மூன்று குழந்தைகளுமாக ஒரு சிறிய குடும்பம் தப்பிச் சென்று கொண்டிருந்ததை நான் கண்டேன். அவர்களில் ஒரு சிறுவன் காலில் சூடுபட்டுக் கீழே விழுந்தார். அந்தக் குழந்தையை நான் இந்தக் கைகளால் தூக்கினேன். தாயார் கதறி அழுதார். அந்தத் துன்பத்தின் மத்தியிலும் என்னை நன்றியுணர்வோடு பார்த்தார்.

ஒரு நாள் ஆறு படையினர் தமிழ்ப் பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வு செய்வதை எனது கண்களால் கண்டேன். ஒரு தமிழ் பெண்ணை வன்புணர்வு செய்ய வேண்டுமானால் அவளை அவர்களால் அடிக்க முடியும். அவளது பெற்றோர் அதைத் தடுக்க முனைந்தால் அவர்களை அடிக்கவோ கொல்லவோ முடியும்.

அங்கு அவர்களின் ஆட்சிதான் இருந்தது. போர் முனையில் இருந்த படையினரின் இதயங்கள் கற்களாகிப் போயிருந்தன.

இரத்தம், கொலைகள், மரணம் என்று பார்த்துப் பார்த்து அவர்கள் மனித உணர்வுகளை இழந்து விட்டார்கள். இரத்தக் காட்டேரிகள் போன்று மாறி விட்டார்கள். தலை மற்றும் பிற உடற்பாகங்கள் இல்லாத பெண்களின் உடல்களை நான் கண்டேன். இறந்து கிடந்த தாய் மற்றும் குழந்தையின் சடலங்களையும் பார்த்தேன். ஆனால் குழுந்தையின் தலை இருக்கவில்லை. போரின் இறுதிக் கட்டத்தில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்களும், பெண்களும்,



ஆண்களும் கொல்லப்பட்டனர். புதுமாத்தளனில் மட்டும் 1500ற்கும் அதிகமான பொது மக்கள் இறந்து கிடந்ததை நான் கண்டேன்.

அவை அனைத்தையும் அவர்களால் அடக்கம் செய்ய முடியவில்லை. அவற்றை ஒன்றாக அடுக்கி புல்டோசர் மூலம் மண் பரப்பி ஒரு அணைபோல அமைத்து அவை புதைக்கப்பட்டன. அதுபோல 50,000ற்கும் அதிகமான மக்களுக்கு நடந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். போரின் இறுதிக் கட்டத்தில் நான் கடைசியாக நுழைந்த போது புதுமாத்தளன் பகுதி முழுவதும் சடலங்களாக நிறைந்திருந்தது. அவற்றை அழிப்பதற்கு அவர்கள் பெரும் வாகனம் ஒன்றைப் பெற்றனர். சடலங்களின் மீது மண்ணைப் போட்டு நிரப்பினார்கள்.

சில இடங்களுக்குச் செல்ல முடியாதளவுக்கு அழிந்துபோன உடல்களில் இருந்து துர்நாற்றம் வீசும். அவர்கள் வெறும் அப்பாவி குடிமக்கள். போரிடும் தரப்பினருடன் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள். அவர்களின் இறப்புக்காகத்தான் அழுகிறேன். அதனால் தான் இப்போது அதை வெளியே சொல்ல முடிவு செய்துள்ளேன். 2009 மே மாதம் கடற்கரையின் ஒரு சிறு துண்டுப் பகுதிக்குள் நடந்த கொடூரமான குற்றங்கள் குறித்து உலகம் தெரிந்துகொள்ள வேண்டும். நான் நன்றாக இருக்கிறேன். நான் பல சடலங்களைப் பார்த்துள்ளேன். காயமடைந்தவர்கள் பலரைப் பார்த்துள்ளேன். பல வன்புணர்வுக் காட்சிகளைக் கண்டுள்ளேன். அவற்றையெல்லாம் எனது இதயத்தை திறந்து வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவே நான் நன்றாக இருக்கிறேன். இப்படி அவர் மேலும் கூறினார்.

சனல்-4 தொலைக்காட்சிக்குச் சாட்சியமளித்த மற்றொரு சிப்பாய் தெரிவிக்கையில், இன்னும் ஒரு சிறு நிலப்பரப்புத் தான் பிடிக்கப்பட இருக்கிறது. என்ன தேவையோ அதைச் செய்து விசயத்தை முடியுங்கள். உங்கள் நல்ல செய்திக்காகக் காத்திருக்கிறேன் என்று கோத்தபாய ராஜபக்ச தன்னிடம் கூறினார் என பிரிகேடியர் சவேந்திர சில்வா எங்களிடம் குறிப்பிட்டார் என்று தெரிவித்தார். அவரது இந்த வார்த்தைகள் படையினரால் படுகொலைக்கான அனுமதியாக எடுத்துக்கொள்ளப்பட்டன என்றும் அந்தச் சிப்பாய் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்வியினை தொடரமுடியாத கிளிநொச்சி மாணவர்களின் அவலம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் சிறீலங்காவின் இனப்படுகொலையில் இருந்து உயிர்தப்பி முகாம்களில் அடைக்கப்பட்டு, மீள்குடியேறியுள்ள மக்களில் குடும்பத்தலைவர் அல்லது தாயினை இழந்த குடும்பங்களிலுள்ள மாணவர்கள் அதிகளவு பாடசாலைகளுக்கு செல்வதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. குடும்பச்சுமை காரணமாக மாணவர்களை வேலைக்கு அனுப்பும் நிலையில் குடும்ப வறுமை காணப்படுவதால் பாடசாலைகளில் இருந்து மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிறு வயதில் மாணவர்கள் வேலைக்கு அமர்த்தப்படும் செயற்பாடுகள் கிளிநொச்சியில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மாணவர்கள் இருவர் காணாமல் போயுள்ளார்கள்

யாழ்ப்பாணம் வைத்திஸ்வரக் கல்லூரியில் தரம் 9 கல்வி கற்கும் மாணவர்கள் இருவர் கடந்த 26ம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக பெற்றோர்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள். இம் மாணவர்கள் இருவரும் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்து பாடசாலை ஒப்படை ஒன்று இருப்பதாகவும் அதற்கு தாங்கள் களவேலை செய்யவேண்டும் என்று கூறிவிட்டு 26ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு வெளியேறிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவர்கள் இருவரும் இன்றுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மகிந்த வசமாகும் 500 கோடி ரூபா!

பிரான்ஸ் அரசின் உதவியுடன் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் பாரிய நீர் விநியோகத் திட்டத்தின் முழுப் பொறுப்பையும் சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஏற்றுள்ளார். நீர் முகாமைத்துவ நீர் விநியோக, வடிகாலமைப்பு அமைப்பு அமைச்சராக தினேஷ் குணேவர்தன பதவி வகிக்கும் நிலையிலே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டப் பொறுப்பை தன்வசம் கையகப்படுத்தியுள்ளார். இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் தினேஷ் குணேவர்தனவிடம் கலந்தாலோசியாமலேயே அவர் உடனடியாகச் சமர்ப்பித்து அமைச்சரவை ஒப்புதலையும் பெற்றுள்ளார். குறிப்பிட்ட இந்தத் திட்டத்துக்குப் பிரான்ஸ் அரசு 46 மில்லியன் அமெரிக்க டொலர்களை (500 கோடி 28 இலட்சம் ரூபா) கடனாக சிறீலங்கா அரசுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சீனா செல்ல மகிந்த திட்டம்!

சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சீனாவிற்கான பயணம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவின் பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் சீனா முதலீடுகளைச் செய்துள்ளதுடன் சிறீலங்காவுக்கு கடன் வழங்கும் நாடுகளில் முதன்மை இடத்தையும் சீனாவே வகித்து வருகிற நிலையில் சீனாவுடனான உறவினை பலப்படுத்தும் நோக்கில் மகிந்த ராஜபக்ச சீனாவிற்கு பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக கருதப்படுகின்றது.

### வெள்ளை நிற நாகம் பிடிபட்டது



ஐந்து அடி நீளம் கொண்ட அபூர்வமான வெள்ளை நிற நாகபாம்பு ஒன்று யாழ். பருத்தித்துறையில் உள்ள ஒருவரின் வீட்டின் கோழிக்கூட்டில் பிடிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை, வியாபாரி மூலை, இராவாலை பகுதியில் சி.இராதாகிருஸ்ணன் என்பவரின் வீட்டிலுள்ள கோழிக்கூட்டில் இந்த வெள்ளைநிற நாகம் பிடிபட்டது. தற்போது இந்தப் பாம்பைப் பார்வையிடுவதற்காக பிரதேச மக்கள் ஆர்வத்துடன் அங்கு கூடிய வண்ணம் உள்ளனர்.

### காணாமல் போன இராணுவ அதிகாரி சடலமாக மீட்பு!

கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்ததாகக் கூறப்படும் சிறீலங்கா இராணுவத்தின் லெப்டினன் பதவிநிலை வகித்த அதிகாரி ஒருவரின் சடலம், இரகசிய காவல்துறையினரால் கல்கமுவ பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது. நிலந்த அல்விஸ் என்ற இராணுவ அதிகாரியின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர். இருப்பினும் சடலத்துக்குரிய நபரை உறுதி செய்வதற்காக அவரது நெருங்கிய உறவினரது இரத்தம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 2004ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி அஹங்கம பிரதேசத்திலிருந்து சைக்கிளொன்றை கொள்வனவு செய்வதற்காக குருநாகல் பிரதேசத்துக்கு சென்ற இவர் காணாமல் போயிருந்த நிலையில் கடந்த 30ம் திகதி சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

### ஐ.நா அலுவலகங்களுக்கு மீண்டும் அச்சுறுத்தல்

சிறீலங்காவில் உள்ள ஐக்கியநாடுகள் சபை அலுவலகத்திற்கும்

08ம் பக்கம் பார்க்க




– கந்தரதன்

# வடக்கில் சூறையாடப்படும் தமிழ்ப் பெரும்பான்மை!

தமிழர் தாயகப் பகுதிகளில் சிங்களத்தின் ஆதிக்கம் அதிகரித்துவருவதாக இப்பகுதியில் தொடர்ந்து நாம் பார்த்து வருகின்றோம். தற்போது தமிழர் தாயகப் பகுதிகளில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவுகளால் தமிழ் மக்களிடம் உதைவாங்கிய சிங்களம் அங்கு தமிழ் மக்களின் பெரும்பான்மையை சூறையாடும் நடவடிக்கையில் மேலும் இறங்கியுள்ளது.

இதற்குத் தமிழ் அதிகாரிகளே துணைபோயுள்ளமை கவலைக்குரியவிடயம். வெளியுலகை ஏமாற்றுவதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளுக்கு சிங்கள இனவெறி அரசு காலம்காலமாகத் தமிழ் மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தி வருகின்றது. இது நிதர்சனமுமாகும்.

அந்தவகையில், யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட 2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வில் 3 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 5 ஆயிரம் வாக்காளர்கள் வரையில் பதிவு செய்யப்படாமல் கிராம அலுவலர்கள் மற்றும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் விடப்பட்டுள்ளனர்.

3 கிராம சேவகர் பிரிவுகளில் அவ்வாறான நடைமுறை பின்பற்றப்படவில்லை. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு, தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு மற்றும் அராலிப் பகுதி ஆகியவற்றிலேயே கிராமசேவகர்கள் அறிவித்தல்களை உரியமுறையில் பின்பற்றவில்லை. இதனால் 5 ஆயிரம் வாக்காளர்கள் வரையில் பதிவு செய்யப்படாமல் விடுபட்டுள்ளனர்.

இவ்வாறான தவறுகளினால் 2010ம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பலரது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. அத்துடன் சம்பந்தப்பட்ட பிரதேச மக்களும் தமது பெயர்கள் நீக்கப்பட்டமை தொடர்பில் முறைப்பாட்டுக் காலத்தில் எதுவித முறைப்பாடுகளும் செய்யவில்லை.

இதனால் இவர்கள் 2010ம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்படவில்லை என்பது அண்மைய தேர்தலின்போது தெரியவந்துள்ளது. இது திட்டமிடப்பட்ட சதியாக இருக்கலாம் என் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, யாழ மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு 05ஆக குறைக்கப்படலாமென தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது.

2009ம் ஆண்டு தொடக்கம் 2010ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் யாழில் மக்கள் தொகையில் 320,000 வீழ்ச்சி ஏற்பட்டமையே இதற்குக் காரணமெனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு குறைக்கப்படும் 04 ஆசனங்களும் பதுளை, இரத்தினபுரி, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய சிங்களப் பகுதிகளுக்கு ஒதுக்கப்படலாமென தெரியவருகிறது.

1989ம் ஆண்டு தேர்தலின்போது யாழ். மாவட்டத்திற்கு 11 ஆசனங்கள் இருந்தன. 1994ம் ஆண்டு தேர்தலின்போது அந்த எண்ணிக்கை 10ஆகவும் 2000ம் ஆண்டு தேர்தலின்போது 09ஆகவும் குறைக்கப்பட்டிருந்தது. இனிவரும் தேர்தலின்போது யாழ் மாவட்டத்திற்கு ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களே தெரிவுசெய்யப்படுவர்.

முன்னர் யாழ். மாவட்டத்தில் 816,005 வாக்காளர்கள் இருந்தனர். யுத்தம் காரணமாக பெரும் எண்ணிக்கையிலானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் 2010ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவின்படி யாழ். மாவட்ட வாக்காளர் எண்ணிக்கையானது 484,791ஆக குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாகவே நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்படவுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இது குறித்து பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வடக்கு மாகாண சபையில் உள்ள அமைச்சுக்களின் செயலாளர் பதவிகள் உட்பட வடக்கு மாகாணத்தின் முக்கிய பதவிகளில் இலங்கை நிர்வாக சேவையில் சித்தியடைந்த சிங்கள இளம் அதிகாரிகளை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு மாகாணத்தில் சிங்கள அதிகாரிகளை நியமிக்கும் திட்டத்தின் அடிப்படையிலேயே இலங்கை நிர்வாக சேவையில் சித்தியடைந்த சிங்கள இளைஞர், யுவதிகளுக்கு யாழ்.மாவட்டத்தில், முன் அனுபவப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் பயிற்சி பெற்று வருவதுடன், வெளிக்

**வடக்கு மாகாண சபையில் கடமையாற்றிய தமிழர்களில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களின் சேவைக்கான ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டு அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படவுள்ளனர்.**

களங்களுக்கும் சென்று வடபகுதியின் நிர்வாக அமைப்புக்களைத் தெரிந்துவரு வதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறே, வடக்கு மாகாண சபையில் கடமையாற்றிய தமிழர்களில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களின் சேவைக்கான ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டு அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இவ்வாறு 60 வயதிற்கு மேற்பட்டவரின் இடங்களுக்கு சிங்களவர்கள் நியமிக்கப்படலாம் எனவும்– சுகாதார அமைச்சின் செயலாளராக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் எனவும் – தெரியவருகிறது.

இதேவேளை சிங்கள அதிகாரிகள் வடபகுதியில்

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரமான்




தந்திரிகளின் மறுமுகம்

17

# தமிழீழமும் அமெரிக்காவின் மத்தியத்துவமும்


**"நான் பிடிபட முதல் இந்த நாடு கடந்த அரசை உருவாக்கி இவர்களிடம் குடுத்திட்டு... குடுத்திருந்தேன்." – கே.பி**

கே.பி கைது செய்யப்பட்டாரா?

அல்லது

தானாகவே சிங்கள அரசிடம் சரணடைந்தாரா?

என்ற சர்ச்சைக்கு ஐயம்திரிபு இன்றி தெளிவான விளக்கமொன்றை கடந்த வாரம் வெளிவந்த வானொலிச் செவ்வியொன்றில் கேபி வழங்கியுள்ளார். 'நான் கூறுவது உண்மை, உண்மையைத் தவிர வேறேதுமில்லை'



என்று எத்தனை தடவைகள் கே.பி கையில் கற்பூரம் எரித்துக் காதில் பூச்சுற்ற முற்பட்டாலும்கூட ஈற்றில் தனது வாயில் இருந்து உண்மை உதிர்வதை அவரால் தடுக்க முடியவில்லை.

தான் சிங்கள அரசிடம் சரணடையவில்லை என்று மீண்டும் மீண்டும் சத்தியம் செய்துவந்த கே.பி, புலம்பெயர் தேசங்களில் நிலவும் 'ஒற்றுமையின்மை' பற்றித் தனது வானொலிச் செவ்வியில் கருத்துக் கூறும் பொழுதே வாய்தடுமாறி உண்மையை உதிர்த்துள்ளார். ஆனாலும் வாய்தடுமாறிய அத்தருணத்திலும் கே.பி வேகமாக சுதாரித்துக் கொண்டுள்ளார். அதாவது 'நாடு கடந்த அரசை உருவாக்கிக் 'குடுத்திட்டு' நான் சிங்கள அரசிடம் சரணடைந்தேன்' என்று வாய்தடுமாறி உண்மையை உதிர்க்கவிருந்த கே.பி, அதேவேகத்தில் தனது தடுமாற்றத்தை சரிசெய்து 'குடுத்திருந்தேன்' என்று வார்த்தைகளை மாற்றிக் கொண்டுள்ளார்.

கே.பி கைது செய்யப்படவில்லை, அவர் அரங்கேற்றியது ஓர் கைது நாடகம் என்று ஏறத்தாழ கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஈழமுரசும், ஏனைய தமிழ்த் தேசிய ஊடகங்களும் வெளியிட்ட உண்மையை உறுதிசெய்யும் வகையிலேயே கே.பியின் அண்மைய ஒப்புதல் வாக்குமூலம் அமைந்துள்ளது. கே.பியின் இந்த வாக்குமூலம், அவரது கைது நாடகம் நிகழ்ந்தேறுவதற்கு முன்னர் அவரால் உருவாக்கப்பட்ட உருத்திரகுமாரன் – சர்வே – மனோ தலைமையிலான நாடு கடந்த அரசாங்கத்தினதும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் என்ற பெயரில் இயங்கும் சுபன் – ரெஜி தலைமையிலான செயற்குழுவினதும் உள்நோக்கங்களை மீண்டுமொரு தடவை பட்டவர்த்தனமாக்கியுள்ளது.

இவை ஒருபுறமிருக்க போர்நிறுத்தத்திற்கான நிபந்தனையாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவை மையப்படுத்தி 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இணைத் தலைமை நாடுகளும், இந்தியாவும் வெளியிட்ட அறிவிப்புக்களின் சூட்சுமத்தையும், அதற்கு காலாக இருந்த உருத்திரகுமாரனின் நடவடிக்கைகளையும் எமது கடந்த பத்தியில் வெளிக்கொணர்ந்திருந்தோம். இதன் அர்த்தபரிமாணங்களை வாசகர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு 2008ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்காவில் மூன்று வெவ்வேறு தளங்களில் உருத்திரகுமாரனும், அவரது குழுவினரும் அரங்கேற்றிய தமிழீழ தேசிய சிதைப்பு நடவடிக்கைகளை இங்கு வெளிக்கொணர்வது பொருத்தமாக இருக்கும்.

இதில் முதலாவது தளம் உருத்திரகுமாரனுக்கும், இந்திய உளவுப் பிரிவினருக்கும் இடையில் தொடர்பாளர்களாக விளங்கிய அவரது குழுவினராலும் கையாளப்பட்டது.

இதன் இரண்டாவது தளம் உருத்திரகுமாரனால் நேரடியாகவும்,

மூன்றாவது தளம் உருத்திரகுமாரனின் வழிகாட்டலில் இயங்கும் அவரது உதவியாளரான வழுதி (பொபி என்றழைக்கப்படும் பரந்தாமன்) அவர்களாலும் கையாளப்பட்டது.


இவற்றில் 2008 ஆம் ஆண்டுக்கான கறுப்பு யூலை நினைவு நிகழ்வுகளை அமெரிக்காவில் உருத்திரகுமாரனின் வழிகாட்டலில் இயங்கும் அவரது குழுவின் உப அமைப்பான போர்ல் (லங்காவில் சமத்துவத்திற்கும், புனர்வாழ்வுக்குமான மக்கள்) என்ற அமைப்பு ஏற்றிருந்தது. இவ் உப அமைப்புடன் இணைந்து கறுப்பு யூலை நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் ஏ.பி.எஸ்.எல் (சிறீலங்காவில் சமாதானத்திற்கான அமெரிக்கர்கள்) என்ற உருத்திரகுமாரன் குழுவின் இன்னொரு உப அமைப்பு ஈடுபட்டிருந்தது. 'லங்கா', 'சிறீலங்கா' ஆகிய பெயர்களை கொண்ட இவ்விரு உப அமைப்புக்களின் தலைவர்கள் தற்பொழுது உருத்திரகுமாரனின் நாடு கடந்த அரசாங்கத்தின் உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் பதவி வகித்து வருகின்றனர்.

தமிழீழத் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை ஆகிய மூன்று இலட்சியக் கோட்பாடுகளை முன்னிறுத்தி கறுப்பு யூலை நிகழ்வை முன்னெடுக்குமாறு இவர்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கிய வரும், தற்பொழுது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்குபவருமான 'சிங்கத்தின் குகையில் நின்று சீறிய' மாமனிதர் ஒருவரின் புதல்வரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதேபோன்ற கோரிக்கை அமெரிக்காவில் வசிக்கும் தமிழீழ தேசிய செயற்பாட்டாளர்களாலும் முன்வைக்கப்பட்டது.

எனினும் இதனை நிராகரித்த போர்ல் அமைப்பினர், தமிழீழத்தைப் பற்றியோ, அன்றி தன்னாட்சியுரிமை பற்றியோ தாங்கள் எந்தவொரு முழக்கங்களையும் எழுப்பப் போவதில்லை என்றும், மனித உரிமைகளை மையப்படுத்தியே கறுப்பு யூலை நினைவு நிகழ்வு முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தனர். அத்துடன் இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியுடன் வருபவர்களுக்கு இடமளிப்பதில்லை என்று இவர்களால் முடிவு செய்யப்பட்டது. இதுபற்றி 22.04.2008 அன்று தமது சகாக்களுக்கு ஆங்கிலத்தில் அனுப்பிய செய்தியில் பின்வருமாறு உருத்திரகுமாரன் குழுவை சேர்ந்த செந்தில் என்பவர் குறிப்பிட்டிருந்தார்:

'...இந்தப் பேரணியில் கடும்போக்குத் தமிழ்த் தேசியவாதிகளின் கை ஓங்குவதற்கு நாம் இடமளிக்கக்கூடாது. இவர்களை நாம் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியுடன் பேரணியில் கலந்து கொள்பவர்களை சிறீலங்கா அரசாங்கத்தின் ஆட்களாகவே



நாங்கள் பார்க்க வேண்டும். பேரணியைக் குழப்புவதற்காகவே புலிக்கொடியுடனும், புலிகளின் படங்களுடனும் இவர்கள் வருகின்றார்கள். இவர்களின் இந்த நடவடிக்கை போர்ல் அமைப்பையும், ஏனைய அமெரிக்கத் தமிழர்களையும் வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்பொன்றுடன் தொடர்புபடுத்திவிடும். இதனால் எந்தவொரு அரசியல்வாதியும் எங்களுடன் கதைக்க மாட்டார்கள்.'

இதன்படி 24.07.2008 அன்று அமெரிக்காவில் உள்ள றசெல் செனெற் பூங்காவில் நடைபெற்ற கறுப்பு யூலை நினைவு நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடிக்கு முற்றுமுழுதாக தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் அமெரிக்க தேசியக் கொடியையும், மனித உரிமைகள் பற்றிய பதாகைகளையும் மட்டுமே தாங்கியிருந்தனர்.

இவ்விடத்தில் 2008ஆம் ஆண்டு யூன் மாத நடுப்பகுதியில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் உருத்திரகுமாரன் குழுவினர் அரங்கேற்றிய பிறிதொரு தமிழீழ தேசிய சிதைப்பு நடவடிக்கை பற்றியும் நாம் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். உருத்திரகுமாரன் குழுவின் உப அமைப்பான ஏ.பி.எஸ்.எல் அமைப்பின் உறுப்பினர் ஒருவருக்கும், மூத்த அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் செயலாளருக்கும் இடையில் 2008 யூன் மாத நடுப்பகுதியில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இச்சந்திப்பில் ஏ.பி.எஸ்.எல் அமைப்பின் உறுப்பினருடன் லிசா ஹன்சன் என்ற அமெரிக்கப் பெண்மணியும் கலந்து கொண்டிருந்தார். இவர் ஒரு தொழில்ரீதியான பரப்புரையாளர். இவருக்கு உருத்திரகுமாரன் குழுவினரால் மாதாந்த கட்டணமாக கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது.

**இதுபற்றி 22.04.2008 அன்று தமது சகாக்களுக்கு ஆங்கிலத்தில் அனுப்பிய செய்தியில் பின்வருமாறு உருத்திரகுமாரன் குழுவை சேர்ந்த செந்தில் என்பவர் குறிப்பிட்டிருந்தார்:**

**"...இந்தப் பேரணியில் கடும்போக்குத் தமிழ்த் தேசியவாதிகளின் கை ஓங்குவதற்கு நாம் இடமளிக்கக்கூடாது. இவர்களை நாம் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியுடன் பேரணியில் கலந்து கொள்பவர்களை சிறீலங்கா அரசாங்கத்தின் ஆட்களாகவே நாங்கள் பார்க்க வேண்டும். பேரணியைக் குழப்புவதற்காகவே புலிக்கொடியுடனும், புலிகளின் படங்களுடனும் இவர்கள் வருகின்றார்கள்.**

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் துணை அலுவலகங்களுக்கும் மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சிறீலங்காவிற்கான ஐ.நாபிரதிநிதி தெரிவித்துள்ளார். கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலக அதிகாரியால் அதன் தலைமை அலுவலகத்திற்கு இந்ததகவல் வழங்கப்பட்டுள்ளது. மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் ஐ.நா அமைப்பிற்கு ஒத்துழைப்பு வழற்குமாறு சிறீலங்கா அரசை ஐ.நா தலைமையகம் கேட்டுக்கொள்ளவேண்டும் என முறையிடப்பட்டுள்ளது. ஐ.நா நிபுணர்குழு அறிக்கை மற்றும் சனல்-4 தொலைக்காட்சியின் புதிய காணொளி வெளியிட்டுள்ளதை தொடர்ந்து சிறீலங்காவில் உள்ள ஐ.நா அலுவலகங்களுக்கு மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சக சிப்பாயால் அடித்துக் கொல்லப்பட்டார் மகன் – தாய் சந்தேகம்

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் உயிரிழந்ததாகக் கூறப்படும் மதுசங்க என்ற சிறீலங்காப் படைச் சிப்பாய் ஒருவரின் உடலம் புத்தளம் மாவட்டத்தில் நாத்தாண்டிய தும்மோதர என்ற இடத்தில் புதைக்கப்



பட்டிருந்த நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கடந்த 27ம் திகதி மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. தனது மகனின் மரணத்தில் ஏற்பட்ட சந்தேகம் காரணமாக அனைவருக்கும் முறையிட்டு பலன் எதுவும் கிடைக்கவில்லை என உயிரிழந்த சிப்பாயின் தாய் தெரிவித்துள்ளார். உயிரிழந்த சிப்பாயின் உடலில் குறிப்பாக தலை கழுத்து வயிற்றுப் பகுதிகளில் பெருமளவு அடிகாயங்கள் இருப்பதாகவும் எலும்பு முறிவுகள் காணப்படுவதாகவும் வவுனியா வைத்தியசாலையிலிருந்து கிடைத்த பிரேதப் பரிசோதனை அறிக்கை மூலம் தெரிய வந்ததன் பின்னணியிலேயே முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றது. தனது மகன் சக சிப்பாயினால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளதாக சந்தேகிப்பதாகவே உயிரிழந்த சிப்பாயின் தாய் தெரிவித்துள்ளார். உயிராபத்தை ஏற்படுத்தும் காயங்கள் இருந்த நிலையில் ஐந்து மணிநேரம் கழித்தே சிப்பாய் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவரின் சகோதரர் முறையிட்டுள்ளார். தோண்டியெடுக்கப்பட்ட சடலம் மேலதிக பரிசோதனைகளுக்காக சிலாபம் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறீலங்காவின் சில்லறைப் பிரச்சினை!

மத வழிபாட்டு தலங்களிலுள்ள உண்டியல்கள் மற்றும் வங்கிகளால் வழங்கப்படும் உண்டியல்களில் நாணயக் குற்றிகள் சிக்கிக் கொண்டிருப்பதால் நாட்டில் நாணய குற்றிகளுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக சிறீலங்கா மத்திய வங்கி அறிவித்துள்ளது. இவ்வாறு சிக்கிக் கொண்டுள்ள நாணயக் குற்றிகளை வெளியே கொண்டு வந்து தட்டுப்பாட்டை நீக்குவதற்கான திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மத்திய வங்கியின் மேலதிக வர்த்தக அதிகாரி திருமதி எச்.பீ.ரி.விஜேசூரிய கருத்து தெரிவித்தபோது, நாட்டில் நாணயக் குற்றிகளின் தட்டுப்பாட்டுக்கு இது முக்கிய காரணமாகும். உண்டியல்களில் சிக்கிக்கொண்டுள்ள நாணயக் குற்றிகளை வெளியே



புழக்கத்திற்கு கொண்டு வருவதற்காக பரிசளிப்புத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் பரிசுகளை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நாணயக்குற்றிகளை சேகரிக்கத் தொடங்கியதால் எமது திட்டம் தோல்வி கண்டது. பல்வேறுபட்ட உற்பத்திகளுக்காக நாணயக்குற்றிகள் உருக்கப்படுவதாலும் இந்நிலைமை உருவெடுத்துள்ளது என்றார்.

இதுஇவ்வாறிருக்க, பத்து ரூபா நாணயத்தாள்கள் இனிவரும் காலங்களில் அச்சிடப்படமாட்டாது எனவும் இதற்குப் பதிலாக நாணயக் குற்றிகளே புழக்கத்துக்கு வரும் என்று விஜேயசூரிய கூறியுள்ளார். இனிமேல் பத்து ரூபா நாணயத்தாளுக்கு பதிலாக பத்து ரூபா நாணயக்குற்றி மட்டுமே நிதிச்சந்தையில் புழக்கத்துக்கு விடப்படவுள்ளன. எனினும், மத்திய வங்கிக்குக் கிடைக்கும் மங்கிப் போகாத நல்ல நிலையிலுள்ள பத்து ரூபா நாணயத் தாள்கள் மட்டும் மீளவும் நிதிச் சந்தைக்கு விடப்படும்.வங்கிகளின் தகவல் மார்க்கங்கள் தெரிவிப்பதற்கு அமைய, சந்தையிலுள்ள நாணயத்தாள்களுள் அதிகளவில் நிறம் மங்கிப் போயுள்ள நாணயத்தாள்கள் 10 ரூபாவே என்று அவர் மேலும் கூறினார். ஒரு நாட்டின் நாணயத்தாள் ஒன்று நாணயக்குற்றியாக மாறுகின்றது என்றால் அந்நாட்டின் பொருளாதாரம் கீழ்நோக்கிப்போகின்றது என்பது அர்த்தம்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்லும்பாதை எது?

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கை குறித்து பலத்த அதிர்வலைகள் ஏற்படுத்திவருகின்றன. தமிழ மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக போர்க் குற்றம் குறித்தெல்லாம் பேசிய கூட்டமைப்பினர் இப்போது அதற்கு எதிரான செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நடவடிக்கை குறித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 23.07.2011 அன்று தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளையும் அதன் துணைக் குழுக்களையும் தமிழ் மக்கள் நிராகரித்துள்ளதன் மூலம் தமிழ்த் தேசத்தின் தனித்துவத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் தமிழ்த் தேசம் வேறு சிங்கள தேசம் வேறு என்பதனையும் மீளவும் வலியுறுத்தியுள்ளனர். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இரண்டு தேசங்களும் வேறுபட்டது என்ற அடிப்படையிலேயே சர்வதேச சமூகம் தமிழ் மக்களது இனப்பிரச்சியையை அணுக வேண்டும் என்பதே தமிழ் மக்களது விருப்பம் என்பதனையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து ஒற்றுமையாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தால்

**– சிறீலங்கா அரசு மீது சுமத்தப்பட்ட போர்க் குற்றச் சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படல்**

**– தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான அரசியல்தீர்வை அடைதல்**

**– தமிழர் தாயகத்தில் இடம்பெறும் நிலப்பறிப்புக்கள், இராணுவ மயமாக்கல்**

நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு மக்கள் குடியிருப்புக்களில் இருந்து படையினர் வெளியேறல்

போன்ற நிலைப்பாடுகளை ஒருமித்த குரலில் சர்வதேச சமூகத்திற்குக் கூறுவதாக அமையும் என்று தமிழ் மக்கள் உறுதியாக நம்பியதனால் கடுமையான இராணுவ நெருக்கடிகளையும், வாழ்வியில் நெருக்கடிகளையும் சந்தித்தவாறு ஒற்றுமையாக ஓரணியில் திரண்டு ஏனைய பேரினவாதக் கட்சிகளையும் நிராகரித்து தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தனர்.

ஆனால் கூட்டமைப்பினர் தாம் கொள்கையில் உறுதியாக இருப்பதுபோன்று வார்த்தைகளில் மட்டும் வீர வசனங்களைப் பேசி தமிழ் மக்களை நம்ப வைத்து வாக்குகளைப் பெற்றுக் கொண்டனர். தேர்தலின் பின்னர் தமது சுயரூபத்தை வெளிப்படுத்தி தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளுக்கு முற்றிலும் எதிராக செயற்பட்டு வருகின்றனர்.

தேர்தல் முடிவுகள் வெளியான மறுநாள் 24.07.2011 அன்று புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் உரையாற்றிய த.தே.கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் புலம்பெயர் தமிழ் மக்களை சோர்வடையச் செய்து அவர்களால் போர்க்குற்ற விசாரணையை வலிறுத்தி சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை கைவிடச் செய்யும் வகையில் கருத்துரைத்துள்ளதுடன் சிங்கள மக்கள் தருவதற்குத் தயாராக உள்ளதையே அரசியல் தீர்வாக தமிழர்கள் முன்வைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டுமென தமிழ் மக்கள் தமக்கு ஆணை வழங்கியுள்ளனர் என்று கூறியுள்ளார்.

தேர்தலுக்குப் பின்னர் இரா.சம்பந்தன் மற்றும் எம்.எ.சுமந்திரன் ஆகிய இருவரும் சுயநிணர்ய உரிமை, தமிழ்த் தேசம் ஆகிய அடிப்படைக் கொள்கைகளை கைவிட்டு கருத்துக்களை வெளியிட்டுள்ளமையை முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அத்துடன் இவர்கள் இருவரதும் கருத்துக்களை தொகுத்து நோக்கும்போது, தமிழ மக்களால் ஏகோபித்த அடிப்படையில் கடந்த 20 ஆண்டுகளாக நிராகரிக்கப்பட்டு வந்த 13ம் திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மகாணசபையை அங்கீகரித்து தமிழர்களை சிறுபான்மை இனம் என்று ஏற்றுக்கொண்டு ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குள் அடிமைகளாக வாழும் நிலைக்குள் தள்ள திரைமறைவு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதே உண்மையாகும்.

சிறீலங்கா அரசாங்கத்துடனும், சர்வதேச சமூகத்தினருடனும் தமிழ மக்களின் பெயரால் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைக்கு திரு.இரா சம்பந்தன், எம்.எ.சுமந்திரன் ஆகிய இருவருமே தலைமை தாங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் தேசத்தின் இறைமைக்கான போராட்டத்தில் எமது மக்களும் இளைஞர்களும் செய்த தியாகங்களையும், சந்தித்த இழப்புக்களையும் விலை பேசும் வகையில் தமிழ தேசியக் கூட்டமைப்பின்

**தேர்தலுக்குப் பின்னர் இரா.சம்பந்தன் மற்றும் எம்.எ.சுமந்திரன் ஆகிய இருவரும் சுயநிணர்ய உரிமை, தமிழ்த் தேசம் ஆகிய அடிப்படைக் கொள்கைகளை கைவிட்டு கருத்துக்களை வெளியிட்டுள்ளமையை முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.**

செயற்பாடுகள் அமைந்துள்ளன.

அதாவது இனப்படுகொலை புரிந்தவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றச் சாட்டுக்களுக்கான விசாரணையை தமிழ் மக்கள் விரும்பவில்லை என்றும், சிங்கள மக்கள் தருவதற்குத் தயாராக உள்ள எத்தத் தீர்வையும் பெற்றுக் கொண்டு வாழத் தயாராக உள்ளனர் என்ற செய்தியே கூட்டமைப்புத் தலைவர்களின் கருத்துக்களின் தொகுப்பாக சர்வதேச சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக்கும் வகையில் தமிழ் மக்களது நலன்களுக்கு எதிரான மேற்படி தலைவர்களது கருத்துக்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

புலம்பெயர் தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்துடன் இணைந்து சிரீலங்காவில் இடம்பெற்றதாகக் கூறப்பட்டுள்ள போர்க்குற்றங்களை விசாரிப்பதற்காக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை முறியடித்து சிறீலங்கா அரசாங்கத்தை காப்பாற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் சதிமுயற்சியை தாயகத்திலும், புலத்திலும் வாழும் தமிழ் மக்கள் புரிந்து கொண்டு இவர்களது சதியை முறியடித்து விடுதலை நோக்கிய பாதையில் உறுதியாகப் பயணிக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

அத்துடன் தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலை தொடர்பாக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணையை சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியும், தமிழ் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் ஒரு நாட்டுக்குள் இரண்டு தேசங்கள் என்ற அரசியல் தீர்வை அடைவதற்காகவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தாயக மக்களுடனும், புலம்பெயர் தமிழ் மக்களுடனும் இணைந்து தொடர்ச்சியாக ஜனநாயக வழியில் செயற்படும் என்றும் உறுதியளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வஞ்சகம் மேற்கில் செல்வம் கிழக்கில் உபத்திரவம் தெற்கில் அதிகாரம்



ச.வி.கிருபாகரன்

மகிந்த ராஜபக்ச வேலணை மக்களின் உறவினன், கருணா சிங்கள மக்களின் உறவினன், டக்ளஸ் சமூக வேறுபாடுகளின் தலைவன். இவர்கள் தான் கிழக்கின் உதயத்தையும், வடக்கில் வசந்தத்தையும் கொடுக்கிறார்கள். அவ்வளவிற்கு ஈழத்தமிழர் இழிவானவர்களோ அல்லது மடையர்களோ அல்ல.

கருணாவிற்கு மது, மங்கை – டக்ளசிற்கு சாதிவெறி, பணவெறி, சமய வெறி, ஈழத்தமிழ் மக்களுக்கு விடுதலைத் தாகம்.

மகிந்த, கருணா, டக்ளஸ் இவர்களின் வெறிகள் ஒரு போதும் விடுதலை தாகத்தை தணிக்க முடியாது. ஈழத்தமிழரின் ஆயுதப் போராட்டம் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ தோல்வி கண்டிருக்கலாம். ஆனால் மக்களின் உணர்வுகள் ஆயுதப் போராட்ட காலத்திலிருந்ததைவிட தற்பொழுது பன்மடங்கு அதிகரித்துள்ளது மட்டுமல்லாது, இவ் மும்மூர்த்திகளின் ஆட்டம் நிரந்தரமற்றது என்பதையும், ஈழத்தமிழ் மக்கள் மனதில் தெளிவாகக் கொண்டுள்ளனர்.

இன்னும் சில வருடங்களில் மகிந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும், கருணா என்கிற முரளிதரன் இலங்கை, பிரித்தானிய நீதிமன்றங்களிலும், டக்ளஸ் இலங்கை, இந்திய நீதிமன்றங்களிலும் குற்றவாளிக் கூண்டுகளில் நிற்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை மும்மூர்த்திகளும் தெரிந்திருக்க மாட்டார்கள்.

கருணாவும், டக்ளசும் தமது தனிப்பட்ட சுகபோகங்களுக்காக – ஈழத் தமிழினத்தின் அடிப்படை உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றை சர்வதிகாரி ராஜபக்ச குடும்பத்தினருக்கு தாரை வார்த்து கொடுத்து இச் சர்வாதிகாரிகளை வடக்கு கிழக்குக்கு மூலை முடுக்கெல்லாம் கூட்டிச் சென்று இவர்களை வரவேற்பதும், மாலை போடுவதும் கோவில்களில் பூசைகளும் பால் அபிசேகம் செய்வதால் தமிழினத்திற்கு கிடைக்கும் நன்மை என்ன?

## கருணா டக்ளசின் அடிமைத்தனம்

சிங்கள படையினர் மிருகத்தனமாக பெண்களை பாலியல் வல்லுறவுக்கு ஈடுபடுத்தவும், சித்திரவதை செய்யவும், கொலை செய்யவும், சிங்களக் குடியேற்றம், பௌத்த மயம், சிங்களமயம் ஆகியவை எந்த நீதி விசாரணையுமின்றி தமிழர் தாயகத்தில் நடைபெறுகின்றன. இவற்றில் கருணா, டக்ளசின் பங்கு என்ன?

கலை, கலாச்சாரம் மிகவும் கவ்னமாக பேணப்பட்டுவந்த தமிழர் தாயகத்தில், இன்று இடம்பெறும் கலாச்சார சீர்கேட்டிற்கும், சிங்களப் படைகளின் காமவெறியாட்டத்திற்கும் என்றோ ஒரு நாள் கருணாவும், டக்ளசும் ஈழத்தமிழ் மக்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

மகிந்தவையும், அவரது குடும்ப அரசையும் தினமும் புகழ்ந்து துதிபாடும் இவர்கள், ஐ.நா. வினால் வெளியிடப்பட்ட அறிக்கையில், 40 ஆயிரம் பொது மக்கள் சிறீலங்காப் படைகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டதையே நிராகரித்துள்ளார்கள். இதில் வேடிக்கையான விடயங்கள் இவர்கள் இருவரதும் ஐ.நா. பற்றிய கூற்றுக்கள். வெட்கம்!

கருணாவை நம்பும் மகிந்தவிற்கு, இராணுவத்திற்கோ, சிறீலங்கா அரசிற்கோ கருணாவின் சரித்திரத்தை ஒழுங்காக ஆராய்ந்து எதிர்காலத்தில் இவர் என்ன செய்வார் என்பதை அளவிட முடியாதவர்களாகவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் 1983ம் ஆண்டு இணைந்த கருணா முக்கிய பதவிகள் வகித்து தமிழீழத் தேசியத் தலைவரின் நம்பிக்கையைப் பெற்றவர், பெண் ஆசை, பொன் ஆசை காரணமாக குத்துக் கரணம் அடித்து இயக்கத்தில் தனக்கு தெரிந்த இரகசியங்களையே காட்டிக்கொடுத்த இவர் உலகில் யாருக்கும் நம்பிக்கைக்கு உரியவராக இருக்க முடியாது.

## 'ஆலை இல்லா ஊருக்கு இலுப்பம் பூ சர்க்கரை'

சாத்திர ரீதியாக கூறுவதானால் பிள்ளையானுக்கு இப்பொழுது 'வெள்ளி திசையாக' இருக்க வேண்டும்! எங்கையோ ஒரு மூலையில் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பிக் கொண்டிருந்தவர் இன்று கிழக்கின் உதயத்தின் முதலமைச்சர், அதவாது கிழக்கின் முதலமைச்சர். இதை தான் கூறுவார்கள் 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பம் பூ சர்க்கரை' என்று. இப்படியாக சிலர் புலம்பெயர் வாழ்விலும் இப்பொழுது திடீரென உதயமாகியுள்ளார்கள். என்ன செய்வது, தமிழீழ மக்களின், விசேடமாக புலம்பெயர் வாழ் மக்களின் துர்ப்பாக்கிய நிலை இதுதான். டக்ளசைப் பொறுத்தவரையில், ராஜபக்சவே சொல்லி உள்ளார் 'டக்ளசுக்கு சல்லி எண்டால் போதும்' அவர் எதுவும் செய்வார். இப்பொழுது தனது தனிப்பட்ட செல்வாக்கை வளர்ப்பதற்காக சாதி, சமயம் பிரச்சினைகளை யாழ் குடாவில் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்.

இவர்கள் யாவரும் இன்றுவரை தமிழினத்திற்கு என்னத்தை உருப்படியாகச் செய்துள்ளார்கள்? மானம் மரியதை கெட்ட இப்படியான வாழ்க்கை இவர்கள் வாழ வேண்டுமா?

கிழக்கின் உதயமாம்?

அங்கு என்ன உதித்துள்ளது. அங்கு ராஜபக்சவின் சிற்றரசர்களான கருணா, பிள்ளையான் போன்ற கூலி படைகளினால் உபத்திரவம் தான் உதயமாகி உள்ளது.

வடக்கில் வசந்தமாம்?

இந்த அடிமை வாழ்க்கை வாழும் டக்ளசினால் வடக்கு வாழ் மக்களுக்கு எதை கொண்டுவர முடியும்? வடக்கிலும், கிழக்கிலும் நடைபெறும் உபத்திரவமும் வஞ்சகமும் இவர்களுக்கு உதயமும் வசந்தமாகவும் தெரிகிறது!

## சிறீலங்காவின் பொருளாதாரம்

மிக நீண்ட காலமாக சிறீலங்காவினால் பொருளாதார ரீதியாக ஏதோ இலாபம் அடைய முடியுமானால் அது மலையக தமிழ் மக்களின் வியர்வை, கடும் உழைப்பு, விடாமுயற்சியால் கொண்டுவரப்பட்ட செல்வமான 'தேயிலை, இறப்பர், கொக்கோ' ஆகியவற்றினலே தவிர, ராஜபக்ச பரம்பரையால் உருவாக்கப்பட்டவை எதுவும் அல்ல.

வடக்கு, கிழக்கு, மேற்கை அடக்கி ஆளுவதற்கான ஆட்சிதான் தெற்கில் உள்ளதே தவிர எந்தவித கடும் உழைப்போ, விடாமுயற்சியோ, வியர்வைசிந்தி உழைக்கும் பக்குவ மனோநிலையோ அங்கு கிடையாது.

## ஜெயலலிதாவை வரவேற்கும் அமெரிக்காவிற்குராஜபக்சா வேண்டா விருந்தாளி


இந்த ராஜபக்சாக்களை, டக்ளசையும், கருணா, பிள்ளையான் ஆகியோரை யார் உலகில் தேடுகிறார்கள், அன்புடன் அழைக்கிறார்கள் என நாம் பார்ப்போமானால் அது நிட்ச்சயமாக சில நாடுகளுடைய நீதிமன்றங்களும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களுமே!

பல தடவை அமெரிக்காவிற்கு சென்ற ராஜபக்சவை எத்தனை தடவை அமெரிக்க அரசாங்கம் உத்தியோக பூர்வமாகவோ நட்பாகவோ அழைத்துள்ளது?

அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு ஒரு அழையா விருந்தாளியாகவே ராஜபக்ச சென்று வந்தார். அதற்கும் இன்று முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

இன்று மூன்றாவது தடவையாக தமிழ்நாட்டின் முதலமைச்சரான செல்வி ஜெயலலிதாவை அமெரிக்காவிற்கு விஜயம் செய்யுமாறு, சென்னைக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் திருமதி கிலாரி கிளிங்டன் அழைப்பு விடுத்துள்ளார். ஒரு மாநில முதலமைச்சருக்கு உலகில் உள்ள மரியாதை கூட ஒரு நாட்டின் ஜனாதிபதியான ராஜபக்சவிற்கு இல்லை என்பதை இவருக்கு சாமரம் வீசும் சிங்கள அடிமைகளான டக்ளஸ், கருணா, பிள்ளையான் போன்றோர் விளங்கிக் கொள்வார்களா?

**இன்னும் சில வருடங்களில் மகிந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும், கருணா என்கிற முரளிதரன் இலங்கை, பிரித்தானிய நீதிமன்றங்களிலும், டக்ளஸ் இலங்கை, இந்திய நீதிமன்றங்களிலும் குற்றவாளிக் கூண்டுகளில் நிற்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை மும்மூர்த்திகளும் தெரிந்திருக்க மாட்டார்கள்!**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றிடம் இருந்து விடுபட்டு இன்னொன்றிடம் அடிமையாக புலிகள் விரும்பவில்லை!

தெற்கு சூடானை உருவாக்க அமெரிக்கா உதவியதைப்போல, தமிழ் ஈழம் உருவாக இந்தியா ஏன் உதவவில்லை?

*வி.வி.வெங்கடேஸ், தாராபுரம்*

அமெரிக்கா சொன்னது அனைத்துக்கும் தலையாட்ட தெற்கு சூடான் போராட்ட அமைப்பு தயாராக இருந்தது. இங்கு உள்ள மத்திய அரசாங்கத்தின் தொங்கு சதையாக இருக்க... ஆரம்பம் முதலே விடுதலைப் புலிகள் அமைப்பு விரும்பவில்லை. வட கிழக்கு மாகாணத்தை ஒருங்கிணைத்து அங்கு பிரபாகரன் தலைமையில் ஒரு பொம்மை அரசாங்கத்தை உருவாக்க நினைத்தார்கள். 'நான் முதலமைச்சர் ஆவதற்காக துப்பாக்கி தூக்கவில்லை' என்று அவர் அன்று மறுத்தார். அதன் பிறகு தான், வரதராஜப்பெருமாள் முதலமைச்சர் ஆனார். இந்திய அமைதிப்படை அங்கே இருந்து திரும்பிய பிறகு வரதராஜப்பெருமாளே அங்கு இருக்க முடியாமல் இந்தியாவுக்கு ஓடிவிட்டார்.

இந்தியாவை சகோதர சக்தியாக ஈழ தமிழர்கள் நினைத்தார்கள். ஆனால் அவர்களை அடிமை மக்களாக நடத்தவே இவர்கள் விரும்பினார்கள். ஒன்றிடம் இருந்து விடுபட்டு இன்னொன்றிடம் அடிமையாக அவர்கள் விரும்பவில்லை.

*நன்றி – ஜுனியர் விகடன் (31.07.2011)*

## வடக்கில் சூறையாடப்படும்....

கடமையாற்ற வேண்டும் என மகிந்தா அண்மையில் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் தமிழர் என்ற காரணத்திற்காக கொழும்பிலுள்ள பிரபலமான கணக்காய்வு நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பு பறிபோன சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

பிரபலமான கணக்காய்வு நிறுவனத்துக்கு துறைமுகத்திலுள்ள ஏற்றுமதி இறக்குமதியுடன் தொடர்புடைய நிறுவனமொன்றின் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒப்பந்தம் கிடைத்துள்ளது.

அதன்பிரகாரம் துறைமுகத்துக்குள் அமைந்துள்ள அந்த நிறுவனத்துக்குச் சென்று கணக்காய்வுகளை மேற்கொள்ள பிரபல நிறுவனத்தின் சார்பாக நால்வர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் மூவர் சிங்களவர்கள். மற்றையவர் தமிழ் இளைஞர்.

ஆர்வத்துடன் பணியாற்றக் காத்திருந்த இவருக்கு இறுதியில் மிஞ்சியது ஏமாற்றம் மாத்திரமே. தமிழர் என்பதற்காக துறைமுகத்துக்கு உள்ளே செல்வதற்கு அனுமதியளிக்கப்படவில்லை என்பதே உண்மையாகும்.

துறைமுகத்துக்கு உள்ளே செல்வதாயின் அனுமதி அட்டை `பாஸ்` பெறவேண்டிய நடைமுறை உண்டு. சிங்களவர் மூவருக்கு எந்தத் தடையுமின்றி அனுமதி அட்டை கிடைத்துள்ளது. எனினும் தமிழர் என்பதால் இவருக்கு அனுமதி கிடைக்கவில்லை.

இதுபற்றி அந்த இளைஞர் தனது உயரதிகாரியிடம் கேட்டபோது அவர் அளித்த பதில் இதுதான்.

`நான் என்ன செய்வது? நமது நாட்டின் நிலை இப்படிக் காணப்படுகிறது. தமிழருக்கு எந்த வகையிலும் சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது என நினைக்கிறார்கள். திறமையைப் பற்றி மூன் றாம் தரப்பினர் கவலைப்படுவதில்லை. இது என்னுடைய தவறில்லை. உங்களை வேறொரு நிறுவனத்துக்கு கணக்காய்வு செய்வதற்கு நியமிக்கிறேன்' என்றார்.

இந்த நாட்டில் தமிழராய் பிறந்தது எமது குற்றமில்லையே. அப்படியென்றால் கடவுளைத்தான் தண்டிக்க வேண்டும் என்கிறார் பாதிக்கப்பட்டவர்.

இதற்காகத்தானே தமிழர்கள் சிங்களவர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தினார்கள். சர்வதேசம் இதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

புலம்பெயர் வாழ் எம் தமிழ் உறவுகளே இது சிந்திக்கும் நேரமல்ல செயற்படும் நேரம்!

(சூறையாடல்கள் தொடரும்)

## சரணடைகிறான் வீரத் தமிழன்

சிலை புனரமைப்பு என்ற பேரில், யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனான சங்கிலியனை போவோர் வருவோரிடம் எல்லாம் யாழ். மாநகர சபை சரணடைய வைத்திருப்பது குறித்து குடாநாட்டில் உள்ள வரலாற்று ஆய்வாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். சங்கிலியன் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்ட ஒரு தமிழ் வீரன் மன்னன். அவனை வாளினைத் தூக்கியபடி சரணடையும் கோலத்தில் சிலையாக்கியிருப்பது கண்டிக்கத்தக்கது. நிபுணத்துவ யோசனைகள் எதனையும் பெறாது சகட்டுமேனிக்குத் தான் தோன்றித்தனமாகத் தீர்மானங்களை எடுப்பதால் ஏற்படும் விளைவு இது என்று பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் ஒருவர் ஆதங்கப்பட்டார். யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் சங்கிலிய மன்னனுக்குச் சிலை நிறுவப்பட்டிருந்தது. அந்தச் சிலையைப் புனரமைக்க யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுத்திருந்தது. முன்னர் அங்கு நிறுவப்பட்டிருந்த சிலை சுக்கு நூறாக்கப்பட்டு, புதிய சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோயில் திருப்பணிக்காக இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த சிற்பி ஒருவரினால் புதிய சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய சங்கிலியன் சிலையின் மாதிரி உருவில் அவனது வலது கரம் தாங்கி இருந்த வாள், முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க கீழ் இறங்கி இருந்தது. இது குறித்துக் கடும் கண்டனங்கள் தாயகத்திலும் புலத்திலும் எழுந்தன.

இதனை அடுத்து சங்கிலியனின் கை மேலே உயர்த்தப்பட்டுள்ளது. இப்போது சங்கிலியன் தனது கைகளில் வாளினை தூக்கிப் பிடித்தபடி சரணடைவதற்குத் தயாராக இருப்பது போன்ற பாவனையில் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. வலது கரத்தினை தோள் உயரத்துக்குத் தூக்கியபடி, உள்ளங்கை வெளித் தெரிய வாளினைத் தூக்கிப் பிடித்தபடி இருக்கும் சங்கிலியனின் சிலையே தற்போது முத்திரைச் சந்தியில் வைக்கப்பட்டுள்ளது. சங்கிலியனின் இந்த நிலையே மீண்டும் விமர்சனங்களுக்கு ஆளாகி உள்ளது. சரணடைய மறுத்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட ஒரு மன்னனை இதை விடக் கேவலப்படுத்த முடியாது என்று வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். கைகளை உயரத் தூக்கி உள்ளங்கை வெளித் தெரிய நிற்கும் நிலை சரணடைதலுக்கான உடல் மொழியாகவே உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் எதிரே இருக்கும் எவருக்கும் தன்னால் ஆபத்து ஏற்படாது என்று உணர்த்துவதும் தனது கைகளில் ஆயுதங்கள் ஏதுமில்லை என்று நிரூபிப்பதும்தான். சங்கிலியனும் இப்போது அப்படித்தான் கைகளைத் தூக்கியபடி நிற்கிறான் என்றார் பல்கலைக்கழக விரிவுரையாளர். இந்த நிலையில் எதிர்வரும் 4ஆம் திகதி புதிய சிலை திறந்து வைக்கப்படும் என்று யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா நேற்று அறிவித்தார். ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்த விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடத்தப்பட்டது. திறப்பு விழாவுக்கு அறிவுசார் பெருந்தகைகளையும் அரசியல் தலைவர்களையும் அழைப்பது என்று அந்தக் கூட்டத்தில் இணங்கப்பட்டது. எனினும் சிலையை யார் திறந்து வைப்பார் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், 'திறப்பு விழா முழுவதும் அரசியல்மயப்பட்டதாகவே இருக்கும்' என்று முதல்வர் தெரிவித்தார். உள்வீட்டுத் தகவல்களின்படி பாரம்பரிய கைத்தொழில் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே சிலையைத் திறந்து வைப்பார் என்று தெரிகிறது.

*நன்றி – உதயன்*

ASCES

21 ஆண்டுகளாக நடைபெறும் பாடசாலை

PARIS - LA COURNEUVE - BOBIGNY - DRANCY

| | | |
|---|---|---|
| Crimée இல் (Métro Crimée)<br>Eglise Saint Jacques<br>3, place de Joinville 75019 Paris<br>Tél 06 68 12 57 19<br>திறந்திருக்கும் நேரம்<br>சனி ஞாயிறு 9.30 – 18 மணி<br>புதன் 15 – 17 மணி | La Courneuve இல்<br>35 , rue Maurice Lachâtre<br>93120 La Courneuve<br>Tél 06 68 12 57 19<br>திறந்திருக்கும் நேரம்<br>சனி-ஞாயிறு 11.30 – 19 மணி<br>திங்கள்-வெள்ளி 14 – 20 மணி | BOBIGNY இல்<br>Pont de Bondy<br>அருகில்<br>Tél 06 68 12 57 19<br><br>DRANCY Gare இ<br>அருகில் |

Grande section - CM2, Collège, Lycée வகுப்புகள்

Maths, Chimie, Bio, français, Physique

| | |
|---|---|
| பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்பு<br>06.08.2011 சனி-ஞாயிறு 15.30 மணி<br>03.09.2011 சனி-ஞாயிறு 9.30 மணி<br>08.09.2011 வியாழன் - வெள்ளி 11மணி<br>01.08.2011 திங்கள் - செவ்வாய் 9.30 மணி | அண்மையில்<br>இலங்கையிலுருந்து வந்த<br>மாணவர்களுக்கான<br>விசேட பிரஞ்சு<br>வகுப்புகள் ஏழு நாட்களும் |
| கணனி வகுப்பு HARDWARE<br>சனி ஞாயிறு 11 மணி<br>windows,office,hardware,web design | புதன், சனி, ஞாயிறுகளில்<br>தமிழ், நடனம், சங்கீதம் வீணை,<br>புல்லாங்குழல், மிருதங்கம், வயலின் வகுப்புகள் |

தையல் icing, hairstyle, facial வகுப்புகள் ஆரம்பம்

Cambridge University பரீட்சைக்கான வகுப்புகள்
(Starters, Movers, Flyers, Ket, Pet)




பிரஞ்சு பேசிப் பழக முதன்முறையாக பிரஞ்சு உச்சரிப்பு
CD 1&2 இல் வீட்டிலிருந்தபடியே

தமிழ் மூலம் ஆங்கிலம் கற்க british உச்சரிப்பு CD உடன்- 512 பக்கங்களில்

தமிழ் தரம் 1 பாடம்-பயிற்சி CD உடன்

எமது பாடசாலை (10, rue Duvergier 75019 Paris m° Crimée) இலும்
பரிஸில் எல்லா புத்தகக் கடைகளிலும் பெறலாம்

சுவிஸில் Lausanne : NT trade wind, ch du rosiers 3, tél 021 0462025
Genève : Jeya traders 32, rue de Zurich tél 022 7316428

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழமும் அமெரிக்காவின்....

இந்நிலையில் மூத்த அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளருடன் இடம்பெற்ற சந்திப்பில் கருத்துக் கூறிய இவர், 'சிறீலங்கா அரசாங்கத்தினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் துன்புறுத்தல்களில் இருந்து மக்களை மீட்பதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார். இதுபற்றி தமிழீழ தேசிய செயற்பாட்டாளர்கள் சிலர் ஆட்சேபனை வெளியிட்ட பொழுது, தனது கூற்றை மீளப்பெற மறுத்த லிசா ஹன்சன், தமிழ் மக்களுக்கு அமெரிக்க அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு யுக்தியாகவே இவ்வாறான கருத்தை தான் வெளியிட்டதாக நியாயம் கற்பித்திருந்தார்.

இதற்கு முன்னர் 20.04.2008 அன்று வன்னியில் சிங்களப் படைகளின் ஆழ ஊடுருவும் அணியினரால் அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் படுகொலை செய்யப்பட்ட பொழுது அதனைக் கண்டித்து அமெரிக்காவில் உள்ள தமிழ் அமைப்புக்களால் அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. இதனைக் கடுமையாக ஆட்சேபித்த லிசா ஹன்சன், கருணாரட்ணம் அடிகளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்றும், அந்த வகையில் அவரது படுகொலையைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டதன் மூலம் அமெரிக்க அரசியல்வாதிகளின் வெறுப்புக்கு அமெரிக்கத் தமிழ் அமைப்புக்கள் ஆளாகும் நிலை தோன்றியிருப்பதாகவும் புதிய வியாக்கியானமொன்றை அளித்திருந்தார்.

இவ்வாறு மிகவும் கனக்கச்சிதமாக தமிழீழ தேசிய சிதைப்பு நடவடிக்கைகளை தனது குழுவினர் அரங்கேற்றிக் கொண்டிருக்க, மறுபுறம் நேரடியாகவே களத்தில் குதித்த உருத்திரகுமாரன், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு சாவுமணி அடிப்பதற்கான முயற்சிகளில் இறங்கியிருந்தார். ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகார துணைச் செயலாளர் நாயகம் அங்கெலா கேன் அவர்களுடன் 11.08.2008, 15.08.2008 ஆகிய நாட்களில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவை மையப்படுத்திக் கருத்துக்களை உருத்திரகுமாரன் முன்வைத்தமை பற்றி ஏற்கனவே எமது கடந்த பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

இதற்கு முன்னர் 2008 யூலை மாதத்தின் இறுதி வாரங்களில் அமெரிக்க இராசதந்திரியான தொமஸ் பிக்கரிங் அவர்களுடனும், வெளியுறவுத்துறை அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவருடன் தனித்தனியாக இரு சந்திப்புக்களை உருத்திரகுமாரன் நிகழ்த்தியிருந்தார். 26.07.2008 முதல் 04.08.2008 வரையான காலப்பகுதியில் கொழும்பில் அப்பொழுது இடம்பெறுவதற்கு ஏற்பாடாகியிருந்த சார்க் உச்சி மாநாட்டை முன்னிட்டு ஒருதலைப்பட்சமான முறையில் போர்நிறுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்திருந்த பின்புலத்தில், வன்னியில் இருந்து எவ்வித ஒப்புதலும் இன்றி இச்சந்திப்புக்களை உருத்திரகுமாரன் நிகழ்த்தியிருந்தார்.

இச்சந்திப்புக்களுக்கு முன்னர் நோர்வேயின் சிறப்பு சமாதானத் தூதுவர் ஹன்சன் போவர் அவர்களுடன் 22.07.2008 அன்று உருத்திரகுமாரன் தொலைபேசியில் உரையாடியிருந்தார். இவ் உரையாடலின் பொழுது நிரந்தரப் போர்நிறுத்தத்திற்கு முன்னோடியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவு பற்றிய பேச்சை உருத்திரகுமாரன் கிளப்பிய பொழுது, அது பற்றி தனக்கு வன்னியில் இருந்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும், 'பலமான நிலையில் இருந்து கொண்டு ஆயுதக் களைவு பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் பேசுவார்களா?' என்று உருத்திரகுமாரனிடம் போவர் வினவியதாகவும் ஒரு தகவல் உண்டு. இதேபோன்ற கருத்தை மறுநாள் 23.07.2008 அன்று அங்கெலா கேன் அவர்களுடன் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட சந்திப்பு ஒன்றிலும் உருத்திரகுமாரன் வெளியிட்டதாக தகவல்கள் உள்ளன.

இவை ஒருபுறமிருக்க அமெரிக்க இராசதந்திரியான தொமஸ் பிக்கரிங் அவர்களுடனும், வெளியுறவுத்துறை அமைச்சின் மூத்த அதிகாரியுடனும் இடம்பெற்ற சந்திப்பில் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவது பற்றி உருத்திரகுமாரன் கலந்துரையாடியிருந்தார்.

இதில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் மூத்த அதிகாரிக்கும், உருத்திரகுமாரனுக்கும் இடையிலான சந்திப்பு 29.07.2008 அன்று இடம்பெற்றது. இவ்வதிகாரியே அப்பொழுது அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் தலைமைச் செயலகத்தில் இலங்கை விவகாரங்களுக்கு பொறுப்பாக பதவி வகித்து வந்தார். இவர் ஒரு பெண்மணி.

இச்சந்திப்பின் பொழுது கொழும்பில் பொதுமக்கள் மீதான வெடிகுண்டுத் தாக்குதல்களை தமிழீழ விடுதலைப் புலிகள் நிறுத்த வேண்டும் என்று இவ்வதிகாரி வலியுறுத்திய பொழுது, வன்னியில் சிறீலங்கா படைகளால் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதற்கான பதிலடியாக இத்தாக்குதல்களை தமிழீழ விடுதலைப் புலிகள் நிகழ்த்தக் கூடும் என்று உருத்திரகுமாரன் வியாக்கியானமளித்திருந்தார். கொழும்பில் பொதுமக்கள் மீதான வெடிகுண்டுத் தாக்குதல்களுடன் எந்த வகையிலும் தமது அமைப்பு தொடர்புபடவில்லை என்று அக்காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன், படைத்துறைப் பேச்சாளர் இ.இளந்திரையன் ஆகியோர் திட்டவட்டமாக தெரிவித்திருந்த நிலையிலேயே இவற்றுக்கு முற்றிலும் முரணான வியாக்கியானத்தை – தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் என்ற கோதாவில் – வன்னியிலிருந்து எவ்விதமான ஒப்புதலும் இன்றி உருத்திரகுமாரன் வெளியிட்டிருந்தார்.

இத்தருணத்தில் 'தமிழீழக் கோரிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் கைவிடுவார்களா?' என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் அதிகாரியால் வினவப்பட்டது. அதற்குப் பதிலளித்த உருத்திரகுமாரன், தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் கொண்டு வரப்படும் அரசியல் தீர்வை ஏற்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருப்பார்கள் என்றும், இதுபற்றிய திட்டம் ஒன்று இலண்டனில் உள்ள சட்டத்தரணிகள் குழுவொன்றினால் ஏற்கனவே வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

திம்பு முதல் ஜெனீவா வரை இடம்பெற்ற ஒவ்வொரு சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் உள்ளக சுயநிர்ணய உரிமையைத் தழுவிய அரசியல் தீர்வை ஆராய்வதற்கான நெகிழ்வுப் போக்கை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டு வந்த பொழுதும், 2006ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இரண்டாம் கட்ட ஜெனீவா பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த பின்னரான சூழமைவில் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு என்பது சாத்தியமற்றது என்ற தீர்க்கமான முடிவு தமிழீழ விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்டது. இதனை அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தும் அறிவிப்பை 27.11.2006 அன்று நிகழ்த்திய மாவீரர் நாள் உரையில் மிகவும் தெளிவாக தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தெரிவித்திருந்தார்:

"சிங்கள ஆட்சியாளர்கள் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் ஒரு நியாயமான தீர்வை ஒருபோதும் முன்வைக்கப்போவதில்லை என்பது இன்று வெட்டவெளிச்சமாகியிருக்கிறது. எத்தனை ஆண்டுகள் கடந்துசென்றாலும் எத்தனை யுகங்கள் ஓடி மறைந்தாலும் சிங்களத் தேசத்தில் மனமாற்றம் நிகழப்போவதில்லை என்பதும் தமிழருக்கு நீதிகிடைக்கப்போவதில்லை என்பதும் இன்று தெட்டத்தெளிவாகியிருக்கிறது. எனவே, நடக்கமுடியாத விடயத்தில் நம்பிக்கை வைத்து, தொடர்ந்தும் அதே பழைய பாதையில் நடைபோட இனியும் நாம் தயாரில்லை. எம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளவும் நாம் விரும்பவில்லை.

சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரேயொரு பாதையைத்தான் இன்று தமிழீழ மக்களுக்குத் திறந்துவைத்திருக்கிறது. எனவே, இந்த விடுதலைப் பாதையிற் சென்று, சுதந்திரத் தமிழீழத் தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் நாம் தீர்க்கமாக முடிவுசெய்திருக்கிறோம். எமது அரசியற் சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழிநடக்கும் உலகநாடுகளையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்.``

இவ்வாறு தமிழீழத் தனியரசை நிறுவுவதற்கான தீர்மானத்தை மிகவும் தீர்க்கமான முறையில் 27.11.2006 அன்று தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் வெளியிட்டிருந்த நிலையில், அதற்கு நேர்மாறாக தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருப்பார்கள் என்று தான்தோன்றித்தனமாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் மூத்த அதிகாரியிடம் 29.07.2008 அன்று உருத்திரகுமாரன் தெரிவித்த கருத்து, எவ்வாறான பாதையில் உருத்திரகுமாரனின் நாடுகடந்த அரசாங்கம் பயணிக்கின்றது என்பதை சிறிதளவாவது நாம் புரிந்து கொள்வதற்குப் போதுமானது.

இதேநேரத்தில், சார்க் உச்சி மாநாட்டை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒருதலைப்பட்சமாக பத்து நாட்களுக்கு பிரகடனம் செய்யப்பட்ட போர்நிறுத்தம் காலவரையறையற்ற பிரகடனமாக மாற்றப்பட வேண்டும் என்ற கருத்து உருத்திரகுமாரனால் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இக்கருத்தை நாம் மறுவாசிப்பிற்கு உட்படுத்தினால், இதன் சூட்சுமம் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் நிரந்தர ஆயுதக் களைவையே இலக்காகக் கொண்டிருந்தது புலனாகும்.

அதாவது, ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான பத்துநாள் போர்நிறுத்த அறிவிப்பை சிங்கள அரசு நிராகரித்திருந்த நிலையில், அதனை எவ்வாறு காலவரையறையற்ற போர்நிறுத்தமாக நீடிக்க முடியும்? அவ்வாறு காலவரையறையற்ற போர்நிறுத்தத்தைப் பிரடகனம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதி காக்கும் பட்சத்தில், வலிந்து தாக்குதல்களை தொடர்ந்தும் முன்னெடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளை நிராயுபாணிகளாக்கி அழிக்கும் நடவடிக்கையை அல்லவா சிங்கள அரசு முன்னெடுக்கும்?

இது தொடர்பான மூன்று தசாப்தகால படிப்பினையை தமிழீழ விடுதலைப் புலிகள் கொண்டிருந்த நிலையில், ஒருதலைப்பட்சமான காலவரையறையற்ற போர்நிறுத்தத்திற்கு புதுவகையான நியாயம் ஒன்றை உருத்திரகுமாரன் கற்பித்திருந்தார். அமெரிக்க இராசதந்திரி தொமஸ் பிக்கரிங் அவர்களுடன் 30.07.2008 அன்று நடைபெற்ற சந்திப்பில் தனக்கு தெரிவிக்கப்பட்ட விளக்கம் என்று கூறியே இவ்வாறான நியாயத்தை வன்னிக்கு உருத்திரகுமாரன் தெரிவித்திருந்தார்.

ஒருதலைப்பட்சமான காலவரையறையற்ற போர்நிறுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்யும் பட்சத்தில், சிறீலங்கா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் மத்தியத்துவம் வகிப்பதற்கு அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் வன்னிக்கு அனுப்பி வைத்த செய்தியில் உருத்திரகுமாரன் குறிப்பிட்டிருந்தார். 31.07.2008 அன்று உருத்திரகுமாரனால் வன்னிக்கு ஆங்கிலத்தில் அனுப்பி வைக்கப்பட்ட செய்தியின் சில பகுதிகளின் தமிழாக்கம் பின்வருமாறு அமைந்திருந்தது:

"நான் இராசதந்திரி தொமஸ் பிக்கரிங் அவர்களை சந்தித்தேன்...

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கும் பட்சத்தில், பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கும் அறிக்கை ஒன்றை வெளியிடுமாறு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சிடம் தான் கோரிக்கை விடுப்பார் என்றும், அதன் பின்னர் தமது நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் தெளிவுபடுத்தலாம் என்றும் அவர் கூறினார்.

தமிழீழக் கோரிக்கை தொடர்பான தமது நிலைப்பாட்டை செய்தியாளர் மாநாடு ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் தெளிவுபடுத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவதில் ஏதாவது சங்கடம் இருந்தால், "தமிழீழக் கோரிக்கையில் நாம் நம்பிக்கையாக இருக்கின்றோம், ஆனால் மாற்று அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டால் அதனை ஏற்பதற்கு தயாராக இருக்கின்றோம்' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவிக்கலாம் என்று அவர் ஆலோசனை வழங்கினார்.

ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தத்திற்கும், பேச்சுக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்து அதனை சிறீலங்கா அரசாங்கம் நிராகரித்தால், அது அரசாங்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துவதோடு, அரசாங்கத்தின் மீது அனைத்துலக அழுத்தங்கள் அதிகரிக்கும் சூழலையும் ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார். சிறீலங்கா அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு அழைப்பு விடுப்பதை ஒரு வகையான அங்கீகாரமாகக் கருதலாம் என்றும் அவர் தெரிவித்தார். அவ்வாறான சூழலில் இரு தரப்புக்கும் இடையில் அமெரிக்கா மத்தியத்துவம் வகிக்க முடியும் என்றும் அவர் கூறினார்."

இவ்வாறு தமிழீழக் கோரிக்கைக்கு விலைபேசுவதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவை முன்னிறுத்துவதிலும் உருத்திரகுமாரன் முனைப்பாக இயங்க, அவரது உதவியாளரான வழுதி அவர்களால் வன்னிக்கு பிறிதொரு செய்தி அனுப்பி வைக்கப்பட்டது.

அதாவது, அல்–ஹைடா இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உதவியை – அதிலும் கரும்புலிகளின் உதவியை – பெற்றுக் கொள்வதற்கு அமெரிக்கா விரும்புகின்றது என்பதே அச்செய்தி. 'அம்புலிமாமா' கதை போன்று உருத்திரகுமாரனின் உதவியாளர் வழுதியால் வன்னிக்கு அனுப்பப்பட்ட அச்செய்தியின் முழு விபரமும் எமது அடுத்த பத்தியில் வெளியிடப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

GOWRI-VILLAS
Spécialitées Indiene & Srilankaise
பிறந்த நாள், திருமணம் மற்றும்
உங்கள் வைபவங்கள் எதுவாகினும்
சைவ, அசைவ உணவுகள்,
பலகார வகைகள் உங்கள் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ள...
53, rue Louis Blanc, 75010 PARIS
Tél : 01 42 05 72 65

DISHNY Restaurant
உங்களை அன்புடன் வரவேற்கின்றது
Ouvert 7 Jours sur 7
11h 30 à 23h 30
212, rue du Faubourg St-Denis
75010 Paris
Réservation: 01 40 05 18 36

WESTERN UNION MGS
195, rue du Fbg. St.Denis - 75010 Paris
25 வருடங்களைக்
கடந்து எமது சேவை தொடர்கிறது...
Tel.: 01 42 05 12 46 - Fax : 01 46 07 36 07

ROYAL Cafe
சிறப்பான
இந்திய இலங்கை
உணவு வகைகள்.
ஓடருக்கு
உணவுகள்
செய்து தரப்படும்.
20 rue perdonnet
75010 Paris
Tél: 01 40 34 88 60

64, rue louis blanc
75010 PARIS
Tél : 01 42 05 16 6
உங்கள் சாதாரண தோற்றத்தை
கவர்ச்சியானதாக்கும்
கலை வண்ணம் எம்மிடம் உள்ளது.
NEW SAGANA
COIFFURE

மேசை அழைப்பிதழ்கள்
குறைந்த விலையில்....
INVITATIONS MENAKA CARD CHENNAI - INDIA
அழைப்பிதழ்கள் அனைத்தையும் தரமாகக் குறித்த தவணையில்
மலிவு விலையில் அச்சிட்டுக்கொள்ள நீங்கள் நாடவேண்டியது
தமிழாலயம் ISHWARA
19 rue Cail - 75010 Paris
Tél.: 01 53 26 59 21 Fax: 01 53 26 90 88

SKY ROSE
Installation Satellite & Electronics
(Viaccess)
Nekkasat - Opticum- Xsat -Strong-
Medion - Aston
Eurobird 9° Hotbird 13° LNB 30€
14, Rue Cail
75010 Paris
Tél : 01 77 17 63 58
Port : 06 11 15 30 00

RATHUS COIFFURE
உங்கள் எண்ணம் போல்
சிகை அலங்காரம்
செய்து கொள்ள
Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்
11-13 RUE MORIN, 93700 DRANCY Tél.:09 53 04 00 57

தங்க மாளிகை
THANKA MALIKAI
தங்க நகைகள்
ஆடை அணிகலன்கள்
அன்பளிப்பு பொருட்கள்...
199 rue de Fbg.St.Denis
75010 PARIS
01 42 05 39 05

NEW MADRAS
Spécialitées Indiene & Srilankaise
உங்கள் விருப்பம் போல்...விழாக்கள்,
கொண்டாட்டங்களுக்குத்தேவையான
உணவு வகைகளை
பெற்றுக்கொள்வதற்கு உகந்த இடம்!
5 Rue Caill - 75010 PARIS
Tél : 01 42 05 08 94

AMBAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.St.Denis-75010 PARIS

M.S Photo
உங்கள் மங்கள
நிகழ்வுகளை
பதிவாக்கிக்கொள்ள.
RATHAN & RUBHAN
Tél: 06 69 08 29 38

SRI MAHAL
உங்கள் அனைத்து
மளிகைத்
தேவைகளுக்கும்.
197, rue du Fbg St.Denis
75010 PARIS
Tél : 01 46 07 83 12

TEXTILE DAYAN
அனைத்து விதமான
ஆடைகளுக்கும்!
01 46 07 97 56 / 06 16 96 69 93

Nisan Euro Exo Marché
உங்கள்
சகல மளிகைத்
தேவைகளுக்கும்
ஒரே இடம்!
01 48 35 45 03
37, Av.Paul Vaillant Couturier
93120 La Courneuve

Kings Travels
நியாயமான கட்டணம்
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்.
30,Rue Philipe de Girard - 75010 PARIS
Tél : 01 42 09 19 09 - 01 40 38 18 27
e-mail : kingstravels@orange.fr
M°: La Chapelle / Gare du Nord

உங்கள் அரசனின்!
The First & Best Tamil Tailors in Paris
GOUNA TAILORS
பரிஸ் நகரில்
தமிழரின்
முதல்தரமான
தையலகம்.
8 Rue Cail 75010 PARIS
TÉL : 01 42 05 03 95

செல்பேசிகள் - கணினிகள் - உதிரிப் பாகங்கள்
திருத்தவும் வாங்கவும்
DIALOGUE GSM
26, rue Perdonnet - 75010 Paris
06 82 51 51 58


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிரணிக்குள் வெடித்துள்ள உள்வீட்டு முரண்பாடு

# கடாஃபிக்கான வெற்றி வாசலைத் திறந்துவைக்குமா?

லிபியா மீதான நேட்டோவின் தாக்குதல்கள் தற்போது ஒரு மந்த நிலையை அடைந்துள்ளன. முஸ்லீம்களின் நோன்பு நாட்களில் தாக்குதல்களை மேற்கொண்டால் அரபுலகத்தின் எதிர்ப்பைச் சம்பாதிக்கவேண்டிவரும் என்பதே இந்த தாக்குதல் மந்தநிலைக்கு காரணம் என்கின்றனர் ஆய்வாளர்கள். நேட்டோவின் இந்த மென்போக்கை எதிரணியின் தலைமையும் கண்டித்து குற்றம் சாட்டியுள்ளது. நேட்டோ இவ்வாறு மென்போக்கைத் தொடர்ந்தால் முடிவுறதா போராக இது நீளும் என்று குறிப்பிட்டுள்ள எதிரணியின் தலைமை, உடனடியாக விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஐநாவை வலியுறுத்தியுள்ளது.

கேணல் முவம்மர் கடாஃபியை ஆட்சியை விட்டு அகற்றவும், அழிக்கவும் மேற்கொண்ட தாக்குதல்களும், நடவடிக்கைகளும் எதிர்பார்த்த பலனை மேற்குலகத்திற்கு இன்றுவரை பெற்றுக்கொடுக்கவில்லை. ஆனாலும், கடாஃபியை அகற்றும் நடவடிக்கையில் இருந்து இன்னமும் மேற்குலகம் பின்வாங்கிவிடவில்லை என்பதை அதன் தொடர்ச்சியான நடவடிக்கைகள் உணர்த்திவருகின்றன.



இந்நிலையில் திரிபோலியிலிருந்து 450 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள சிர்டே எனும் இடத்திற்கு சென்று தனது பழங்குடி ஆதரவாளர்களைச் சந்தித்துடன், அவர்கள் முன்பாக கேணல் கடாஃபி உரையாற்றியுள்ளார். அங்கு 'போராட்டக்காரர்கள் ஒரு போதும் வெற்றி பெற முடியாது' என்று குறிப்பிட்ட கடாஃபி, 'அவர்கள் வெறுங்கையுடன் திரும்புவது உறுதி' என்றும் தெரிவித்தார். 'பேச்சுவார்த்தை என்பதற்கே இடமில்லை. முதல் முறையாக பொதுமக்கள் ஆயுதமேந்தி போராடுகின்றனர். இவர்களுக்கு ஆதரவாக நேட்டோ படைகளின் பிரசாரமும், ஐக்கிய நாடுகள் சபையின் பின்புலமும் உள்ளது. இருப்பினும் போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்தப்போவதில்லை' என்று குறிப்பிட்ட அவர், 'போர் ஒன்றுதான் பிரச்னைக்குத் தீர்வு. அதனை எதிர்கொள்ள தனது அரசு தயார்' என்றும் குறிப்பிட்டார். 'போராட்டக்காரர்கள் மிகவும் மூர்க்கத்தனமாக தாக்குவர். அதை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும்' என்று தனது ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, மேற்குலகின் தற்போதைய தாக்குதல் மந்தநிலையை தனக்கு சாதமாக்கிக்கொண்டு கடாஃபியின் படைகள் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக கூறப்படுகின்றது. தனது இராணுவ தளவாடங்களை நேட்டோவின் தாக்குதலில் கடாஃபியின் படை பெருமளவில் இழந்திருந்தாலும், அதன் படைக் கட்டமைப்பு இன்றுவரை தக்கவைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இந்நிலையில், தாக்குதல்களின்போது பின்வாங்கும் கடாஃபியின் படைகள், தமக்கு சாதகமான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி எதிரணியினர் மீது பாரிய அழிவுத்தாக்குதலை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

லிபியாவின் மேற்கு பகுதியில் கடந்த செவ்வாய் (26) இரவு முதல் மறுநாள் புதன்கிழமை வரை எதிரணியினருக்கும், கடாஃபி இராணுவத்துக்கும் இடையே கடும் யுத்தம் நடந்துள்ளது. இதில் கடாஃபி இராணுவம் நடத்திய தாக்குதல்களில் எதிரணியைச் சேர்ந்த 190 பேர் வரை பலியாகியுள்ளதாக லிபியா அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிரணி பாரிய அழிவைச் சந்தித்துள்ள இந்நிலையில்தான், எதிரணிப் படையின் தலைமைத் தளபதி அப்துல் ஃபடா யூனுஸ் (Abdel Fattah Younes) கடந்த வியாழக்கிழமை (28) படுகொலை செய்யப்பட்டுள்ளார். பெங்காசி நகருக்கு சென்று கொண்டிருந்த அவரை வழிமறித்த் துப்பாக்கி ஏந்திய குழு ஒன்று சுட்டுக்கொன்றுவிட்டு தப்பியோடிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இராணுவ விடயம் ஒன்று தொடர்பில் தம்முடன் பேச்சுவார்த்தை நடத்த பெங்காசிக்கு வந்துகொண்டிருந்த போதே இவர் கொல்லப்பட்டுள்ளதாக எதிரணி அமைப்பு தெரிவித்துள்ளதுடன், கடாஃபி ஆதரவு இரகசிய படையினராலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் அறிவித்தது.

ஆனால் அதனை மறுத்துள்ள லிபிய அரசாங்க அதிகாரி மூசா இப்ராகிம், யூனஸ் கொலை செய்யப்பட்டதற்கு அல்–ஹைடாதான் காரணம் என்றும் அவரது மரணம் எதிரணியினருக்கும் கடாஃபியை பதவியில் இருந்து இறக்க வேண்டும் என்று ஆசைப்படும் ஐரோப்பிய சக்திகளுக்கும் ஏற்பட்ட பின்னடைவு என்றும் தெரிவித்தார்.

ஆனால், இவரது கொலைக்கு உள்வீட்டு முரண்பாடுகளே காரணம் என்று கூறப்படுகின்றது. லிபிய இராணுவத்தில் தளபதியாகவும், கடாஃபியின் அரசில் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களில் இருந்தவர் பதா யூனஸ். ஆனால், அங்கிருந்து வெளியேறி எதிரணியின் படையில் சேர்ந்தார் ஜெனரல் அப்தல் பதா யூனஸ். எதிரணிகளின் கடாஃபி இராணுவம் மீதான தாக்குதல்களுக்கு இவரது கட்டளைகள் பெரிதளவில் உதவிபுரிந்தன. இதனால், எதிரணியின் முக்கிய கட்டளைத் தளபதிகளில் ஒருவராகவும், எதிரணியின் முக்கிய தலைவர்களில் ஒருவராகவும் இவர் மாற்றமடைந்தார். ஆனால், கடாஃபியின் ஒற்றர்களில் ஒருவராக இவர் இருக்கக் கூடும் என்ற சந்தேகம் எதிரணியினர் சிலர் மத்தியில் இருந்துவந்தது. எதிரணியின் முக்கிய சில தாக்குதல்கள் இழப்புக்களுடன் தோல்வியடைந்த நிலையில், இவருடனான முரண்பாடுகள் வெளிப்படையாக அதிகரித்திருந்தன. இந்நிலையில்தான், இவரது கொலை இடம்பெற்றுள்ளது. அத்துடன், இவரது குடும்பத்தினர் கடாஃபியின் இராணுவத்தினரின் பிடியில் இருப்பதாகவும், அவர்களுடன் இவர் தொடர்புகளைப் பேணிவந்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் இருந்துவந்தன. இந்நிலையிலேயே பேச்சுவார்த்தைக்கு என அழைத்து எதிரணியினரே இவரைச் சுட்டுக்கொன்றுள்ளதாக குற்றம்சாட்டப்படுகின்றது. இதற்கிடையில் யூனசை விசாரணைக்காக வரவழைத்த எதிரணியின் தலைவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இவரது கொலை எதிரணி–யினரிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கலாம், இதனால் எதிரணியினரே பிளவுகள் அதிகரித்து அது கடாஃபியின் படையினருக்கு சாதகமாக அமைந்துவிடலாம் என்பதால், இவரது கொலைக்கான பழி கடாஃபியின் படையினர் மீது போடப்பட்டுள்ளதுடன், இவரது மரணத்தை முன்னிட்டு மூன்று நாட்களை துக்கதினமாகவும் எதிரணி அறிவித்தது. அத்துடன், அவரது இறுதி நிகழ்வை கடந்த 29ம் திகதி மிகப் பிரமாண்டமாகவும் நடத்திமுடித்துள்ளது. எனினும் இவரது மரணம் எதிர் படைக்கு ஏற்பட்ட பின்னடைவாக கருதப்படுகிறது. இதன் தாக்கம் அடுத்துவரும் தாக்குதல்களில் எதிரொலிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுஇவ்வாறிருக்க, லிபிய எதிரணிக்கு இராஜதந்திர அங்கீகாரம் வழங்குதல் அல்லது வாஷிங்டனில் தூதரகத்தை அமைத்தல் உள்ளிட்ட பிரதிநிதித்துவத்தை வழங்குவது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருவ



அப்துல் ஃபடா யூனுஸ்

தாக சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ள கருத்து ரஷ்யாவை சீற்றமடைய வைத்துள்ளது.

வாஷிங்டனில் லிபிய தூதரகத்தை மீண்டும் திறப்பது குறித்த விண்ணப்பம் (எதிரணியின்) தேசிய இடைக்கால சபையிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. இது குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் மாக் ரோனர் தெரிவித்திருந்தார்.

இராஜதந்திர ரீதியிலான அங்கீகாரம் மற்றும் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து நாம் தேசிய இடைக்கால சபையுடன் பேசி வருகின்றோம். எமது இணக்கத்துடன் இராஜதந்திரிகளை நியமிப்பதற்கும் வாஷிங்டனில் தூதரகத்தை மீண்டும் திறப்பதற்கும் சட்டபூர்வமாகச் சாத்தியம் உள்ளதெனவும் அவர் தெரிவித்தார். லிபிய அரசை அங்கீகரித்து தூதரகத்தை மீண்டும் திறப்பதற்கு தேசிய இடைக்கால சபை விரும்புவதாகவும் ரோனர் தெரிவித்தார். இராஜதந்திர அங்கீகாரம், பிரதிநிதித்துவம் ஆகிய விடயங்கள் குறித்துப் பேச வேண்டிய தேவையுள்ளது. நாம் அவை குறித்து ஆராய்கின்றோம். தேசிய இடைக்கால சபையுடன் ஆராய்ந்து வருகின்றோம். இந்நிலையில், அவர்கள் தூதரகத்தை திறப்பதற்கான உத்தியோகபூர்வ விண்ணப்பத்தினை விடுத்துள்ளனர். அது குறித்து நாம் கலந்தாலோசித்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், இதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறுகையில், எதிர்ப்பாளர்களை அங்கீகரித்து இருப்பவர்கள் உள்நாட்டு போரில் ஒருதரப்புக்கு ஆதரவாளர்களாக மாறிவிட்டனர். இது பாரபட்சமானது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

- விவேகன் -

(24ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lebara mobile

**5 ct*/min fixe**
Bangladesh, Chine, Inde, Maroc, Vietnam

**9 ct*/min fixe**
Algérie, Royaume-Uni, Pakistan, Pologne, Roumanie, Sri Lanka, Turquie

**25 ct*/min mobile**
Algérie, Côte d'Ivoire, Mali, Maroc, RDC, Sénégal

| | Fixe ct*/min | Mobile ct*/min |
|---|---|---|
| Algérie | 9 | 25 |
| Angola | 19 | 29 |
| Bangladesh | 5 | 10 |
| Bénin | 15 | 19 |
| Cameroun | 15 | 19 |
| Cap-Vert | 24 | 33 |
| Chine | 5 | 9 |
| Comores | 19 | 39 |
| Congo | 15 | 29 |
| Côte d'Ivoire | 15 | 25 |
| DOM | 12 | 35 |
| Egypte | 10 | 10 |
| Etats-Unis | 9 | 9 |
| Gabon | 15 | 29 |
| Gambie | 49 | 49 |

| | Fixe ct*/min | Mobile ct*/min |
|---|---|---|
| Ghana | 19 | 35 |
| Guinée | 29 | 39 |
| Haïti | 29 | 29 |
| Ile Maurice | 19 | 19 |
| Inde | 5 | 7 |
| Madagascar | 25 | 29 |
| Mali | 15 | 25 |
| Maroc | 5 | 25 |
| Mauritanie | 29 | 39 |
| Nigéria | 15 | 19 |
| Pakistan | 9 | 10 |
| Pologne | 9 | 19 |
| RDC | 15 | 25 |
| Roumanie | 9 | 19 |
| Royaume-Uni | 9 | 29 |

| | Fixe ct*/min | Mobile ct*/min |
|---|---|---|
| Russie | 9 | 15 |
| Sénégal | 15 | 25 |
| Sri Lanka | 9 | 10 |
| Tchad | 29 | 29 |
| Thaïlande | 1 | 9 |
| Togo | 25 | 25 |
| Tunisie | 19 | 29 |
| Turquie | 9 | 15 |
| Ukraine | 15 | 29 |
| Vietnam | 5 | 15 |

**Appels nationaux**
France Métropolitaine
**15 ct*/min fixe mobile**

## சர்வதேசமெங்கும் உங்கள் செல்பெசியில் அழையுங்கள்
www.lebara.fr

Altadis Distribution France · saf · epay · extenso Telecom · ingenico · phoneo · SCAP · Schlecker · SRD · RELAY · Logicartes · PANINI

*Tarifs promotionnels du 9/5/2011 au 30/6/2011, dans la limite des 10000 premiers clients à cette offre. Les appels vers le réseau fixe de l'opérateur marocain Wana (numéros commençant par +212 526 / 527 / 533 / 534 / 546) sont tarifés au prix Maroc mobile (0,25€/min). Retrouvez nos tarifs à jour vers l'ensemble des destinations fixes et mobiles, et nos conditions générales de vente et d'utilisation du service sur www.lebara.fr. Coût fixe de connexion : 0,12€ par appel sortant. Disponibilité non garantie dans l'ensemble du réseau Phonéo.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மனதுக்குள் குட்டிபோடும் மயில் இறகுகள்.

ச.ச.முத்து

இறகுகள் 53:1

# கண்களை திறக்கவைத்த இரண்டு உரைகள்!

கறுப்புயூலையின் கனத்த நினைவுகளுடனான மாதம் எம்மை சற்றுமுன்புதான் கடந்துபோயிருக்கிறது. கறுப்பு யூலை என்பது காலகாலமாக தென்னிலைங்கையில் வேர் ஆழப்பதிந்துபோய் வாழ்ந்துகொண்டிருந்த தமிழர்கள் மீதும், தென்னிலைங்கையில் வேலைநிமித்தமும், தொழில்ரீதியாகவும் தங்கியிருந்த தமிழர்கள் மீதும் நடாத்தப்பட்ட கொலைத் தாக்குதல் மட்டுமல்ல. அது ஒரு கலவரம் அல்ல. அது ஒரு வகையில் இனச்சுத்திகரிப்பு. இன்னுமொரு வகையில் அந்த 83ம் ஆண்டு யூலையில் நிகழ்த்தப்பட்டது அரசாங்கத்தின் ஆதரவுடனான இனப்படுகொலையே. 83ம் ஆண்டு யூலை 24ம் திகதி ஆரம்பித்த இனப்படுகொலை தமிழர்களை அடையாளம் கண்டு அடித்தும், எரித்தும், வெட்டியும், சுட்டும் கொலைசெய்து வெறியாட்டம் ஆடிக்கொண்டிருந்த வேளையிலும் தமிழர்கள் இதுவும் முந்தையகாலங்களில்



நடாத்தப்பட்ட கலவரங்களைப்போன்ற ஒன்று என்றுதான் எண்ணியபடிக்கு ஓடிக்கொண்டிருந்தார்கள்.

83 யூலை படுகொலைகள் ஆரம்பித்து ஐந்து நாட்களுக்கு எதுவும் பேசாமல் மௌனமாக எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டும் இருந்த சிங்களதேச சனாதிபதி 83 யூலை 28ம் திகதி மாலையில் தனது நிஸ்டையை கலைத்துவிட்டு நாட்டு மக்களுக்கு (தமது நாட்டு) ஆற்றிய உரை தான் முழுத்தமிழினத்தின் கண்களைமுழுதாக திறக்கவைக்க பேச்சு ஆகும்.

83 யூலை படுகொலைகள் ஏற்கனவே தாம் எதிர்பார்த்திருந்த ஒன்று எனவும் சிங்களமக்களின் எழுச்சி இது என்றும் அவர் பேசிய பேச்சின் எந்த இடத்திலும் தமிழர்களுக்கு எதிராக தென்னிலைங்கையில் நடைபெற்றுக் கொண்டிருந்த இனக்கொலைகளை கண்டிக்கவோ அதனை செய்தவர்களை தண்டிக்கப்போவதாகவோ தெரிவிக்கவேயில்லை. நடைபெற்றுக்கொண்டிருந்த படுகொலைகளும், கொள்ளைகளும் நகர்ப்புற காடையர்களின் நடவடிக்கை என்பதிலும் பார்க்க அது சிங்கள வெகுஜன எழுச்சி என்று தான் சிங்களதேச தலைவர் ஜெயவர்த்தனா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்து இருந்ததார். அத்துடன் நாடு பிரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு எதிராக சிங்கள மக்கள் மேலும் எழுச்சியடைய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இலங்கைத்தீவு என்ற ஒரு தேசத்துக்குள் ஒருமித்து வாழலாம் என்ற கனவில் இருந்த எஞ்சிய தமிழர்களின் ஐக்கியக் கனவுக்குள் கொள்ளி சொருகியது அந்த உரை. 42 நிமிடங்களில் ஜெயவர்த்தனாவின் அந்த உரை முடிந்துவிட்டது. ஆனால் அது ஏற்படுத்திய வடுவும், ஏமாற்றமும் இன்றுவரை அழியாமல் தொடர்கிறது. அவர் இதற்கு முன்னரும் 1957ல் 2500 ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் சிங்கள மொழியினதும், இனத்தினதும் இருப்புக்காக தான் தலைமையேற்க தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக அவர் இருந்த போதே பேசியவர்தான். அதைவிட 1977ம் ஆண்டு தென்னிலங்கையில் தமிழர்களுக்கெதிரான கொலை வெறியாட்டத்தின்போது 'போர் என்றால் போர்' என்ற பிரகடனத்தை தமிழர்களை நோக்கி ஏவியவர்தான். ஆனால் அவை ஏற்படுத்திய தாக்கங்களைவிட 1983ம் ஆண்டின் யூலை 28ம் திகதி சிங்கள தேசத்தின் நிறைவேற்று அதிகாரங்கள் நிரம்பிய அதிஉத்தம ஜனாதிபதியாக அவர் ஆற்றிய உரை ஏறத்தாழ முழுத் தமிழினத்தின் கண்களையும் திறக்கவைத்தது ஆகும்.

சிங்களதேசத்தின் அரச இயந்திரத்தின் எந்த ஒரு சிறு அமைப்பு கூட தமிழர்களை காப்பாற்ற ஒருபோதும் முன்வராது என்றும் தமிழர்களுக்கான பாதுகாப்பும், நிரந்த அமைதியும் தமிழர்களின் பாரம்பரிய நிலத்திலேயே கிடைக்கும் என்ற பாடத்தை யூலை 28ம் திகதி ஜெயவர்தனாவின் உரை ஆழமாகப்புகட்டியது. ஒருதேசத்து ஜனாதிபதியே அந்த தேசத்தின் மக்களாக கருதப்பட்ட ஒரு பகுதி மக்கள் மீதான கொலை வெறித்தாக்குதலுக்கு இன்னொரு பகுதி மக்களை துாண்டிவிட்ட உரைபற்றி அந்த நேரத்தில் வெளியான சர்வதேச ஊடகமான 'எக்னமிஸ்ட்'ல் வெளிவந்த கட்டுரை மிகத்தெளிவாகவே அந்த உரையின் கொலைவெறியை சுட்டிக்காட்டியது.

"on july 28, president Jeyawardene spoke on TV........Not a syllable of sympathyFor the tamil people or any explicit rejection of the sprit of vengeance.... Next day.colombo was a battlefield.More than 100 people are estimated to have been killedOn that Friday alone,and 30,000 tamils fled to refugee camps".. (யூலை 28.. யூலை 28 ஜனாதிபதி ஜெயவர்த்தன தொலைக்காட்சியில் உரையாற்றினார். அவரது பேச்சில் இரகத்திற்குரியதான அறிகுறியோ அல்லது பழிவாங்கலை நிறுத்துவதற்கான மனநிலையோ இருக்கவில்லை. அடுத்தநாள் கொழும்பு போர்க்களமானது. 100ற்கும் மேற்பட்டோர் அந்த வெள்ளிக்கிழமையில் மட்டுமே கொல்லப் பட்டனர். 30 ஆயிரம் தமிழர்கள் அகதிமுகாமிற்கு சென்றனர். (Economist,6 August 1983).


**ராஜீவ் காந்தியுடன் இராஜதந்திர நரியான ஜெயவர்த்தனா செய்துகொண்ட ஒப்பந்தம் சிங்கள நலனுக்கானது தான். அது தமிழர்களுக்கு எதுவும் தரப்போவதில்லை என்று கண்களை திறந்த உரை அது. மிகவும் தெளிவான குரலில் எந்தவித பிசிறும், ஐயமும் இன்றி ஆற்றப்பட்ட உறுதி நிறைந்த அந்த உரையின் 'போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் போராட்ட இலட்சியம் மாறாது' என்ற குரல் என்றும் என்றும் எமக்கான பாதையை அடையாளம் காட்டியபடிக்கே நீளும்.**

## கண்களை முற்றாக திறக்க வைத்த இன்னொரு உரை.!

சிங்களபேரினவாத அரசுகளால் காலகாலமாக அடக்குமுறைக்குள்ளும், உரிமைபறிக்கப்பட்டு, அழிக்கப்பட்டுவந்த தமிழ்மக்களுக்கு ஏதோ இந்திய தேசத்தின் மீதான நம்பிக்கைகள் ஆழமாக வேரோடி இருந்தன. துட்டகைமுனு காலத்திற்கு முன்பிருந்தே இந்தியா மீது அவர்களுக்கு இருந்த வெறுப்புகளும், காழ்ப்பும் இயல்பாகவே தமிழர்களுக்கு இந்தியாவை நேசிக்க வைத்தது. தங்கள் மீது நடாத்தப்படும் எந்தவொரு பாரிய சிங்கள கோலைவெறியாட்டத்தையும் இந்தியா ஒருபோதும் சகித்துக்கொண்டு இருக்காது என்றே ஈழத்தமிழர்கள் நம்பிவந்தனர்.

அத்தகைய இந்தியா 1987ம்ஆண்டில் சிங்களதேசத்துடன் ஒரு ஒப்பந்தத்தை செய்துகொண்டது. எப்படியான சந்தர்ப்பத்தில் அந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது என்று பாருங்கள்.

ஒப்பிரேசன் லிபரேசன் படை நடவடிக்கை மூலம் வடமராச்சியின் நடுப்பகுதிவரை உள்நுழைந்து நிலை



கொண்டிருந்த சிங்களப்படைகள் மீது மில்லர் தற்கொடைத் தாக்குதல் நடாத்தி நெல்லியடியில் சிதறடித்து, எஞ்சிய சிங்களப்படை அனைத்தினதும் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டபோதுதான் ஒப்பந்தம் உருவானது. (ஒப்பந்தத்தின் பின்னர் சிங்கள நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சிங்களதேசதலைவர் ஜெயவர்த்தனா 'பிரபாகரன் நாடாளுமன்றத்து நடுமண்டபத்துக்கும் வந்திருப்பார். இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்படாவிட்டால்' என்று சொன்னதைப் போல.)

எங்களுக்கு அருகில் இருக்கும் பிரமாண்ட நிலப்பரப்பு கொண்ட தேசம், எங்களுடன் தொப்புள்கொடி உறவுகளையும், கலாச்சார தொடுப்புகளையும் கொண்டிருந்த தேசம் எமது எதிரியுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் எங்களை காப்பாற்றுவதற்காகவே என்று எமது மக்கள் ஆழமாக நம்பினார்கள். கனரக ஆயுதங்களுடனும், டாங்கிகளுடனும் எமது செம்மண் தோட்டங்களை உழுதுகொண்டுவந்த பாரததேச படையை எமது மக்கள் காக்கும் தேவர்களாகவே நினைத்து வரவேற்பு அளித்தனர். மாலை அணிவித்தனர். பதினைந்து வருடத்து விடுதலைப் போராட்டம் மோசமான முறையில் கருவறுக்கப்படும் அபாயம் புரியாமலேயே மக்கள் பாரதப் படையை நோக்கினர்.

இலங்கைத்தீவு என்ற ஒற்றை ஆட்சிக்குள் தமிழரின் உரிமைகளை பேரம்பேசவே இந்தியபடைகள் வந்து இறங்கி இருக்கின்றன என்று முழுதாக் புரியாமல் எமது மக்கள் இருந்தவேளையிலேயே அந்த வரலாற்றுப்புகழ்மிக்க உரை மக்களுக்கு முன்பாக வருகின்றது.

சுதுமலை அம்மன் கோவில் முன்னால் உள்ள பரந்த வெளி. 1987 ஒகஸ்ட் 4ம் திகதி. இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் திரண்ட மாபெரும்நிகழ்வு அது. இந்திய–சிறீலங்கா ஒப்பந்தம் பற்றிய தங்களது நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவிக்கும் நிகழ்வு அது. தங்கள் தேசியத் தலைவர் அங்கு தோன்றுவார் என்பதை

(24ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு தமிழகத்தில் வெளியிடப்பட்டது



புலம்பெயர்ந்த நாடுகள் எங்கும் வெளியிடப்பட்ட அவுஸ்திரேலியா பேராசிரியர் முருகர் குணசிங்கம் அவர்கள் எழுதிய 'இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு தமிழகம் மதுரையில் கடந்த 23.07.2011 சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.
இந்நிகழ்வில் உலகத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் இந்நூலை வெளியிட்டுவைத்து சிறப்புரை நிகழ்த்தினார்.



# ஸ்ராஸ்பூர்க் – பரி



கடந்த 23.07.2011 ஸ்ராஸ்பூர்க் நகரில் இருந்து பரிஸ் நகரம் நோக்கி ஆரம்பிக்கப்பட்ட இப்பயணம், கடந்த சனிக்கிழமை நிறைவடைந்தது. பல்வேறு மாநகரங்களினூடாகவும், நகரங்கள், கிராமங்களின் ஊடாகத் தொடர்ந்த இந்த ஈருருளிப் பயணத்திற்கு நகர முதல்வர்கள், பத்திரிகையாளர்கள் முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். தமிழ் மக்களின் நிலைமை குறித்து பிரான்சின் வெளிவிவகார 'அமைச்சிற்கு தாங்களும் இயன்றவரை அழுத்தம் கொடுக்க இருப்பதாகவும் மாநகர முதல்வர்கள் கூறியுள்ளனர்.

சனிக்கிழமை பி.பகல் பரிஸ் நகரத்தில் வெளிவிவகார அமைச்சு அமைந்துள்ள invalides என்ற இடத்தில் கவனயீர்ப்பு நிகழ்வு முடிவடைந்தது. எனினும், பின்னர் பரிசின் புறநகர்ப் பகுதியில் நடைபெற்ற தமிழ்ச்சோலை இல்ல மெய்வல்லுனர் போட்டி நடைபெற்ற இடம்வரை இவர்கள் தமது பயணத்தை மேற்கொண்டனர். அங்குகூடி நின்ற மாணவர்களாலும், மக்களாலும் இவர்கள் வரவேற்கப்பட்டதுடன், அவர்கள் மத்தியில் கருதுக்களையும் வழங்கினர்.

இப்பயணத்தில் பங்கேற்றவர்களுடன் ஈழமுரசு சந்தித்துக் கலந்துரையாடியது. இதன்போது இப்பயணத்தில் ஆறு பேரில் ஒருவராக பிரெஞ்சு நாட்டவர் ஒருவரும் பங்கேற்றிருந்தார். 29 வயதான Joseph mairiniac என்ற இளைஞர், தமிழ் மக்களின் போராட்டத்திற்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காகவே இந்த ஈருளிப் பயணத்தில் பங்கேற்றதாகவும், தொடர்ந்தும் தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் பங்கேற்க தான் விரும்புவதாகவும் தெரிவித்தார்.



கிருபானந்தன் நடராசா (வயது 41)

போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை போர்க் குற்றவாளிகளாக அறிவிக்க கோரியும், அவர்கள் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக ஆஜராக வேண்டும் எனவும் வலியுறுத்தி தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்தும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

எமது சுதந்திரப்போராட்டம் இன்று ஆரம்பமாகி 63 வருடங்கள் ஆகின்றது. 2009 மேமாதம் எமது ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டபின்னர்,

# லெப்.கேணல் விக்ரர் (ஒஸ்கா) நினைவு உதைபந்தாட்



ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் தமிழர் விளையாட்டுத்துறை-பிரான்சு மாவீரர் லெப்.கேணல் விக்ரர் (ஒஸ்கார்) அவர்களின் ஞாபகார்த்த 8வது ஆண்டு நடாத்தும் அனைத்துலக ரீதியாலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி-2011 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடர் ஏற்றலினை முன்னைநாள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர், திரு. ப.ஜெயானந்தமூர்த்தி அவர்கள், ஏற்றிவைக்க அதனைத் தொடர்ந்து கொடியேற்றல் நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழீழ தேசியக் கொடியினை விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு.சுதர்சன் அவர்களும், ஐரோப்பியக் கொடியினை நெதர்லாந்து பொறுப்பாளரும், பிரெஞ்சுக் கொடியினை தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் திரு. யோசேப் அவர்களும் ஏற்றிவைத்தனர். ஈகைச்சுடரினை மாவீரர் கடற்கரும்புலி கப்டன் தமிழ்மாறனின் சகோதரர் ஏற்றி வைத்துதகைத்தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனக் கொடியினை அதன் தலைவர் திரு. சங்கராஜா அவர்கள் ஏற்றி வைத்ததோடு உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகின.

இப் போட்டிகளில் சுவிஸ், நெதர்லாந்து நாட்டுகளில் இருந்து, 4 கழகங்களும், பிரித்தானியாவில் இருந்தும், பிரான்சில் இருந்தும் கழகங்கள் பங்குபற்றியிருந்தன. 2 மைதானங்களில் நடைபெற்ற போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன. தண்டனை உதைகள் மூலம் கழகங்கள் வெற்றியீட்டி தெரிவுக்கு வந்திருந்தன.

15 வயதிற்குட்பட்டவர்களுக்கான போட்டியில் 1ம் இடத்தை தமிழர் விளையாட்டுக்கழகம்-93 பிரான்சு அணியினரும், 2ம் இடத்தை தமிழர் விளையாட்டுக்கழகம் பிரான்சு அணியும், 3ம் இடத்தை சார்ல்ஸ் அன்ரனி விளையாட்டுக்கழகம் சுவிஸ் அணியினரும் பெற்றுக்கொண்டனர்.

பெரியவர்களுக்கான போட்டியில் 1ம் இடத்தை தமிழர் விளையாட்டுக்கழகம்-93 பிரான்சும், 2ம் இடத்தை உதயசூரியன் விளையாட்டுக்கழகம் பிரான்சும், 3ம் இடத்தை தமிழர் விளையாட்டுக்கழகம் நெதர்லாந்தும் பெற்றுக்கொண்டன.

மாவீரர் லெப் கேணல் விக்ரர் (ஒஸ்கா) அவர்களின் நினைவாக 8வது ஆண்டாக நடாத்தும் அனைத்துல ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் பங்கு கொள்ள வேண்டும் சிறப்பிக்க வேண்டும் தாய் மண்ணுக்கும், அதற்காக உயிர்நீத்தவர்களின் நினைவாக முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு நிகழ்விற்கும் மதிப்பளிப்போம் என்ற உணர்வுடன் வெற்றி எடுக்க வேண்டும் என்பதற்கு அப்பால் கலந்து கொள்வதே பெருமை என்ற ரீதியில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்து கலந்து கொண்ட வீரர்கள் அதன் பொறுப்பாளர்கள் தமது நன்றியை தெரிவித்திருந்தனர்.

சிறப்பாக கலந்து கொண்டு மாவீரர் லெப்.கேணல் விக்ரர் அவர்களின் நினைவுச் சுற்றுக்கிண்ணத்தை வழங்கிய திரு.ஜெயானந்தமூர்த்தி அவர்கள் தனது உரையில் காலையில் இருந்து மாலை வரை இந்த உதைபந்தாட்டப் போட்டியை கண்டுகளித்ததாகவும், ஒவ்வொரு வீரர்களுடைய திறமைகளை பாராட்டுவதாகவும், இந்த திறமைகள் வீரர்களை வழிபடுத்துனர்களால் சரியான பாதையில் வழிநடத்திச்சென்று தமிழ் இனத்திற்கு சர்வதேச ரீதியில் பெருமை சேர்க்க வேண்டும் என்றும் உரையாற்றினார். முதல் மூன்று கழகங்களுக்கான பணப்பரிசில்களும் நன்கொடையாளர்களால் வழங்கப்பட்டது. வெற்றி பெற்ற வீரர்களுக்கும், கழகங்களுக்கும் ஈழத்தமிழர் உதைபந்தாட்ட சம்மேளத்தின் தலைவர், மற்றும் உறுப்பினர்கள் பரிசில்களை வழங்கி மதிப்பளித்தனர். இறுதி நிகழ்வாக சம்மேளனக் கொடியிறக்கலுடன், தேசக்கொடிகள் மற்றும் ஐரோப்பிய கொடியும் இறக்கி வைக்கப்பட்டன. நம்புங்கள் தமிழீழம் பாடலுடன் தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம் தாரகமந்திரத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.









www.bloomartstudio.blogspot.com
0649527101
Basic
2D Graphics
2D Animation
& Some more..



உங்கள் அனைத்து மொழி பெயர்ப்புத்தேவைகளுக்கும்
அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்கள்.
jorelle traduction
தமிழ், சிங்களம், ஆங்கிலம்
மற்றும் அனைத்து சட்டபூர்வ
ஆலோசனைகளுக்கும்
மொழி பெயர்ப்புக்களுக்கும்...
01.40.88.07.57
22 rue Perdonnet, 75010 PARIS
ஈழமுரசுக்கு அருகாமையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஸ் ஈருருளிப் பயணம் நிறைவடைந்தது




புலம்பெயர் மக்களிடம் எமது விடுதலைப்போராட்டத்தின் பணி ஒப்படைக்கப்பட்டு, சென்ற வருடம் யூலை மாதம் பிரித்தானியாவில் இருந்து சிவந்தன் நடைப்பயணம் மேற்கொண்டார். அவர் ஆரம்பித்துவைத்த போராட்டத்தின் தொடர்ச்சியாக நாங்கள் இன்று அகிம்சை வழிப் போராட்டங்களை நடத்திவருகின்றோம். அந்தவகையில் இம்முறை கறுப்பு யூலை நினைவுநாளை ஒட்டி யூலை 23 அன்று பிரெஞ்சு மக்களிடம் ஒருவிழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும், பிரெஞ்சு அரசிடம் நீதிகேட்டும் இந்தப்போராட்டத்தை ஆரம்பித்திருந்தோம். உண்மையில் எமது ஈருருளிப் பயணம் மலைகளும் பள்ளத்தாக்குகளும் ா பகுதிகளாக இருந்தும் நாங்கள் அங்கு எங்கள் மக்கள் படும் வேதனைகளையும் ங்களையும் மனதில் நிறுத்தி அவர்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழவும் ழம் தான் நிரந்தரத் தீர்வு என்பதை மனதில் நிறுத்திக்கொண்டும் எமது ஈருருளிப் த்தை ஆரம்பித்தோம்.

நாங்கள் எந்த இலக்கை வைத்து ஆரம்பித்தோமோ அந்த இலக்கு இன்று வேறியுள்ளது. அதாவது, நாங்கள் எமது பயணத்தை ஆரம்பித்த ஒவ்வொரு நாளும் ளுமன்ற உறுப்பினர்களையும்அந்தந்த நகர பிதாக்களையும் சந்தித்து எமக்கு ங்கா சிங்கள அரசால் இளைக்கப்பட்ட கொடுமைகளை விளங்கப்படுத்தி தமிழன் காத் தீவில் தனித்து வாழ்வதுதான் சுதந்திரம் என்று அவர்களுக்கு உரைக் ள்ளோம். அவர்கள் எமது கருத்துக்களை உள்வாங்கியுள்ளனர். எமக்கு நிச்சயம் ஈழம் கிடைக்கும் எனவும் அதற்கு நாங்கள் இன்னும் பாடுபடவேண்டும் என எமக்கு வகத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அவ்வாறே பிரான்சின் கிழக்குப் பகுதியில் இருந்து பிரான்சின் மத்திய பகுதி வரை அங்குள்ள செய்தி ஊடகங்கள் அனைத்தும் எமது ஈருருளிப் பயணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டிருந்தன. பிரான்சின் கிழக்குப் மக்கள் எமது இனப்பிரச்சினையை நன்கு புரிந்து தமிழன் சிறிலங்காத் தீவில் து வாழ்வதன் மூலமே அவனுக்கு நல்ல சுதந்திரமும் தீர்வும் கிடைக்கும் என்பதை ர்ந்துள்ளார்கள். அதேபோல் பிரெஞ்சு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தத் ல்கள் சொல்லப்பட்டன.வருகின்ற செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பிரெஞ்சு நுமன்றத்தில் வெளிநாட்டு அமைச்சர் நிச்சயம் ஏதாவது ஒரு உறுதியான கருத்தைக் ாக வேண்டும்



அதாவது ஐ.நா. வெளியிட்ட போர்க்குற்ற அறிக்கைக்கு பிரெஞ்சு அரசு கொடுத்துள்ள பதில் ஒரு தெளிவான பதில் கிடையாது.

சர்வதேச நீதிமன்றில் சிறிலங்கா அரசு நிறுத்தப்பட்டு தமிழர்கள், கொசோவோ, தென்சூடான்போன்று சுதந்திரமாக வாழ பிரான்சு அரசு குரல் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளோம். நிச்சயமாக அந்த இலக்கு அடையும் என்ற நம்பிக்கையுடன் இந்த ஈருருளிப்பயணத்தை பாரிஸில் நிறைவு செய்துள்ளோம். பின்னர் இந்த ஈருருளிப் பயணம் பிரான்சில் இருந்து பெல்ஜியம் வரை சென்று அங்கிருந்து ஜெனிவாவில் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற பொங்கு தமிழ் நிகழ்வைச் சென்றடையவுள்ளது. ஜெனிவாவில் தனித் தமிழீழமே ஒரு தீர்வென்ற கோரிக்கையை முன்வைக்கவுள்ளோம்.

எமது இலட்சியம் நிறைவுபெற அனைத்துத் தமிழ் மக்களும் இதுபோன்ற வெகுஜனப் போராட்டங்களை நடத்தவேண்டும். இவ்வாறான போராட்டங்கள் நிச்சயம் எமது இலக்கை அடையச் செய்யும் என்பதையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன் நன்றி வணக்கம்!

ராமச்சந்திரன் (வயது 16)

நான் ஜீலை மாதம் 23 இல் ஏன் இந்தப் பயணத்தை தொடங்கினேன் என்றால், எனது அப்பாவும் அவருடன் பலரும் இந்த ஜீலைக்கலவரத்தில் பாதிக்கப்பட்டனர். இதற்கென 600 கிலொமீற்றர் தூரத்தைக் கடந்து பாரீஸ் வந்துள்ளேன். நான் இங்கு பிரான்சில் சுதந்திரமாக வாழ்வதுபோல் எமது மக்களும் அங்கு சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே எனது ஆசை. அதனை பிரெஞ்சு அரசு ஐ.நா. சபையில் கேட்டு எங்களுக்கு ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் நான் இவ்வளவு தூரங்களையும் ஓடி வந்துள்ளேன்.



சுந்தரசர்மா பாலசுப்பிரமணியக் குருக்கள் (வயது 49)

சிறீலங்காவில் இடம்பெற்ற இன அழிப்புக்கு பல உலக நாடுகள் உதவிசெய்தன. அதில் பிரான்சின் கைகளும் இருக்கலாம் என்ற ஐயப்பாடும் உண்டு. அதை நிருபிப்பதுபோல்தான் பிரான்ஸ் தற்போதைய நிலைமைகளில் சற்று மௌனம் சாதிப்பதுபோல் தெரிகின்றது. மார்ச் மாதம் வெளியிடப்பட்ட ஐ.நா. அறிக்கையின் படி விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். அந்த விசாரணைகள் சம்பந்தமாக ஏனைய நாடுகள் கதைப்பதுபோல பிரான்ஸ் கதைக்கவில்லை. நாங்கள் பிரான்சிடம் இதனைத்தான் வலியுறுத்தி வந்தள்ளோம். அத்துடன் பிரான்ஸ் நாட்டின் பாதுகாப்பை நம்பி உலக உணவுத்திட்ட நிறுவனத்தில் வேலை செய்த 18 தமிழ் உயிர்கள், தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காகக் கொல்லப்பட்டுள்ளனர். அதற்கான சாட்சிகள் சான்றுகள் சர்வதேசத்திடம் உள்ளன.



ஆனால் பிரான்ஸ் அந்த சாட்சியத்தை வாங்கி வைத்துக்கொண்டு மௌனம் சாதிக்கின்றது. இது சிறிலங்காவுடன் நல்லுறவு பேணுவதற்குரிய நோக்கமாக இருக்கலாம் என்று நினைக்கின்றோம். ஆகவே பிரான்சுக்கு இரட்டை உரிமைகள் இருக்கின்றன சிறிலங்காவுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு. உலக வல்லரசு நாடுகளில் ஒன்றாகிய பிரான்ஸ் நிச்சயமாக இதற்குரிய அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, நாங்கள் இந்த ஈருருளிப் பயணத்தை மேற்கொண்டிருந்தோம்.

நான் தமிழ் மக்களுக்கு ஒரு விடயத்தை சொல்ல வேண்டும். கடந்த 2009 மே இற்குப்பின்னர், தமிழ் மக்கள் ஒரு ஒளியை இழந்தவர்களாக இருக்கின்றார்கள். அந்த ஒளி மறைந்துவிட்டதாக எண்ணி இருட்டில் அலைபவர்கள் போல் தெரிகின்றது. நாங்கள் அவற்றைத் தவிர்த்து, நமக்கு அந்த ஒளி இருக்கின்றது. அது வரும். அந்த ஒளியைத் தேடுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

கிருபாலன் சதீஸ்குமார் (வயது 29)

நான் சிறிலங்கா இராணுவத்தினரின் அடக்கு முறைகளால் பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்காக இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளேன். நான் பிரான்சுக்கு வந்தகாலத்தில் இதுவரை ஈருருளி ஓடியதே இல்லை. இதுதான் முதல் முறை. ஆரம்பத்தில் எப்படி இந்தப் பயணத்தை மேற்கொள்ளப்போகின்றேன் என நினைத்தேன். ஆனால் மக்களுக்காக இதை வெற்றிகரமாக முடித்துவிட்டேன். எமது மக்களும் மண்ணும் மீட்கப்படும் வரை தொடர்ந்து போராடிக்கொண்டே இருப்பேன். நன்றி!



கணேசமூர்த்தி சுதாகரன் (வயது 22)

நான் பிரான்சு நாட்டில் அகதி அந்தஸ்து பெற்று நன்றாக உள்ளேன். ஆனால், எமது நாட்டில் மக்கள் பல துன்பங்களை ஏற்று வாழ்கின்றார்கள். அதற்காகவே 'நாம் இந்த போராட்டத்தை முன்னெடுத்து வந்துள்ளோம். நாம் பல கஸ்டங்களை அனுபவித்துத்தான் இந்த ஈருருளிப் பயணத்தை மேற்கொண்டு வந்து சேர்ந்தோம். எமது மக்களுக்காக இதனைத் தாங்கிக் கொண்டு எமது மக்களுக்கு விடிவு கிடைக்கும் வரை நான் தொடர்ந்து போராடுவேன். இது உறுதி!



## ட்ட சுற்றுப்போட்டி











போட்டோ இலங்கேஸ்

இன்றைய தினமே உங்கள் நிழற்படங்களை
உலகில் எங்கிருந்தும் உங்கள் உறவுகளும்
நீங்களும் Internetல் பார்வையிடலாம்

KARIŻMA ALBUMS (+GLASS)
மணவறை மண்டப அலங்காரம் – மணப்பெண் அலங்காரம்
விழாக்களுக்கான உணவு சேவை

01 43 83 95 26 | 06 45 83 90 64

Visit www.fotoelanges.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# EELAMURAZU

tamoulobs

ஈழமுரசு

02 - 08 Aôut 2011 N°030




## Un journaliste tamoul attaqué à coups de barres de fer au Sri Lanka

Un journaliste tamoul a été attaqué à coups de barres de fer dans le nord du Sri Lanka, dernière en date d'une série d'agressions contre des journalistes, a annoncé la police samedi. Gnanasundaram Kuhanathan, rédacteur en chef du quotidien en langue tamoule Uthayan, a été agressé près de chez lui, dans la région qui a été pendant des



années sous contrôle des séparatistes tamouls. Il a dû être hospitalisé pour des blessures graves à la tête. Au moins quatre journalistes travaillant pour ce même quotidien, aux positions considérées comme nationalistes tamoules, ont été tués depuis 2006. Dix-sept journalistes et employés des médias ont été tués au Sri Lanka depuis dix ans, et aucun de ces meurtres n'a été élucidé.

## Sri Lanka : une paix de courte durée

L'ancienne présidente du Sri Lanka a mis en garde contre une "paix de courte durée" si le gouvernement ne partageait pas le pouvoir avec la minorité ethnique tamoule, plus de deux ans après la fin de la guerre civile, ont rapporté lundi les médias locaux.

Chandrika Kumaratunga, à la tête du pays



de 1994 à 2005, estime que son successeur, Mahinda Rajapakse, a appliqué la politique du "gagnant qui remporte tout" après avoir proclamé la défaite des Tigres de libération de l'Eelam tamoul (LTTE) en mai 2009, mettant fin à 37 ans d'une guerre sanglante. "Je sais que si nous persistons dans cette politique du gagnant qui remporte tout, alors nous perdrons tout", a-t-elle averti lors d'une conférence dimanche

## Des actrices sri-lankaises soupçonnées d'être des prostituées

La police sri-lankaise est à la recherche de 20 actrices de télévision, soupçonnées de faire partie d'un réseau de prostitution. Ces dernières semaines déjà, la police avait arrêté quatre actrices impliquées dans la prostitution dans la ville de Colombo mais aussi dans des zones plus fréquentées par les touristes. Selon les agents, cette arrestation a permis de commencer à lever le voile sur ce qui semble être un vaste réseau de prostitution. Les autorités demandent maintenant de l'aide pour localiser 20 actrices, toutes récemment entrées dans la clandestinité.

Ce n'est pas la première fois qu'une affaire de ce type a lieu au Sri-Lanka. Le pays est notamment connu pour ses travailleurs du sexe, très présents dans les clubs des lieux touristiques. Un récent rapport du Département d'Etat américain a d'ailleurs pointé du doigt le fait que des femmes et enfants sri-lankais sont sujets à des trafics sexuels dans les maisons closes du pays, en particulier dans la région d'Anuradhapura, dans le nord du Sri Lanka. Et en 2009, l'Autorité nationale sri-lankaise pour la protection des enfants estimait qu'environ 1.000 enfants étaient victimes d'exploitation sexuelle dans le pays, quand certaines agences évaluaient ce chiffre à entre 10.000 et 15.000.

## Immigration clandestine - Ocean Lady : trois accusés sont libérés sous caution

À Vancouver, trois des quatre hommes accusés du passage clandestin de migrants tamouls en Colombie-Britannique, il y a deux ans, vont être libérés. Ils devront payer une caution et seront soumis à certaines conditions. Ils pourront également retourner à Toronto où ils ont été arrêtés le mois dernier. Les raisons qui ont incité le juge à leur accorder une libération sous caution font l'objet d'un interdit de publication. Ces individus ont déjà fait une demande de statut de réfugié. Le bateau Ocean Lady est arrivé dans l'île de Vancouver en 2009 avec 76 hommes à son bord. L'été dernier, un deuxième bateau, le MV Sun Sea, avec 500 personnes à son bord a accosté en Colombie-Britannique.








# Evénements

## La rencontre sportive entre les Tamoulcholais d'Ile-de-France



Les 30 et 31 juillet, les Tamoulcholais, écoles tamoules, ont organisé en partenariat avec la Maison du Tamil Eelam – France un évènement sportif pour les jeunes. Plus de 400 élèves parmi 477 inscrits ont répondu présents à l'appel. Divisé en 6 équipes de différentes couleurs (Bleu-Ankayakanni, Violet –Jeyanthan, Jaune - Ratha, Orange - Malathy, Rouge-Sothiya, Vert -Charles), les jeunes ont brillamment participé aux épreuves éliminatoires samedi et à la finale dimanche.

Les épreuves proposés, cette année, sont les 50m, 75m, 100 mètres, 150mètres, 200 mètres, 400 mètres, 800 mètres, le lancer de balle, le saut en longueur, le saut en largeur, le relais 4x 100mètres, 4x 400 mètres en fonction de leur catégorie d'âge (9ans, 12ans, 15ans, 18 ans et 18 ans plus) – sections féminine et masculine.

Pour clore cette compétition, les responsables et parents de chaque équipe, au nombre de 2 hommes et 2 femmes ont fait un relais symbolique de 4x 100m. Les jeunes, plutôt ravis de cet événement, veulent renouveler cette expérience l'année prochaine.

Les résultats :

## Pédaler pour le Peuple Tamoul



Partis de Strasbourg, ils étaient six à avoir parcouru en vélos plus de 500 Kilomètres. Il étaient revêtis d'un tee-shirt floqué de ces quelques mots « crime contre l'humanité » ; six à dénoncer ce qu'ils estiment être, bien au-delà d'un crime de guerre, « un génocide » à l'encontre du peuple tamoul. Le parcours et s'est acheminé ce samedi aux Invalides avec une demande d'ouverture d'une enquête internationale, auprès du gouvernement français d'appuyer l'ONU sur ces crimes et d'intervenir pour essayer de trouver une fin à ce conflit ethnique. Rappelons qu'en mai 2009, près de 40 000 Tamouls ont été massacrés, 150 000 personnes toujours portées disparues. Un total de 300 000 personnes tuées au cours de ces soixante dernières années et plus d'un million ayant fui leur patrie.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விடுதலைப் புலிகளுக்கு அப்பால்: ராஜீவ் காந்தி கொலைப் பின்னணி' என்ற நூல் ராஜீவ் சர்மா என்ற டில்லியைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் ஒருவரால் எழுதப்பட்டது. இதனை ஆனந்தராஜ் என்பவர் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். இந்த நூலை சவுக்கு பதிப்பகம் தனது முதல் பதிப்பாக வெளியிட்டதுடன், ராஜீவ் கொலையின் பின்னணியில் உள்ள சதிகள் குறித்த கேள்விகளுக்கு விடையளிக்கும் வகையில் இந்நூல் அமைந்திருப்பதாகவும் தெரிவித்து கடந்த யூன் 4ம் திகதி நடைபெற்ற வெளியீட்டுவிழா நிகழ்விற்கு தமிழ்த்தேசிய உணர்வாளர்களையும் இப்பதிப்பகம் அழைத்திருந்தது.

ஆனால் இவ்விழாவிற்கு வந்திருந்த பெரியார் திராவிட கழகப் பொதுச்செயலர் விடுதலை இராசேந்திரன் அவர்கள் இந்நூலுக்கு எதிராக தனது மறுப்புக் கருத்துக்களை வைத்ததுடன், ராஜீவ் கொலையில் இந்நூல் மறைக்க முற்பட்ட பல உண்மைகளையும், விடுதலைப் புலிகளுக்குள் ஊடுருவிய இந்தியப் புலனாய்வுத்துறையான றோவின் கையாட்கள், தமிழீழ தேசியத் தலைவரை அழிப்பதற்கு வகுத்த திட்டங்களையும் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளார். அன்றைய இறுக்கமான போர்ச் சூழ்நிலையிலும், இந்திய இராணுவத்துடன் மோதல்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்த அந்த காலப்பகுதியிலும் மாத்தையா போன்றவர்களால் தேச விடுதலைக்கு எதிராக விலைபோக முடிந்திருக்கின்றது என்றால், இன்றைய நிலையை சொல்லிப்புரிய வைக்கவேண்டிய தேவையில்லை. விடுதலை இராசேந்திரன் அவர்களின் உரை இன்றைய நிலைமையை உணர்ந்துகொள்வதற்கு ஆதாரசக்தியாக விளங்குகின்றது. எனவே, அந்த உரையினை எமது வாசகர்களுக்காக இங்கே தொடர்ச்சியாக தருகின்றோம்.

04




### ராஜீவ் மரணம் - விடுதலைப் புலிகளுக்கு அப்பால்

# மறைக்கப்பட்ட உண்மைகளும் - துரோகங்களின் கைவரிசைகளும்

விடுதலை இராசேந்திரன்

இந்திய உளவு நிறுவனம் விரித்த வலையில் மாத்தையா வீழ்ந்தார் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் உறுதியான முடிவுக்கு வந்தது. அதற்கு அழுத்தமான காரணங்கள், சூழ்நிலை சந்தர்ப்பங்களின் அடிப்படையிலான சான்றுகள் ஏராளம் இருக்கின்றன. ராஜீவ் சர்மாவின் இந்த நூல் மாத்தையா மீது எந்தக் குற்றமும் இல்லாதது போலவும், பிரபாகரன், அவரை சித்திரவதை செய்து கொன்றார் என்றும் அபாண்டமாக குற்றம் சாட்டுகிறது. நூலாசிரியர் இவ்வாறு எழுதுகிறார்:

'பிரகாகரன் ஆயுதமேந்திய சகப் போராளிகளுடன் கூட இரக்கமற்ற முறையில் நடந்து கொள்வார். 1980றகும் 1990றகும் இடைபட்ட காலத்தில் சக தமிழ் இயக்கங்களைச் சார்ந்த 300 போராளிகளை மற்றும் எல்.டி.டி..ஈ. இயக்கத்திற்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு தெரிவித்த பல முக்கிய தலைவர்களைக் கொன்றார். இது சம்பந்தமாக நடந்த மிக அதிர்ச்சிகரமான சம்பவம் மாத்தையாவின் கொலையாகும். பிரபாகரன் மாத்தையாவை இரட்டை வேடம் ஆடுகிறார் என நினைத்தார். மாத்தையா கொடுத்த தகவலின் பேரிலேயே எம்.வி. அகத் கப்பல் (கிட்டு வந்த கப்பல்) அழிக்கப்பட்டது என்ற தகவல் பரவியது. ஏராளமான வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களை ஏற்றி வந்த அக் கப்பல் அழிக்கப்பட்டதால் எல்.டி.டி.ஈ.க்கு கோடிக்கணக்கில் இழப்பு ஏற்பட்டது. மாத்தையா துரோகி என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். தனிச் சிறையில் அடைக்கப்பட்டார்.' (பக்.174) என்றெல்லாம் எழுதுகிறார் நூலாசிரியர்.

மாத்தையா மீது சந்தேகத்தின் அடிப்படையில் ஒரு வீண் பழியை சுமத்தியது போலவும், கிட்டு வந்த கப்பலை மாத்தையா காட்டிக் கொடுத்தார் என்று, ஆதாரம் ஏதுமின்றி தகவல்களைப் பரப்பினார் என்றும் இந்த நூல் பதிவு செய்கிறது. மாத்தையா ஒரு வருட காலம் விசாரணைக் கைதியாக இருந்தபோதும் சரி, பிறகு அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட போதும் சரி, மாத்தையாவை பிரபாகரன் சந்திக்கவே இல்லை என்றும் நூல் குற்றம் சாட்டுகிறது. இதையெல்லாம்விட மாத்தையாவுக்கு மரண தண்டனை வழங்கியதற்கு பிரபாகரனுக்கு 'உள்நோக்கம்' உண்டு என்ற முடிவுக்கும் நூலாசிரியர் வருகிறார். இவ்வாறு எழுதுகிறார்:

'மாத்தையாவின் கதை முடிந்து விட்டது. ஆனால், மாத்தையா உண்மையிலேயே இரட்டை வேடம் ஆடினாரா அல்லது அவர் மிகப் பலம் பொருந்தியவராக உருவானதால் பிரபாகரன் அவரை அழித்தாரா என்பது யாருக்கும் தெரியாது' என்று 'யாருக்கும் தெரியாத' ஒரு உண்மையை தனக்கும் தெரியாத ஒன்றை, பிரபாகரனை களங்கப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு நஞ்சை கக்குகிறார், இந்நூலாசிரியர். பிரபாகரனை இழிவுபடுத்தி, அவரது மாண்பையும் கௌரவத்தையும் நேர்மையையும் களங்கப்படுத்தும் உளவுத்துறையின் எண்ணத்தை அப்படியே பிரதிபலிக்கிறார் நூலாசிரியர்.

மாத்தையாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து 'இந்தியா டுடே' வெளியிட்ட சிறப்புக் கட்டுரை ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தனைக்கும் 'இந்தியா டுடே' புலிகளின் ஆதரவு பத்திரிகை அல்ல. மாத்தையா இந்தியாவின் வலையில் வீழ்ந்தார் என்பதை, இந்த செய்தி உறுதிப்படுத்துகிறது. 1994 ஆம் ஆண்டு 'இந்தியா டுடே' இதழில் (மார்ச் 16) அதன் செய்தியாளர்கள் எழுதிய விரிவான கட்டுரையிலிருந்து ஒரு முக்கிய பகுதி இது.

'1993 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதி, சர்வதேசக் கடலில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் 'எம்.வி. அகத்' கப்பலை இந்தியாவின் கடலோரப் பாதுகாப்புப் படை சுற்றி வளைத்தபோது, கப்பலில் இருந்த, விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதி கிட்டு, கப்பலுக்குத் தீ வைத்துக் கொண்டு, தன்னைத் தானே அழித்துக்கொண்டார். கிட்டு கப்பலில் வரும் தகவலை இந்திய உளவு நிறுவனத்துக்கு முன்கூட்டியே தந்தது மாத்தையாவும், யோகி யோகரத்தினமும் தான் என்று பிரபாகரன் குற்றம்சாட்டினார். 1989–90 இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வுக்கு மர்த்தையா உடன்பட வேண்டும் என்று கூறியதை, பிரபாகரன் ஏற்கவில்லை. இந்தக் கருத்து வேறுபாடு, மேலும் தீவிரமடைந்தது தொடர்ந்து 1991ல் நடந்த ஆனையிறவு தாக்குதலில் கிடைக்க வேண்டிய வெற்றி, கடும் பின்னடைவை சந்தித்தது. இதற்குக் காரணம் மாத்தையாவே என்று குற்றம்சாட்டினார் பிரபாகரன். தொடர்ந்து 1992 மே மாதத்தில் மாத்தையாவுக்கு தரப்பட்ட பொறுப்புகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். தொடர்ந்து நவம்பரில் யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அருகே பிரபாகரன் தங்கியிருந்த மறைவிடம், குண்டு வீச்சுக்கு உள்ளானது. புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில், அவரது உதவியாளர் 1993 ஜன.7–ல் கொல்லப்பட்டார். அடுத்த பத்து நாட்களில் ஜனவரி 16–ல் கிட்டு வந்த கப்பல் இந்திய கப்பல் படையால் சுற்றி வளைக்கப்பட்டது. மாத்தையாவும், அவரது பழைய நண்பரான 'என்ஜினியர்' என்று அறியப்பட்ட மாணிக்கவாசகம் என்பவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். மாத்தையாவின் ஆதரவாளர்கள் 120 பேர் கைது செய்யப்பட்டனர். விடுதலைப்புலிகளின் இராணுவ நீதிமன்றம் 1993 டிசம்பர் 19 ஆம் தேதி வழங்கிய தீர்ப்பில் கிட்டுவின் மரணத்துக்குக் காரணமானவர் மாத்தையா தான் என்றும், 'ரோ' (RAW) உளவு நிறுவனத்தோடு சேர்ந்து பிரபாகரனை கொல்வதற்கு மாத்தையா சதித் திட்டம் தீட்டினார் என்றும், 'ரோ'வின் முகவராக மாத்தையா செயல்பட்டார் என்றும் புலிகளின் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.'

இதிலிருந்து என்ன தெரிகிறது?

1992 ஆம் ஆண்டில் மாத்தையா புலிகள் இயக்கப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுகிறார். 1989 ஆம் ஆண்டிலிருந்தே புலிகள் இயக்கத்தில் மாத்தையாவின் தலைமையில் அவரது ஆதரவாளர்கள் குழு ஒன்று இந்தியாவின் உளவு நிறுவனத்துடன் இரகசிய தொடர்பில் செயல்படத் தொடங்கி விட்டது.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் நடந்த முதல் தாக்குதலில் புலிகள் கடும் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தது. 123 பெண் புலிகள் உட்பட 573 புலிகள் இந்தப் போரில் தான் உயிர் பலியானார்கள். இயக்கத்துக்குள்ளே மாத்தையா நடத்திய சதிதான் இதற்குக் காரணம் என்ற தகவல் புலிகளின் உளவுப் பிரிவு கண்டறிந்து பிரபாகரனுக்கு தெரிவித்தது. பொறுப்புகளிலிருந்து மாத்தையா விடுவிக்கப்பட்டவுடன், யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அருகே பிரபாகரன் தங்கியிருந்த இரகசியமான மறைவிடம் குண்டுவீச்சுக்கு உள்ளானதோடு பொட்டு அம்மான் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதில் அவரது உதவியாளர் பலியாகியுள்ளார். மாத்தையாவிடம் நடத்திய விசாரணையில் பல்வேறு உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்தன. 1993 ஜனவரியில் கிட்டுவின் உயிர்த் தியாகத்தை தொடர்ந்து மாத்தையா தலைமையிலான விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி என்ற புலிகளின் அரசியல் பிரிவு கலைக்கப்படுவதோடு துணைத் தலைவர் என்ற 2 ஆம் நிலையிலிருந்து மாத்தையா நீக்கப்பட்டவுடன் பிரபாகரனுக்கு எதிராக வெளிப்படையாகவே போர்க்கொடி உயர்த்தினார் மாத்தையா. அப்போது கொக்குவில் என்ற பகுதியில் விடுதலைப் புலி ஆலோசகர் பாலசிங்கம் தங்கியிருந்தார். அவரது வீட்டுக்குப் போன மாத்தையா, அங்கே தாம் பிரபாகரனை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கப்போவதாக அறிவித்தார். இதை அடேல் பாலசிங்கம் தனது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரபாகரனின் மெய்க்காப்பாளராக இருந்த ஒரு விடுதலைப்புலி தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் வேலூர் சிறையிலிருந்து உளவுத்துறை உதவியுடன் இரகசியமாக விடுவிக்கப்பட்டார். பிரபாகரனை கொல்வதற்கு வேலூர் சிறையிலே திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையிலேதான் விடுதலை செய்யப்பட்டார் என்ற அதிர்ச்சியான தகவல் மாத்தையாவிடம் நடத்திய விசாரணையிலிருந்து தெரியவந்தது. மாத்தையாவின் கொழும்புப் பயணங்களும் இந்திய உளவுத்துறை அதிகாரிகளுடன் அவருக்கிருந்த தொடர்புகளும் விசாரணையில் வெளிவந்தது.

இங்கே நான் எடுத்துக்காட்டிய 'இந்தியா டுடே' கட்டுரையில் கடைசியாக கூறப்பட்ட, இரண்டு வாக்கியங்கள் மிகவும் முக்கியமானதாகும். 'பிரபாகரன் இனிமேல் தான் மிகக் கடுமையான சோதனைகளை எதிர்கொள்ளப்போகிறார் என்ற கருத்தில் உளவு நிறுவனம் மிகவும் திருப்தியடைந்திருந்தது.'

(தொடரும்)



பிரபாகரனின் மெய்க்காப்பாளராக இருந்த ஒரு விடுதலைப்புலி தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் வேலூர் சிறையிலிருந்து உளவுத்துறை உதவியுடன் இரகசியமாக விடுவிக்கப்பட்டார். பிரபாகரனை கொல்வதற்கு வேலூர் சிறையிலே திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையிலேதான் விடுதலை செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## இந்தியாவில் பெரும் தொழிற்சாலை அமைக்கும் ஃபோர்ட்

அமெரிக்கா வாகன தயாரிப்பு நிறுவனமாக ஃபோர்ட், இந்தியாவின் குஜராத் மாநிலம் சனந்த் நகரில் மிகப்பிரமாண்டமான தொழிற்சாலை ஒன்றை அமைக்கவுள்ளது. 4,000 கோடி இந்திய ரூபாவில் அமைக்கவுள்ள புதிய தொழிற்சாலைக்காக குஜராத் மாநில அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஃபோர்ட் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.



இதனால் அம்மாநில அரசு அங்கு இவ்வாலைக்காக 400 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. அகமதாபாதிலிருந்து 40 கிலோ மீற்றர் தொலைவில் சனந்த் நகரில் இது அமையவுள்ளது. டாட்டாவின் நானோ கார் தொழிற்சாலைக்கு அருகிலேயே இவ்வாலை உருவாக உள்ளது. இங்கு கார்களும், இயந்திரங்களும் தயாரிக்கப்பட உள்ளன. இவ்வாலை 5,000 பேருக்கு வேலைவாய்ப்புப அளிக்கும். தொடக்க நிலையில் இந்தத் தொழிற்சாலை ஆண்டுக்கு 2.40 இலட்சம் கார்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். இயந்திர உற்பத்தி பிரிவு ஆண்டுக்கு 2.70 இலட்சம் இயந்திரங்களை தயாரிக்கும் திறன் கொண்டிருக்கும். ஃபோர்டு நிறுவனத்தின் துணை நிறுவனம் ஃபோர்டு இந்தியா ஆகும். இந்நிறுவனம் ஏற்கனவே சென்னையில் கார் உற்பத்தி பிரிவைக் கொண்டுள்ளது. குஜராத்தில் முன்னணி வாகன நிறுவனங்கள் தொழிற்பிரிவுகளை அமைக்க அணிவகுத்து நிற்கின்றன. இந்த வகையில் மாருதி சுசுகி நிறுவனம் அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்க ஆர்வமாக உள்ளது. பிரெஞ்சு நிறுவனமான பேர்ஜோ மற்றும் ஹீரோ ஹோண்டா மற்றும் பஜாஜ் ஓட்டோ ஆகிய நிறுவனங்களும் அம்மாநிலத்தில் தொழிற்சாலைகளை நிறுவ தயாராகி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவை அதிரவைத்த சீன 'அப்பிள்'

போலிகள் அதன் உண்மையான பொருட்களில் இருந்து வடிவம்மாறாமல் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு தத்வரூபமாக வடிவமைப்பதில் சீனர்கள் கில்லாடிதான். ஆனால் அதற்காக இப்படியா?

சீனா எந்தவொரு பொருளையும் வெளிநாடுகளில் இருந்து ஒன்றை மட்டுமே வாங்கும். பின்னர் அதனைப்போன்று போலியான பொருட்களை உருவாக்கி அதே பெயருடன் சந்தைப்படுத்தியும் விடும் என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாகவே உள்ளது. ஆரம்ப காலத்தில் மற்றைய நிறுவனங்களின் இலத்திரனியல் பொருட்களை போலியாக தயாரித்து சந்தைப்படுத்தத் தொடங்கியது சீனா. மலிவான விலை காரணமாக அவை சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றன. இவற்றின் வெற்றியைத் தொடர்ந்து பலவற்றையும் போலியாக தயாரிக்கத் தொடங்கியது சீனா. மென்பொருட்கள் முதல் ஆடைகள் வரை எதனையும் விட்டு வைக்கவில்லை. போலி உற்பத்திகளை உருவாக்குவதில் அடுத்த பரிணாமமாக தற்போது சீனாவில் போலி வர்த்தக நிலையங்களும் முளைவிடத் தொடங்கியுள்ளன. இதற்கு இலக்காகியுள்ளது 'அப்பிள் ஸ்ரோர்ஸ்'. கின்னிங் மாகாணத்தில் தாங்கள் எந்தவொரு அப்பிள் நிறுவனத்தையும் தொடங்கவில்லை என்று அமெரிக்க அப்பிள் நிறுவனம் அறிவித்தபோதுதான் இந்தப்போலி அம்பலமானது. அங்கு பணியாற்றிய ஊழியர்களுக்கு கூட தாங்கள் பணியாற்றுவது போலி என்று தெரியாத அளவிற்கு அந்நிறுவனத்தை உருவாக்கியவர் வைத்திருந்துள்ளார். இதுமட்டுமல்ல இவ்வாறு சீனாவில் பல நிறுவனங்கள் இருப்பதாக கூறப்படுகின்றது.

அப்பிளின் ஐ போன் மற்றும் ஐ–பேட் ஆகியவை சீனாவில் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன. சீனாவின் போலி உற்பத்தியாளர்கள் இதனை சரியாக பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். பல போலி அப்பிள் ஸ்ரோர்ஸ் மற்றும் அனுமதியற்ற விநியோகஸ்தர்கள் அங்கு நிறைந்து வழிவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் நடைபெற்ற ஆரம்பகட்ட விசாரணைகளில் பல போலி அப்பிள் ஸ்ட்ரோர்ஸ்களை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளதுடன், விசாரணைகளையும் நடத்தி வருகின்றனர்.

இத்தகைய போலி ஸ்ரோர்ஸ்கள் சீனாவில் மட்டுமன்றி வெனிசூலா மற்றும் ஸ்பெய்ன் உட்பட பல நாடுகளிலும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக சீனாவில் அப்பிளின் உத்தியோகபூர்வ ஸ்ரோர்கள் 4 மட்டுமே அமைந்துள்ளன. இவற்றில் 2 பீஜிங்கிலும் மற்றைய இரண்டும் சங்காயிலுமே அமைந்துள்ளன. போலி உற்பத்திகள் அப்பிளின் வர்த்தக நாமத்திற்கும், தரத்திற்கும் பாரிய அச்சுறுத்தலாக விளங்குவதாக அப்பிள் தற்போது கவலை வெளியிட்டுள்ளது.

# நரசிம்மன் பதில்கள்

Maison des Medias 22, Rue Pardonnet, 75019 Paris, France



அண்மையில் பிரித்தானியாவில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு நியமன உறுப்பினர் சுமந்திரன் மகிந்த அரசு தருவதை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். ஆனால் சுரேஷ் பிரேமச்சந்திரன் காணி அதிகாரம் மற்றும் காவல் துறை அதிகாரம் உள்ள தீர்வை முன்வைத்தால் மட்டுமே பேச முடியும் என்றுள்ளாரே?

**என்.விமலதாஸ் – பிரித்தானியா**

திரு சுமந்திரன் அவர் யாரால் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டாரோ அவர் அவர்களின் நிகழ்ச்சி நிரலின்படியே செயல்படுகிறார். ஆனால் திரு சுரேஷ் பிரேமச்சந்திரனோ மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் மக்களின் மனநிலையைப் புரிந்தவர் அதுதான் நிலைமை அறிந்து பேசுகின்றார்.

## தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையை ஏற்பதில் ஸ்டாலினும், அழகிரியும் மோதிக் கொள்கிறார்கள். இதில் யார் வெல்வார்கள்?

உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற கூட்டமைப்பினரால் விளக்கு கம்பம் போடவும், தண்ணீர் குழாய் அமைக்கவும் தான் அதிகாரம் உள்ளது என பசில் ராஜபக்ச கூறியுள்ளார்? அவ்வளவுதானா?

**கே.சுகந்தன் – பிரான்ஸ்**

அதிகாரமில்லாத உள்ளூராட்சி மன்றத்தை கைப்பற்றவா மகிந்த கிளிநொச்சியில் மூன்று நாட்களும், ஏனை முக்கிய அமைச்சர்கள் யாழிலும் முகாமிட்டு தேர்தல் பரப்புரைகளைச் செய்தார்கள்? தேர்தலுக்கு முன் கொண்டுவரப்பட்ட பல மின் கம்பங்கள் தேர்தல் தோல்வியின் பின் காணமல் போன செய்தியும் வெளியாகி உள்ளது.

மக்கள் அமைப்புக்கள் செய்த நிகழ்வுகளை தாம் செய்யப்போவதாக நாடு கடந்த அரசு அறிவித்துள்ளது. ஏன் இந்தப் போட்டி?

**எம்.சிறீ – பிரித்தானியா**

அவர்களின் நிகழ்ச்சி திட்டம் அதுதான்போலும். புதிய அமைப்புக்களை அவர்களாக அறிவிப்பதும், அவற்றின் மூலம் புலம்பெயர் மக்களால் ஒருங்கிணைக்கப்படும் செயல்பாடுகளை சீர்குலைப்பதும்தான் அவர்களின் வேலைத்திட்டம் என்பதை தொடர்ந்து நிகழும் சம்பவம்கள் உணர்த்திவருகின்றன. இவர்களின் குழப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் செயல்பாடுகளில் அவுஸ்திரேலியாவில் இருந்து ஒளிபரப்பாகும் ஒரு தொலைக்காட்சியும் முக்கிய பங்காற்றி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையை ஏற்பதில் ஸ்டாலினும், அழகிரியும் மோதிக் கொள்கிறார்கள். இதில் யார் வெல்வார்கள்?

**வீ.பிரதாப் – கனடா**

அண்ணன் எப்ப காலியாவான் திண்ணை எப்ப காலியாகும் என்ற நிலைதான். அண்ணனுக்கு கதிரையைக் கொடுத்தால் தம்பிக்குப் பிடிக்காது. தம்பிக்கு கொடுத்தால் அண்ணனுக்கு பிடிக்காது. இந்த வெட்டுக்குத்துக்குள்ளை கனிமொழி கதிரையைக் கைப்பற்றிவிடுவார் என்கின்றனர் தி.மு.க பிரமுகர்களே. இப்படித்தான் கதிரைப்போட்டி ஒரு காலத்தில் இலங்கையிலும் உருவாகும். மகிந்த குடும்பத்தில் இப்போதே குத்துவெட்டுக்கள் தொடங்கிவிட்டன. பதவிப் போட்டி துப்பாக்கி தூக்கும்வரை போய்விட்டது என்கின்றன கொழும்புச் செய்திகள்.

சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கு கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் கருத்தெதுவும் தெரிவிக்கவில்லையே?

**ஆர்.விக்னேஸ் – பிரான்ஸ்**

2009 வன்னிப் பேரவலத்தின் முன்னர் இந்த சுமந்திரன் எங்கிருந்தார் என்பது தெரியவில்லை. இப்போது போர்க் குற்றம் வேண்டாம் என்கின்றார். சுமந்திரனின் கருத்துக்கு பதிலளிக்காமல் இருப்பதன் ஊடாக, சம்பந்தன் அவரது கருத்தை வழிமொழிவதுபோல்த்தான் உள்ளது.

இலங்கை மீது பொருளாதார தடை கொண்டுவர இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற அ.தி.மு.க தீர்மானம் கொண்டுவரும் என ஜெயலலிதா கூறியுள்ளாரே? இது சாத்தியப்படுமா?

**ஏ.சற்குணம் – பிரித்தானியா**

தமிழினப் படுகொலை புரிந்த சிறீலங்கா மீது பொருளாதாரத்தடை கொண்டு வரப்பட வேண்டும் என தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய தமிழக முதல்வர், இந்திய மத்திய அரசும் அதை அமுல்படுத்த முயற்சித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் புலம்பெயர்ந்த எம்மவர்கள் குறிப்பாக சிறீலங்கா பொருள்களை புறக்கணிப்போம் என்று கூறும் அமைப்புக்களைச் சேர்ந்த சிலரே சிறீலங்காப் பொருட்களின் விநியோகத்தராய் இருப்பது ஊருக்கு உபதேசமாக உள்ளது.

இலண்டன் வந்த ரணில் அவசரமாக இலங்கை திரும்பியுள்ளதன் நோக்கம் என்ன?

**ர்.அமலன் – பிரித்தானியா**

மகிந்தாவால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த பெரும்பாலனவர்கள் கட்சி மாற்றப்பட்ட நிலையில், தலைமைப் பதவியும் பறிபோய்விடுமோ என்ற நிலை உருவாகியுள்ளது. தலை போவதற்கிடையில் உயிரைக் காப்பாற்றும் நோக்கிலேயே ரணில் அவசரமாக திரும்பி உள்ளதாக அறிய முடிகிறது.

உள்ளூராட்சி தேர்தலின் முன் தோல்வி பயத்தாலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது செயல்பாடுகளை விமர்சிப்பதாக கூறிய யாழ் அரச அதிபர் இமெல்டா இப்போ என்ன கூறுவார்?

**எஸ்– ரதன் –பிரான்ஸ்**

யாழில் கலாச்சார சீரழிவை தடுக்கமுடியமால் பார்த்துக்கொண்டிருந்தவர், மக்களை விமர்சித்தார். அவர் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு எதைத் தானே கூறமுடியும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முள்ளிவாய்க்காலில்
இறுதி வரை நின்று போராடிய
ஒரு போராளியின் அனுபவப் பதிவு இது.

# மக்களை முற்றுகையிட்டுத் தாக்கிய கடற்படை
# முறியடிக்கக் களமிறங்கிய கரும்புலி

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவமனைகள் இல்லை. மருந்துப் பொருட்களும் இல்லை. இவற்றிற்கு மத்தியில் மருத்துவமனை வட்டாரங்களுடன் இணைந்து போராளி மருத்துவர்களும் தங்களிடம் உள்ளவற்றை வைத்து காயமடைந்த மக்களுக்கு முடிந்தளவு சிகிச்சைகளை வழங்கிப் பாதுகாக்கின்றார்கள். மாத்தளன் மருத்துவமனை காயம் அடைந்த மக்களால் நிரம்பிவழிகின்றது. காயப்பட்ட மக்களை போராளிகளின் வாகனங்களே ஏற்றிக்கொண்டு வருகின்றன. மண்தரையில்தான் காயம் அடைந்தவர்கள் படுக்கவைக்கப்படுகின்றார்கள். அந்தளவிற்கு காயம் அடைந்த மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கும் அதேவேளை, களத்தில் காயம் அடையும் போராளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

குறைந்த நிலப்பரப்பில் அதிகூடிய சூட்டுவலுவினை படையினர் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். சாதாரணமாக இரணைப்பாலை, பச்சைப்புல்மோட்டையில் நின்று தாக்குதல் நடத்தும் படையினரின் ஏ.கே.47 துப்பாகியின் குண்டுகூட மாத்தளன் பகுதிக்கு வந்து தாக்கும் அளவிற்கு எல்லைகள் குறுகிவிட்டன. சாலையினை அண்டியுள்ள சிறீலங்காப் படையினர் குறிசூட்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு நடமாடித் திரியும் மக்களை சுடுகின்றார்கள். இவற்றிற்கு மத்தியில்தான் கடலில் சிறீலங்கா கடற்படையினரின் படைக்கலங்களின் வருகையும் அதிகரிக்கின்றது. பாரிய கப்பல்கள் ஆழ்கடலில் நிலைகொள்கின்ற அதேவேளை, சிறிய சிறியபடகுகள் மூலம் வெட்டுவாகல் தொடக்கம் சாலை வரையான கடற்பரப்பினை கண்காணிக்கின்றார்கள். கடலில் இருந்துகொண்டு கண்மூடித்தனமாக தாக்குதலை மக்கள் மீது தொடுக்கின்றார்கள். மக்கள் மூன்று பக்க தாக்குதலினை எதிர்கொள்கின்றார்கள். அதாவது தரை வழியாக, கடல் வழியாக, வான் வழியாக தாக்குதல்கள் உக்கிரம் அடைகின்றன. இவற்றினையும் போராளிகள் எதிர்கொள்ள வேண்டியநிலை.

சிறீலங்காப் படையினரின் பாரிய கப்பல்கள் முல்லைத்தீவின் ஆழ்கடலில் நிறுத்தப்பட்டு கடற்படையினரிடம் உள்ள அனைத்து டோறா படகுகளும் இந்த குறிப்பிட்ட பகுதிக்குள் கொண்டு வரப்பட்டிருந்தன. காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகத்தினை பின்தளமாக பயன்படுத்தி கடற்படையினரின் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அதாவது மக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதலினை கடற்படையினரும் இப்போது மேற்கொள்கின்றார்கள். இவ்வாறு மக்கள் மீது தாக்குதல் நடத்தும் கடற்படையினரின் பீரங்கிகளும் கனொன் எனப்படும் விழுந்து வெடித்து, சிதறி வெடிக்கும் குண்டுகளை வீசுகின்றார்கள். அவை மக்களுக்கு பாரிய சேதங்களை ஏற்படுத்துகின்றன.

அன்று இரட்டைபனையடி கடற்கரையின் ஒருபகுதியில் போராளிகளால் மக்களுக்கு கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அந்நேரம் வரிசையில் நின்ற மக்களை இலக்கு வைத்து கடற்படையினர் கனொன் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினார்கள். இதில் பலர் உயிரிழந்து, பலர் காயமும் அடைந்தார்கள். மிகவும் கரையோரமாக நெருங்கிவந்து தாக்குதல் நடத்துவதற்கு கடற்படையினர் முனைந்தபோது, இதனை அவதானித்த கடற்புலிகள், கரையினை நெருங்கிய கடற்கலம் மீது விடிந்துவிட்ட அந்த காலைப்பொழுதில் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பதில் தாக்குதலை தொடங்கினார்கள். கடற்புலிகளின் தாக்குதலை முறியடிக்க பெருமளவான சிறீலங்கா கடற்கலங்கள் அப்பகுதியை சுற்றிவளைக்க, அதனை முறியடிக்க கடற்புலிகள் கடற்கரும்புலிகளை களமிறக்கினார்கள். முன்னேறிய கடற்கலத்தை கடற்கரும்புலிகளின் கலம் ஒன்று மோதித் தகர்த்தது. தனது மக்களின் கண்முன்பாகவே ஒரு கரும்புலி(கள்) வீரவரலாறான நிகழ்வு அன்றுதான் நிகழ்ந்திருக்கும் என்று நான் கருதுகின்றேன். மக்களின் உயிரைக்காக்க தன் (தங்கள்) உயிரை அர்ப்பணித்த அந்தக் கரும்புலி(கள்) யார் என்பது இன்றுவரை தெரியாது. முகம் தெரியாத கரும்புலிகளைப் போலவே இந்தக் கடற்கரும்புலிகளும் இன்றுவரை முகம்தெரியாதவர்களாகவே இருக்கின்றார்கள். நாளைய விடியலில் அவர்களின் முகம் தெரியவரும்போது அன்றைய சம்பவத்தை நேரில் பார்த்த அத்தனை உறவுகளும் மெய் உருகிப்போவார்கள் என்பது நிச்சயம்.

**மிகவும் கரையோரமாக நெருங்கிவந்து தாக்குதல் நடத்துவதற்கு கடற்படையினர் முனைந்தபோது, இதனை அவதானித்த கடற்புலிகள், மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பதில் தாக்குதலை தொடங்கினார்கள். கடற்புலிகளின் தாக்குதலை முறியடிக்க பெருமளவான சிறீலங்கா கடற்கலங்கள் அப்பகுதியை சுற்றிவளைக்க, அதனை முறியடிக்க கடற்புலிகள் கடற்கரும்புலிகளை களமிறக்கினார்கள்.**

கடற்கரும்புலிகளின் தாக்குதலின் பின்னர்தான் கடற்படையினர் அங்கிருந்து பின்வாங்கி ஓடத்தொடங்கினார்கள். அன்று அந்த முறியடிப்புத் தாக்குதலை நடத்தி கடற்படையினரின் நடவடிக்கையை தடுத்திருக்காதுபோனால் அன்று அந்த இடத்தில் மேலும் பல பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பார்கள்.

இதேவேளை, காயமடைந்த மக்களை ஏற்றுவதற்காக கடலில் தரித்துநின்ற கப்பலைகூட கரையை நெருங்கவிடாது சிறீலங்காப் படையினர் காயமடைந்த மக்களை கொன்றுவிடவேண்டும் என்ற நேர்க்கில் கடலிலும் எறிகணைத் தாக்குதலை நடத்தினார்கள். அதேவேளை, கப்பலுக்காக கரையில் காத்துக்கிடந்த மக்கள் எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்த நிகழ்வுகளும் ஒருபுறம் நடந்தேறிக்கொண்டிருந்தது. எதிரியின் இறுக்கமான தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் மாத்தளன் பகுதியில் போராளிகளால் ஒரு 'வண்ட்' அடிக்கப்பட்டு இரண்டாம் நிலைபாதுகாப்பிற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதேவேளை, 20.04.2009 அன்று சாலைப் பகுதி ஊடாகவும் பச்சைப்புல் மோட்டைப் பகுதி ஊடாகவும் பாரிய முன்னகர்வு ஒன்றினை சிறீலங்காப் படையினர் மேற்கொள்கின்றார்கள். கடலில் இருந்து தாக்குதல் தொடுக்க, தரைவழியாக டாங்கிகள் எறிகணைகளின் சூட்டாதரவுடன் படைநகர்வு மேற்கொள்ளப்படுகின்றது. இதன் போது புதுமாத்தளன் பகுதியில் ஊடறுத்து வந்தேறிய படையினர், ஒரு இலட்சம் வரையான தமிழ் மக்களை சிறைப் பிடிக்கின்றார்கள். இவர்களின் இந்த நகர்வின்போது எண்ணிவிட முடியாத அளவில் மக்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். இறந்தவர்களின் உடலங்கள் அங்காங்கே பதுங்குகுழிகளுக்குள்ளும் கடற்கரையிலும் காணப்படுகின்றன. உடலங்களை தனது உணவாக்கிக்கொண்டிருந்தன காகங்கள். காகத்தின் இரைக்கு எம் தமிழ் உறவுகளின் உடலங்கள் மாறிக்கொண்டிருந்த நிலையிலும் அவற்றை எடுத்து புதைக்கவோ, எரிக்கவோ யாராலும் முடியவில்லை. அவர்களுக்கு இறுதிக்கிரிகை செய்யப்போபவருக்கே இறுதிக்கிரிகை செய்யவேண்டிய நிலை ஏற்படும் மிக ஆபத்தான நிலைக்குள் அடுத்து யார் என்ற கேள்வியுடனேயே மக்கள் இருந்துகொண்டிருந்தார்கள்.

இதேவேளை, மாத்தளன் பகுதியில் போரளிகளின் நிர்வாக தேவைக்காக பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்த பொருட்கள் பெருமளவில் விடுபடுகின்றன. இந்தப் பகுதிக்குள் போராளிகளும் அகப்படுகின்றார்கள். அவர்கள் பின்னர் கடல்வழியாக கரைபிடித்து முள்ளிவாய்க்கால் பகுதியை வந்தடைந்தார்கள். இதற்கிடையே, புதுமாத்தளன் பகுதியில் நுழைந்த படையினர் அங்கிருந்த மருத்துவமனை மருத்துவர்கள், காயமடைந்தவர்கள் அனைவரையும் கைதுசெய்கின்றார்கள். அந்த குறிப்பிட்ட ஊடறுப்பு சுற்றிவளைப்பு சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட மக்கள், பின்தளம் கொண்டுசெல்லப்பட்டு வதைமுகாமிற்கு மாற்றப்படுகின்றார்கள்.



தொடரும் .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உணவு முறையும் நோயற்ற வாழ்வும்

'வெள்ளம் வரும் முன்னே அணைகட்ட வேண்டும்' என்பது ஒரு முதுமொழி. அதேபோன்றுதான் நோய் வந்தபின்னர் அதற்குத் தீர்வு தேடுவதை விட, நோய் வருவதற்கு முன்பே அதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதே சரியான மருத்துவமாக இருக்கமுடியும். அந்த வகையில் பல்வேறு ஆய்வுகளிலும், அனுபவங்களிலும் கண்டறியப்பட்ட சில மருத்துவ ரீதியான உண்மைகளை இந்தப் பகுதியூடாகத் தொடர்ந்து பார்ப்போம். இவற்றைப் பின்பற்றவேண்டுமா இல்லையா என்பதை உங்கள் உங்கள் மருத்துவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். இவை சில கண்டறியப்பட்ட ஆலோசனைகள் மட்டுமே.

## கல்லீரலில் கவனம் தேவை!

நமது உடம்பில் குறிப்பிடத்தக்க உறுப்புகளில் ஒன்று, கல்லீரல். இது கருஞ்சிவப்பு நிறமுடையது. கல்லீரல், உடம்பில் பெரிய இரத்த வடிகட்டியாகவும், இரண்டாவது பெரிய நோய் எதிர்ப்பு அமைப்பாகவும் இயங்குகிறது.

வயிற்றின் இடதுபக்கத்தில் உதர விதானத்துக்குக் கீழே இடம்பிடித்திருக்கிறது. இது, சுழற்சியில் இருக்கும் இரத்த செல்களின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. நோய்த்தொற்றுகளில் இருந்து உடம்பைக் காக்கிறது.



குடல்வாலைப் போல கல்லீரலும் தேவையற்ற ஓர் உறுப்பு என்று பல நூற்றாண்டுகளாகக் கருதப்பட்டு வந்தது. சோக உணர்வுக்குக் காரணமான கறுப்பு திரவத்தை கல்லீரல் சுரப்பதாக ஹிப்போகிராட்டஸ் என்ற மருத்துவர் ஆய்வாளர் கருதினார். கல்லீரல் முற்றிலும் புதிர்கள் நிறைந்த உறுப்பு என கேலன் என்ற அறிஞர் கூறினார். சீனப் பாரம்பரிய மருத்துவத்தில், அதீதமான கவலைக்குக் காரணமானதாக கல்லீரல் குறிப்பிடப்படுகிறது. ஆங்கில இலக்கியத்தில், கோபம், சோகம் ஆகியவற்றைக் குறிப்பிடப் பயன்படும் சொல்லாக 'ஸ்பிலீன் (Spleen)' (கல்லீரல்) உள்ளது.

சாலை விபத்துகள், தடகள விளையாட்டுக்களின் விபத்து அல்லது தாக்குதல்களில் வயிற்றுப் பகுதி காயமடையும்போது கல்லீரல் சேதம் அடைவது பொதுவான அபாயமாக உள்ளது. அந்நிலையில் உடனடியாக அறுவைச்சிகிச்சை செய்யப்படாவிட்டால், கல்லீரலானது அதிர்ச்சிக்கும், மரணத்துக்கும் இட்டுச் செல்லும்.

செரிமானத்தின்போதும், அதன்பின்பும் கல்லீரலின் அளவு அதிகரிக்கிறது. மலேரியா காய்ச்சல் ஏற்பட்டால் கல்லீரல் 9 கிலோ வரை பெரிதாகக் கூடும். கல்லீரலின் ஒரு பகுதி மட்டும் நீக்கப்பட்டால் அது மீண்டும் வளர்ச்சி அடையக்கூடும். 1549ல் ஆண்டிரானோ ஸாக்கரெல்லோ என்பவர் முதல்முறையாக கல்லீரலை அகற்றினார். கல்லீரல் அகற்றப்பட்ட நோயாளி, அதன்பின்பும் ஆறாண்டுகள் வாழ்ந்தார்.

கல்லீரல் நீக்கம் (ஸ்பிலீனக்டமி) செய்யப்பட்டால், எதிர்உயிரிகளை உருவாக்கும், இரத்தத்தில் மாசுகளை அகற்றும் உடம்பின் திறன் குறைகிறது. நோய் எதிர்ப்புத்திறன் தாழ்கிறது. ஆனால் விரைவிலேயே ஈரலும், மற்ற உறுப்புகளும் அந்தப் பொறுப்பை ஏற்கின்றன. நோய்த்தொற்றுக்கு எதிராகப் போராடும் தங்கள் திறனை அதிகரித்துக்கொள்கின்றன. எனினும், கல்லீரல் குறித்து அதிக கவனம் தேவை.

## உடலில் கொழுப்பு சேர்ந்தால் மீண்டும் குறைக்க முடியாது!

குண்டானவர்கள் மற்றும் தொப்பையானவர்களுக்கு கசப்பான ஒரு தகவலை இலண்டன் மருத்துவ ஆராய்ச்சி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. சுகாதார மேம்பாடு தொடர்பாக அந்த ஆணைக்குழுவில் மேற்கொண்ட ஆய்வில், 'வாழ்க்கையில் ஒரு முறை குண்டாகி விட்டாலோ அல்லது உடலில் கொழுப்பு சேர்ந்து தொப்பையாகி விட்டாலோ மீண்டும் பழைய நிலைக்கு வரவே முடியாது' என தெரியவந்தது. இதற்காக, 1946 மற்றும் 1958ம் ஆண்டுகளில் பிறந்த சுமார் 25 ஆயிரம் பேரிடம் 55 ஆண்டுகளாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த இரண்டு குழுவினரும் 1980ம் ஆண்டு முதல் குண்டாகவோ அல்லது கொழுப்பு சேர்ந்து தொப்பையுடனோ மாறத் தொடங்கினார். அதன் பிறகு, உணவு கட்டுப்பாடு, யோகா என பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் உடல் எடையை மட்டுமே அவர்களால் குறைக்க முடிந்தது. உடலில் சேர்ந்த கொழுப்பை அவர்களால் குறைக்கவே முடியவில்லை என்பது கண்டு பிடிக்கப்பட்டது.

ACTION CONTRE LA FAIM

## பிரான்சை தலைமையகமாகக் கொண்ட பட்டினிக்கெதிரான அமைப்பின் உறுப்பினர்கள் 17 பேர் மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 5 ஆண்டுகள் நீங்காத நினைவில்

சிங்களத்தின் மனித நேயமற்ற படுகொலையில் தமது உயிரை ஈந்த 17 எம் தேச மனிதநேயத் தொண்டர்களுக்கும் நினைவுச்சுடர் ஏற்றி வணக்கம் செலுத்துவோம்.
அனைத்து தமிழ் மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்: 06.08.2011 சனிக்கிழமை பி.பகல் 3.00 மணிக்கு

இடம்: MUR DE LA PAIX Metro: Ecole Militaire (Ligne - 08)

தமிழீழ மக்கள் பேரவை
தொடர்புகளுக்கு: 06 58 58 92 90

## கண்களை திறக்கவைத்த....

அறிந்த மக்கள் அவரின் கருத்தை கேட்பதற்காக திரண்டு நின்றனர். பிராந்திய தளபதிகள் பக்கத்தில் சூழ்ந்துநிற்க எமது தேசியதலைவர் ஆற்றிய உரையானது மிகவும் அவதானத்துடனும், எளிமையான வார்த்தைகளாலும் உருவாக்கப்பட்டிருந்தது.

அந்த உரையானது அதுவரை இந்திய ஒப்பந்தத்தை ஏதோ தமிழர்களை காப்பாற்றப்போகும் ஒரே மார்க்கம் என்று நம்பிக்கொணடிருந்தவர்களின் கண்களை திறக்கவைத்து பாரதப் படைகள் வந்து இறங்கி நிற்பது சிங்களதேசத்தை காப்பாற்றவே என்ற எண்ணத்தை முதன் முதலில் புரியவைத்தது.

எனது அன்புக்குரிய தமிழீழமக்களே

என்று ஆரம்பித்த அந்த உரை மிகத்தெளிவாகவே மக்களுக்குள் உள்நுழைந்து எமது விடுதலையை வேறு எவரும் எடுத்துத்தரப் போவதில்லை என்ற உண்மையை உறைக்கச்சொன்னது.அந்த உரைமுழுவதும் எமது மக்களின் பாதுகாப்பு, அதற்கான உத்தரவாதம் என்பதுபற்றியே திரும்பத்திரும்ப வலியுறுத்தியது. இந்த ஒப்பந்தம் தமிழ்மக்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் விதமாகவோ, தமிழ் மக்களின் போராட்ட சக்தியின் ஒப்புதலுடனோ செய்யப்படவே இல்லை என்பதை மிகத்தெளிவாக தலைவர் கூறியது ஒப்பந்தத்தின் உண்மை முகத்தை தோல் உரித்துக்காட்டியது. உரையின் இறுதியில் அவர் தெளிவான தனது குரலில் எந்தவித தடுமாற்றமும் இன்றி அறிவித்தார். 'இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வு எதையும் தந்துவிடப் போவதில்லை. சிங்களபேரியவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விழும்காலம் வெகுதொலைவில் இல்லை' என்றார் தேசியத் தலைவர். அவர் தொடர்ந்து 'ஈழத்தமிழர்களுக்கு நிரந்தரமான ஒரே தீர்வாக சுதந்திர தமிழீழமே என்பதில் நான் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறேன். சுதந்திர தமிழீழ தேசத்தை அடையும் போராட்டத்தில் நான் தொடர்ந்தும் ஈடுபடுவேன் என்று மிகத்தெளிவாக உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.' என்று ஆழமான உறுதியுடன் கூறிவிட்டு **'போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் போராட்ட இலட்சியம் ஒருபோதும் மாறாது'** என்ற வரலாற்று வீரியம் நிறைந்த வசனத்தையும் கூறினார். உரையின் மிகமிக இறுதி வசனமாக 'நான் இந்த தேர்தல்களில் போட்டியிடப்போவதோ முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவோ போவதில்லை' என்று கூறியதன் மூலம் தமிழீழத்துக்கான தனது போராட்டம் ஒருபோதும் ஓயாது என்று சுட்டிக் காட்டினார்.

இந்த உரை நிகழ்த்தப்படாமல் விடப்பட்டிருந்தால் எமது மக்களுக்கு இந்தியாவின் கபட நோக்கம் தெரியவர நீண்டகாலம் ஆகிவிட்டிருக்கும். அதற்கிடையில் தமிழர்களின் விடுதலை இலட்சியம் கருவறுக்கப்பட்டிருக்கும். இந்த உரை மக்களை சிந்திக்க தூண்டியது. ஏதோ ஒரு பிழையான நோக்கத்துடன் தான் பாரதப் படைகள் வந்து இறங்கி நிற்கிறார்கள் என்ற முதற்பொறியை இது ஏற்படுத்தியது. தேசியத் தலைவரின் சுதுமலைப்பேச்சு என்பது பல விடயங்களில் மக்களுக்கு தெளிவை ஏற்படுத்திய உரை. ராஜீவ் காந்தியுடன் இராஜதந்திர நரியான ஜெயவர்த்தனா செய்துகொண்ட ஒப்பந்தம் சிங்கள நலனுக்கானதுதான். அது தமிழர்களுக்கு எதுவும் தரப்போவதில்லை என்று கண்களை திறந்த உரை அது. மிகவும் தெளிவான குரலில் எந்தவித பிசிறும், ஐயமும் இன்றி ஆற்றப்பட்ட உறுதிநிறைந்த அந்த உரையின் 'போராட்டவடிவங்கள் மாறலாம். ஆனால் போராட்ட இலட்சியம் மாறாது' என்ற குரல் என்றும் என்றும் எமக்கான பாதையை அடையாளம் காட்டியபடிக்கே நீளும்.

## எதிரணிக்குள் வெடித்துள்ள....

ஆனால், அமெரிக்காவின் அங்கீகாரத்திற்கான காரணங்கள் வேறாக இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். எதிரணியினர் தமது படைக்கு ஆட்களைச் சேர்க்கவும், ஆயுதங்களை வாங்கவும் பெருமளவு நிதி தேவைப்படுகிறது. அவர்களின் தடியை எடுத்து அவர்களை அடிப்பது போல, கடாஃபியின் நிதியை எடுத்து எதிரணியைப் பலப்படுத்தவதற்கே அமெரிக்காவின் இந்த அரவணைப்பு என்கின்றனர் ஆய்வாளர்கள். அதாவது, பொருளாதார நிதி நெருக்கடியில் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் பல சிக்கியிருக்கின்றன. இந்நிலையில், கடாஃபியை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்காக பல பில்லியன் டொலர்களை செலவழித்து தங்களின் பொருளாதாரத்தை இழக்க இந்நாடுகள் விரும்பவில்லை. கடாஃபியின் வங்கிக் கணக்குகளில் இருக்கும் நிதியை எடுத்து கடாஃபியை அடிப்பது தான் இந்தத் திட்டம். கடாஃபி அரசின் நிதி சுமார் 34 பில்லியன் டொலர்களை அமெரிக்கா முடக்கி வைத்துள்ளது. எதிரணியின் அமைப்பான இடைக்காலத் தேசியச் சபையை சட்டபூர்வமான அரசாக அங்கீகரிப்பதன் மூலம் அந்த நிதியில் ஒருபகுதியை அவர்களுக்கு அமெரிக்கா வழங்கும். அவ்வாறு வழங்கும்போது தாக்குதல் நடத்தும் நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்குதல் செலவுகளையும் பிடித்துக் கொண்டே வழங்கும். அத்துடன், எதிரணிக்கும் செலவு செய்யவேண்டிய தேவையும் இல்லை. அவர்களின் பணத்திலேயே அவர்கள் அடிபட்டுக்கொள்வார்கள் என்ற பல திட்டங்களுடன்தான் எதரிணிக்கான இந்த அங்கீகாரத்தை அமெரிக்கா வழங்கவிரும்புகின்றது என்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது.

இதேபோன்றுதான் பிரித்தானியாவின் நடவடிக்கையும் அமைந்துள்ளது. லிபியாவின் தூதரக அதிகாரிகள் அனைவரையும் வெளியேற்றியுள்ள பிரித்தானியா, எதிரணியை சட்டரீதியான அரசாங்கமாக தாம் ஏற்பதாக அறிவித்துள்ளது. அத்துடன், பிரித்தானியாவால் தற்போது முடக்கி வைக்கப்பட்டுள்ள லிபிய அரசாங்கத்தின் சொத்துக்களையும் விடுவித்து, அவற்றின் மூலம் எதிரணியினருக்கு நிதியுதவி அளிக்கவுள்ளதாகவும் பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.

கடாஃபிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நேட்டோவின் நாடுகள் அங்கு பல பில்லியன்களை இழந்துள்ளன. அவற்றை மீள வசூல் செய்யும் நடவடிக்கைகளாகவே இவை பார்க்கப்படுகின்றன. அதாவது, அவர்களின் கையாலேயே அவர்களின் கண்களைக் குத்தும் நடவடிக்கை. வரலாறுகள் எங்கும் இவ்வாறுதான் நடைபெற்றுவருகின்றது. ஆனால், இதனை உணரும் நிலையில்தான் எவரும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொலை செய்வது எப்படி?

# படித்துவிட்டு மனைவியை கொன்ற கணவன்!



பிரித்தானியாவில் கணவன் ஒருவர் கொலை செய்வது எப்படி என்பதை இணையத்தளம் ஊடாக படித்து தெரிந்துகொண்டு தனது மனைவியயை கொடூரமாக படுகொலை செய்துள்ளார். பிரித்தானியா உள்ள யார்க்ஷயரைச் சேர்ந்தவர் ஆல்பிரடோ மெரிகோ (43) 2008ம் ஆண்டு லிண்டா (40) என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். மெரிகோவிற்கு ஏற்கனவே இரு பிள்ளைகள் இருந்தார்கள். லிண்டாவின் மூலம் மேலும் ஒரு ஆண் குழந்தைக்கு தந்தையானர். தற்போது அக்குழந்தைக்கு இரண்டரை வயது.

திருமணம் முடிந்த நாளில் இருந்தே இருவருக்கும் தகராறு தான். தன்னை சந்தேகப்படுவதாகவும், கட்டுப்படுத்த முயல்வதாகவும் கணவர் மீது லிண்டா புகார் கூறி வந்துள்ளார். இதையடுத்து 2009ம் ஆண்டு லிண்டா யார்க்ஷயரில் உள்ள தனது கணவர் வீட்டில் இருந்து வெளியேறினர். பின்னர் விவகாரத்து பெறுவதற்கு முயற்சி செய்து வந்தார். வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்த லிண்டா அங்கு தனது கணவரை அனுமதிக்கவில்லை. தங்கள் மகனுக்கு பெற்றோர் தேவை என்று கூறி லிண்டாவுடன் சேர முயன்றுள்ளார் மெரிகோ. ஆனால் லிண்டா ஒரேயடியாக மறுத்துவிட்டார். இதனால் ஆத்திரம் அடைந்த மெரிகோ இணையதளத்தில் கொலை செய்வது எப்படி? மற்றும் குற்றம் செய்ய 10 குறிப்புகள் ஆகிவற்றைப் படித்துள்ளார். இதயைடுத்து லிண்டாவின் வீட்டிற்கு சென்று அவரை குறைந்தது 100 தடவை கத்தியால் குத்தியுள்ளார். இந்த கொடூரச் சம்பவம் நடந்தபோது அவர்களின் 2 வயது மகன் அந்த அறையில் தான் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தான். இது குறித்து தகவல் அறிந்த காவல்துறையினர் மெரிகோவை கைது செய்து அவர் மீது கொலை வழக்கு பதிவு செய்தனர்.

# சீனாவின் கடலாதிக்கம்

## ஐந்து கிலோ மீற்றர் ஆழத்திற்குச் செல்லும் நீர்மூழ்கி

கடலுக்கு அடியில் 3 பேருடன் சுமார் 5057 மீற்றர் (ஐந்து கிலோ மீற்றர்) ஆழம் வரை செல்லக்கூடிய சிறிய ரக நீர்மூழ்கிக் கப்பலொன்றை சீனா வெற்றிகரமாக இயக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சீனாவின் உள்நாட்டுத் தயாரிப்பான 'ஜியாயோலோங்' என்ற நீர்மூழ்கிக் கப்பலின் மூலமே இப்பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பசுபிக் கடலின் மிக ஆழமான பகுதியிலேயே இந் நீர்மூழ்கி பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை காலமும் அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளே, 3500 மீற்றருக்கும் மேற்பட்ட ஆழத்தில் நீர்மூழ்கிகளை இயக்கியுள்ளன. கடலின் அடியில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் கடல் வளங்களை பாதுகாக்கவுமே இந் நீர்மூழ்கியை உருவாக்கியுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. எனினும் சீனா தெற்காசிய கடற்பகுதியில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் நடவடிக்கையாகவே இதனை கருதவேண்டியுள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கடந்த வருடம் சர்ச்சைக்குரிய கிழக்கு சீன கடற்பகுதி கடல் அடியில் சீனா தனது தேசியக் கொடியை நட்டது. கிழக்கு சீனக் கடற்பகுதியானது கனிய எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் நிறைந்ததாகக் கருதப்படுவதுடன் இக்கடற்பகுதியானது சீனா, தாய்வான், பிலிப்பைன்ஸ், வியட்னாம், புருனே மற்றும் மலேசிய நாடுகளை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது.



இந் நடவடிக்கையானது அக்காலப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததுடன் சீனா இப்பகுதியை அபகரிக்க முயலுவதாகவும் கடுமையாக சாடப்பட்டிருந்தது. இதேவேளை இத்தகைய நீர்மூழ்கிகள் மூலம் கடலடியில் உள்ள தொடர்பாடல் 'கேபிள்'களில் பாதிப்பை ஏற்படுத்தவோ, 'சேர்வர்'களில் இருந்து தகவல்களைத் திருடவோ முடியுமென அவதானிகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விண்ணில் தெரியும் பெயர்!




அபுதாபியை சேர்ந்த பெரும் கோடீஸ்வரர் செய்க் ஹாமத், அபுதாபி அருகே உள்ள அல்புதைஷி (Al Futaisi) என்ற குட்டித் தீவை விலைக்கு வாங்கியுள்ளார். தற்போது, அந்த தீவின் மீது 3 கிலோ மீற்றர் நீளத்துக்கு தன்னுடைய பெயரை 'பிரமாண்ட வடிவில்' பொறித்து வருகிறார். ஆங்கில பெரிய எழுத்துகளில் பொறிக்கப்படும் அந்த பெயரை, விண்ணில் இருந்து பார்க்கலாம். பெயரின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு கிலோ மீற்றர் நீளத்திலும், அரை கி.மீ. அகலத்திலும் எழுதப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, சீனப் பெருஞ்சுவரை மட்டுமே விண்ணில் இருந்து பார்க்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. சாதனைகளுக்காக அதிக செலவு செய்து வரும் ஹாமத், 200 வெளிநாட்டு பழமையான கார்களைக் கொண்ட அருங்காட்சியகம் ஒன்றையும் அவர் நடத்தி வருகிறார். அண்மையில் உலகில் விலை உயர்ந்த காரை வாங்கியுள்ளார். இது தவிர, உலகிலேயே பிரமாண்டமான பாரவண்டியை வடிவமைத்து வருகிறார். சாதாரண பாரவண்டியை விட 64 மடங்கு பெரியதாக அது இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஹமாத், 'Rainbow Sheikh' என்ற பெயரால் அழைக்கப்படுவபர் என்பதுடன், சவூதி அரேபியாவை ஆளும் குடும்பத்தின் உறுப்பினர் ஒருவராவார்.



## பிணவறையில் வைக்கப்பட்ட சடலம் எழுந்து நடந்தது!

தென் ஆபிரிக்காவில் இறந்ததாக கருதி சவ அறையில் வைக்கப்பட்ட ஒருவர் 21 மணி நேரம் கழித்து உயிருடன் எழுந்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். இதுகுறித்து பிணவறை மைய உரிமையாளர் அயாண்டா மகோலா கூறுகையில், காச நோய்க்கு 50 வயது ஆண் இறந்ததாக அவரின் உறவினர்கள் அழைத்தனர். அங்கு சென்ற தங்கள் மையத்தின் வாகன சாரதி, இறந்தவரின் நாடி, இதய துடிப்பை பார்த்தார். இறந்ததாக கருதி அவரின் உடலை கொண்டுவந்து பிணவறையில் வைத்துவிட்டு சென்றார். சுமார் 21 மணி நேரத்துக்கு பிறகு மறுநாள் பிணவறையில் பூட்டப்பட்ட குளிர்பதன அறைக்குள் இருந்து தட்டும் சத்தம் கேட்டது. அங்கு சென்று திறந்துபார்த்தபோது நடந்த சம்பவத்தை என்னால் நம்ப முடியவில்லை. அறையைத் திறந்ததும் எழுந்து நடந்துவந்த அந்த முதியவர் தனக்கு குளிராக இருப்பதாகவும், தான் எப்படி இதற்குள் அடைக்கப்பட்டேன் என்று கேட்டபோது தங்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டதாக தெரிவித்தார். மயக்க நிலையில் இருந்த அவரை இறந்துவிட்டதாகக் கருதியுள்ளனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



## மூளையின் செயல்பாடுகளை அறியும் மென்பொருள்

மனித மூளையில் 7 ஆயிரம் கோடி செல்கள் உள்ளன. இதன் செயல்பாடுகளை கண்டறியக்கூடிய மென்பொருள் (Software) ஒன்றை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். ஜேர்மனி நாட்டு விஞ்ஞானிகளே இந்த மென்பொருளை உருவாக்கி இருக்கிறார்கள். மருத்துவ ஆராய்ச்சிக்கான மேக்ஸ் பிளாங் இன்ஸ்டிடுட்டை சேர்ந்த விஞ்ஞானிகள் மோரிட்ஸ் ஹெல்ம்ஸ்டெடியர், கெவின் எல் பிரிக்மேன், வின்பிரைடு டெங் ஆகியோர் மூளையின் செயல்பாடுகளை படிக்கக்கூடிய 2 கணினி மென்பொருள்களை உருவாக்கி இருக்கிறார்கள். இந்த மென்பொருள்களுக்கு நோசோஸ், ரெஸ்காப் என்று பெயரிட்டுள்ளனர்.


A D IMMO

பிரான்ஸ் முழுவதும் வீடு வாங்க, விற்க,
வாடகைக்குப் பெற நம்பிக்கையான முழுத் தமிழ் நிறுவனம்

APPARTEMENTS

| | | | |
|---|---|---|---|
| APP | 4P | LE GRAND | 175 000 Euro |
| APP | 3P | NOISSY LE SEC | 170 000 Euro |
| APP | 4P | CHOISY LE ROI | 175 000 Euro |
| APP | 4P | BONDY | 170 000 Euro |
| APP | 4P | BOBIGNY | 160 000 Euro |
| APP | 3P | DRANCY | 155 000 Euro |
| APP | 3P | EPINY | 150 000 Euro |
| APP | 3P | LE BOURGET | 170 000 Euro |

கடன் வசதிகள் செய்து தரப்படும்
பல வீடுகள் விற்பனைக்கு உண்டு

PAVILLON

| | |
|---|---|
| DRANCY 4P | 270 000 Euro |
| BONDY 8P | 340 000 Euro |
| LA COURNEUVE 4P | 310 000 Euro |
| BOBIGNY 4P | 280 000 Euro |
| LE BOURGET 4P | 290 000 Euro |
| GAGNY 4P | 288 000 Euro |
| IE BLANC MESNIL 4 P | 260 000 Euro |
| SEVRAN 4 P | 255 000 Euro |



தம்பி : 06 27 50 09 57 அஜந்தன் : 06 60 93 45 27

தொடர்புகளுக்கு :
252, Rue Anatole France 93700 Drancy RER B - Drancy Tél : 01 48 30 72 62 Fax : 01 48 32 51 32


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்புடைமை

குறள்-75

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

உலகில் இன்புற்று வாழ்கின்றவர்க்கு வாய்க்கும் சிறப்பு, அவர் அன்புள்ளம் கொண்டவராக விளங்குவதன் பயனே என்று கூறலாம்.

# உதவி


கழுதை ஒன்று, நிறைய பொதி சுமந்து கொண்டு சென்றது. அதன் பின்னால் கழுதையின் எஜமானரும், அவர் வளர்க்கும் நாயும் வந்து கொண்டிருந்தனர். செல்லும் வழியில் புல் தரையைப் பார்த்ததும், கழுதையை அங்கு மேய விட்டு மரத்தின் நிழலில் படுத்துத் தூங்கினார் எஜமானர்.

கழுதை அங்கிருந்த புற்களை நன்கு மேய்ந்தது. ஆனால், நாய்க்குத் தின்பதற்கு எதுவுமில்லை. பசி, அதன் வயிற்றைப் பிடுங்கியது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த நாய், கடைசியாக கழுதையைப் பார்த்து, 'நண்பனே, என்னால் பசி தாங்க முடியவில்லை. எஜமானரோ தூங்குகிறார். கொஞ்சம் கீழே படு. உன் பொதியில் உள்ள உணவில் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன்`` என்று கெஞ்சியது.

நாயின் கெஞ்சலை கழுதை பொருட்படுத்தவில்லை. அது ஆனந்தமாகப் புற்களை மேய்ந்து கொண்டிருந்தது. நாயும் விடாமல் கெஞ்சிக் கொண்டிருந்தது. நாயின் தொந்தரவு தாங்காத கழுதை, "என்னப்பா அவசரம்? எஜமானர் எழுந்திருக்கட்டும். அவர் சாப்பிடும்போது உனக்கும்தான் கொடுப்பாரே" என்றது. வேறு வழியில்லாமல் நாய் சோர்ந்து போய் படுத்துக் கொண்டது.

அப்போது ஓநாய் ஒன்று மேய்ந்து கொண்டிருந்த கழுதை மீது பாய்ந்தது. பயத்தால் அலறிய கழுதை,

"நண்பா, சீக்கிரம் ஓடிவந்து என்னைக் காப்பாற்று" என நாயைப் பார்த்து கதறியது.



படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல்,

"ஏன் அவசரப்படுகிறாய்? கொஞ்சம் பொறுமையாக இரு, எஜமானர் விழிக்கட்டும். அவர்தான் கட்டாயம் உனக்கு உதவி செய்வாரே"

என்றது நாய்.

**கதையின் நீதி:**
**நாம் மற்றவர்களுக்கு உதவினால் தான், மற்றவர்கள் நமக்கு உதவி செய்வார்கள்.**

# ஜெட் விமானங்கள் எவ்வாறு கோடுகள் வரைகின்றன?

ஜெட் விமானங்கள் பறக்கும்போது அதன் பின்னே வெண்ணிறக் கோடு தெரியும். நீங்கள் இதைப் பலமுறை பார்த்திருக்கலாம். இது ஜெட் இயந்திரத்தில் இருந்து வெளியேற்றப்படுகிற புகையென்று நீங்கள் நினைத்திருந்தால் அது தவறு. ஜெட் விமானம் வரைகிற அந்தக் கோடு, புகை அல்ல. ஜெட் இயந்திரத்தில் உள்ளே எரிபொருள் எரியும்போது, எரிபொருளில் அடங்கியிருக்கிற ஹைட்ரசனும் காற்றில் உள்ள ஒக்சிசனும் சேர்ந்து நீராவியாக உருவமடைகின்றன. இந்த நீராவி வெளியேற்றப்படும்போது, வெண்ணிறக் கோட்டின் வடிவத்தில் மேகங்கள் உருவாகின்றன. இதுதான் நாம் காணும் வெண்ணிறக் கோடு.



வாயு வறண்டிருந்தால், இந்த 'நீராவிக் கோட்டின்` நுட்ப நீர்த் துளிகள் , அதில் கரைந்து சட்டென்று மறைந்துவிடுகின்றன. மாறாக, வாயு ஈரமுள்ளதாக இருந்தால், அந்தக் 'கோடு` சற்று நேரம் நிலைத்திருப்பதை நாம் காண முடியும். விமானத்திற்குச் சற்று பின்னால் தான் இந்தக் கோடுகள் ஆரம்பிக்கின்றன. என்று, கூர்ந்து பார்த்தால் நீங்கள் அறிந்துகொள்வீர்கள். இதற்குக் காரணம், இயந்திரத்தில் இருந்து வெளியே வருகிற சூடான நீராவி குளிர்ச்சியடைவதற்குச் சற்று நேரமாகிறது என்பதுதான். ஜெட் விமானங்களைக் கொண்டு மக்களுக்காக நிகழ்ச்சிகள் நடத்தும்போது, இந்த வெள்ளைக் கோடுகளைப் பல நிறங்களில் வரும்படிச் செய்கிறார்கள்.


குட்டிக் கதை

# மரத்தின் கவலை

அந்த காட்டில் பல்வேறு வகையான மரங்கள் இருந்தன. மாமரம் ஒன்றும், வேப்பமரம் ஒன்றும் எதிரெதிரில் இருந்ததால், இரண்டு மரமும் நண்பர்களாக இருந்தன. ஒருநாள் வேப்பமரம் மிகவும் கவலையாக இருந்தது. அதைக் கவனித்த மாமரம்,

"ஏன் கவலையாக இருக்கிறாய்?" என வேப்பமரத்திடம் கேட்டது.

"நண்பா, மற்ற மரங்கள் அனைத்தும் எல்லாவற்றிற்கும் உபயோகப்படுகின்றன. அந்த மரங்களை



அனைவரும் விரும்புகிறார்கள். ஆனால், நான் கசப்பாக இருப்பதால் யாரும் என்னை விரும்புவதில்லை. என்னை கடவுள் ஏன் படைத்தார்?" என்று புலம்பியது வேப்பமரம்.

இதைக்கேட்ட மாமரம் கலகலவென சிரித்தது.

"உன்னைப் பற்றி நான் சொல்லட்டுமா? மரங்கள் அனைத்தும் நிழல் தருபவை. நீ இருக்கும் இடத்தில் சுத்தமான காற்றை சுவாசிக்கலாம். கோவில்களிலும் நீ இருப்பாய். அம்மன் கோவில்களில் உன்னுடைய இலையை பிரசாதமாக தருவார்கள். உன்னுடைய பூக்களைக் கொண்டு ரசம் செய்யலாம். அது உடலுக்கு சக்தி தரும்.

வேப்பம்பழத்தைக் கொண்டு சிறுவர்கள் விளையாடி மகிழ்வார்கள். வேப்பந்துளிரை பச்சிளங் குழந்தைகளுக்கு மருந்தாக அரைத்து ஊற்றுவார்கள். மருத்துவ உலகில் உன்னால் பல மருந்துகள் செய்யப்படுகின்றன. சருமப் பாதுகாப்பிற்கு உன்னைப் பயன்படுத்துகிறார்கள். வருடப்பிறப்பு, பண்டிகை என விசேஷங்களிலும் நீ முக்கிய இடம்பெறுகிறாய். நண்பா, கடவுள் படைத்த எதுவும் வீண் இல்லை. அனைத்தும் பயனுள்ளதே. இனிமேல் கவலைப் படாமல், கடவுளுக்கு நன்றி சொல்லி நம் வேலையைச் செய்யலாம்" என்று விளக்கியது மாமரம்.

அதைக்கேட்ட வேப்பமரம் மகிழ்ச்சியில் தலையை ஆட்டி பூக்களை உதிர்த்தது.

*- ரா. கிருத்திகா*




**இளையோர்களே இது உங்களுக்கான உலகம். இங்கு உங்கள் ஆக்கங்களை, ஆரோக்கியமான விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.** ***இது உங்களுக்கான களம்...***

# தங்க மீன்கள் மன்னர்களுக்கே சொந்தம்!

குளங்களில் நீந்தித் திரிந்த தங்க மீன்களை முதலில் வீட்டில் வளர்க்கத் தொடங்கியவர்கள் சீனர்கள்தான். டாங்க் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் குளங்களில்தான் மீன் வளர்த்தனர். சாங்க் வம்சாவளி வந்த பேரரசி, கி.பி. 1162ல் தங்கமீன்கள் வளர்ப்பதற்கு என்றே குளங்களை வெட்டச் செய்தார். இதில் ரொம்ப முக்கியமான விடயம் என்னென்றால், தங்க நிற அல்லது மஞ்சள் நிற மீன்களை அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் வளர்க்க வேண்டும் என்று ஆணை போட்டிருந்தார்கள். ஏனென்றால், தங்க நிறம் அரசர்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்பதுதான். இப்படியே சீன நாட்டிலிருந்து பல்வேறு நாடுகளுக்கும் தங்க



மீன்கள் வளர்க்கும் கலை பரவத்தொடங்கியது. ஐரோப்பிய நாடுகளில் 17ம் நூற்றாண்டில் தங்கமீன் பரவத் தொடங்கியது. தங்கமீன் 59 சென்டிமீற்றர் நீளம் வரை வளரும். அதிகபட்ச நிறை நாலரை கிலோ வரைக்கும் இருக்கும். தங்கமீன்களுக்கு சுமார் 6 முதல் 8 ஆண்டுகள்தான் ஆயுள்.

# பெரிய கை...!

*ரோமானிய சாம்ராஜ்யத்தை ஆட்சி செய்த வெஸ்பாசிய (கி.பி.9–79) மன்னருக்கு அவனது அவையில் இருந்த சான்றோர்கள் ஒரு பெரிய சிலை அமைக்க முடிவு செய்தார்கள். இதற்காக நிதி திரட்டவும் முடிவு செய்து நிறைய பணம் சேர்த்தார்கள். அவையில் இருந்த ஒரு மதியூகி மன்னரைச் சென்று சந்தித்தார். "எவ்வளவு பொற்காசுகள் திரட்டியிருக்கிறீர்கள்?" என்றார் மன்னர். "மன்னா நாங்கள் பத்து இலட்சம் பொற்காசுகள் சேகரித்திருக்கிறோம்" சந்தோசமாகச் சொன்ன மதியூகி "ஆனால் சிலையைத்தான் எங்கே வைப்பது என்று தெரியவில்லை" என்றார். 'இதோ இந்த இடம்தான் சிறந்த இடம்`` என்றவாறே வெஸ்பாசியன் அந்த பொற் காசுகளையெல்லாம் வாங்கிக்கொண்டான்.*

13

# முதல் 10

**உலகில் அதிகமான மரணம் நிகழும் நாடு**

(ஆண்டிற்கு – 1000 பேருக்கு)

| | | |
|---|---|---|
| 1 | பொஸ்ற்வானா | 28.92 |
| 2 | அங்கோலா | 25.86 |
| 3 | லெசோதோ | 24.79 |
| 4 | சிம்பாபே | 23.30 |
| 5 | சுவாசிலாண்ட் | 23.06 |
| 6 | மாலாவி | 23.01 |
| 7 | நைஜர் | 21.51 |
| 8 | ஆப்கானிஸ்தான் | 21.12 |
| 9 | சியரா லியோன் | 20.62 |
| 10 | மொசம்பிக் | 20.60 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான்

# இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் இலக்கு வைக்கும் 24 அணு ஆயுத ஏவுகணைகள்

ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவு வரை அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கும் 24 ஏவுகணைகளை, அடுத்த ஒரு ஆண்டுக்குள் இராணுவத்தில் சேர்க்க பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. அடுத்த ஆண்டு பாகிஸ்தான் இராணுவத்தில் பல தரப்பட்ட அணு ஆயுத ஏவுகணைகளை சேர்க்க அந்த நாடு திட்டமிட்டுள்ளது.

இந்தியாவின் அனைத்து நகரங்களையும் சென்றடையும் வகையில் அந்த ஏவுகணைகள் தேர்வு செய்யப்படுகின்றன. இதற்கான ஏற்பாடுகளை அணு ஆயுத போர் திட்ட பிரிவு மேற்கொண்டுள்ளதாக அந்த நாட்டு பத்திரிகை தெரிவித்துள்ளது.




இஸ்லாமாபாத்தில் வெளியாகும் அந்த பத்திரிகையில் கூறப்பட்டுள்ளதாவது, பாகிஸ்தான் இராணுவத்தில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை, தரையில் இருந்து வானில் பாயும் ஏவுகணை, வானில் இருந்து வானிலேயே ஏவப்படும் ஏவுகணை என பலதரப்பட்ட



24 வகை ஏவுகணைகள் சேர்க்கப்பட உள்ளன. அவை அனைத்தும் 700 கிலோ மீற்றர் முதல் ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவு வரை தாக்கும் திறன் கொண்டவையாக இருக்கும். அதாவது, இந்தியாவின் அனைத்து நகரங்களையும் குறி பார்க்கும் வகையில் இருக்கும்.

அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் வகையிலான இவற்றை அடுத்த ஒரு ஆண்டுக்குள் இராணுவத்தில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒரே ஆண்டில் இவ்வளவு அதிகமான ஏவுகணைகளை இராணுவத்தில் சேர்ப்பது இதுவே முதல் முறையாக இருக்கும். பிற நாடுகளை, குறைந்தபட்ச அச்சுறுத்தலில் வைக்கும் கொள்கையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பணியை தேசிய கட்டளை ஆணையத்தின் மேற்பார்வையில் அணு ஆயுத போர் திட்டப்பிரிவு செய்கிறது. இவ்வாறு பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்த தகவலை, பாகிஸ்தான் உயர் அதிகாரிகள் மறுத்துள்ளனர். அதே நேரத்தில், கீழ் மட்டத்தில் உள்ள இராணுவ அதிகாரிகள் இந்த செய்தியை உறுதி செய்தனர். அவர்கள் கூறுகையில், 'அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகளுடன் இந்தியா மேற்கொண்டு வரும் அணு சக்தி கூட்டுறவை பாகிஸ்தான் மிகுந்த கவலையுடன் உன்னிப்பாக கவனித்து வருகிறது. அணுசக்தி துறையில் சில முக்கிய நிகழ்வுகள் இந்தியாவில் நடப்பதை நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். எனவே, நாங்களும் பதிலுக்கு தயாராகிறோம்" என்று தெரிவித்துள்ளனதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, பாகிஸ்தான் ஆள் இல்லாத உளவு விமானங்களை உள்நாட்டிலேயே தயாரித்துள்ளது. இந்த விமானங்களில் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. கடலோர பகுதிகளில் பயன்படுத்துவதற்காக இந்த உளவு விமானங்கள் பயன்படுத்தப்படும் என்று பாக் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. கராச்சி நகரில் உள்ள விமானதளத்தில் அண்மையில் நடந்த விழா ஒன்றின் போது இந்த உளவு விமானங்கள் கடற்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இந்த விழாவில் கடற்படை தளபதி அட்மிரல் நோமன் பஷீர் கலந்துகொண்டு பேசினார். இந்த விமானங்கள் மணிக்கு 241 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக்கூடியவை என்றும், இவை தரைமட்டத்தில் இருந்து 10 ஆயிரம் அடி உயரம் வரை பறக்கக்கூடியவை என்றும் அவர் தெரிவித்தார்.

பிரித்தானியா

# குடியேற்ற சட்டத்தை எதிர்த்து வழக்கு

பிரித்தானிய குடியேற்றச்சட்டத்தின்படி அங்கு குடியேறுபவர்களுக்கு ஆங்கிலம் பேச, எழுத, படிக்க தெரிந்திருக்கவேண்டும். இந்த சட்டத்தை எதிர்த்து பிரித்தானிய குடியுரிமை பெற்ற இந்திய பெண் ரஷீதா சப்தி நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார். இவரது கணவர் பாலி சப்திக்கு 57 வயது ஆகிறது. அவர் இந்தியாவில் வசிக்கிறார். இவர்களுக்கு திருமணமாகி 37 ஆண்டுகள் ஆகிவிட்டது. இவர்களுக்கு 6 குழந்தைகள் இருக்கிறார்கள். பாலிக்கு ஆங்கிலம் தெரியாது. இதனால் ரஷீதா குடியேற்ற சட்டத்தை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். என் கணவர் பிரித்தானியாவில் குடியேற இருக்கிறார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்பதால் அவரால் குடியேற முடியவில்லை. இந்த சட்டம் எங்கள் குடும்ப வாழ்க்கைக்கு தடையாக இருக்கிறது. திருமணம் செய்து கொண்ட நாங்கள் தம்பதிகளாக வாழ்க்கை நடத்தும் உரிமைக்கு எதிராக இருக்கிறது. இது மனித உரிமைக்கு எதிரானது என்று கூறி அவர் மனு தாக்கல் செய்து இருக்கிறார்.

அமெரிக்கா

# கடன் வரம்பை உயர்த்தாவிட்டால் பொருளாதாரப் பேரழிவு

அமெரிக்காவின் கடன் பெறும் வரம்பை உயர்த்தாவிட்டால் மிகப் பெரும் பொருளாதார பேரழிவு ஏற்படும் என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜே கார்னே தெரிவித்துள்ளார். மிகக் குறுகிய கால அவகாசமே உள்ளதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி இப்பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.



வெள்ளை மாளிகையில் கடந்த 27ம் திகதி புதன்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது கார்னே கூறியதாவது, ஒகஸ்ட் 2ம் திகதிக்குள் இப்பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும். இல்லையெனில் அமெரிக்க வரலாற்றிலேயே முதல் முறையாக மிகப் பெரும் பொருளாதார பேரழிவை சந்திக்க நேரிடும். எனவே அரசியல் தலைவர்கள் ஒன்றுகூடி இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதன் மூலம் பேரழிவு ஏற்படுவதைத் தடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பிரச்னைக்குத் தீர்வு காண அதிபர் ஒபாமா அனைத்து வகையான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இது தொடர்பாக குடியரசு கட்சித் தலைவர்களுடன் அவர் ஆலோசனை நடத்தி வருகிறார். இந்த விடயத்தில் தீர்வு காண உரிய முயற்சிகள் எடுக்கப்படுவதாக அவர் கூறினார். மிகக் குறுகிய கால அவகாசமே உள்ளது. இந்த விடயத்தில் விரைவாக முடிவெடுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

கடன் பெறும் ஆணையம் கடன் பெற முடியாத நிலை வரலாற்றில் முதல் முறையாக ஏற்படும். அவ்விதம் நேர்ந்தால் அது மிகவும் பாதிப்பாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார். பொதுவாக நடைமுறை விதிமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். கடன் பெறும் அளவை உயர்த்தும் விடயத்தில் அனைத்து உறுப்பினர்களும் இணைந்து செயலாற்ற வேண்டும். இந்த விடயத்தில் கால தாமதம் செய்வதால் கடும் விளைவுகள் ஏற்படும். ஸ்திரமற்ற நிலை காரணமாக ஏற்கனவே பங்குச்சந்தை கடும் சரிவைச் சந்தித்துவிட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய சூழல் அனாவசிய சந்தேகத்தை உலகம் முழுவதும் ஏற்படுத்துவதோடு, சர்வதேச அளவில் பொருளாதாரத்திலும் பெரும் பாதிப்பு ஏற்படும். உலகிலேயே மிகப் பெரும் வல்லரசான அமெரிக்கா, அதிக அளவு தங்கத்தை தன்னகத்தே கொண்டுள்ள வலிமையான நாடு என்ற பெருமையுடைய நாட்டில் இத்தகைய சூழல் உருவாக அனுமதிக்கலாமா? என்று கார்னே கேள்வியெழுப்பினார். இப்போது நமக்கு கால அவகாசம் குறைவாக இருப்பது பிரச்னை அல்ல. இப்போதைய சூழல் அனைவரும் அறிந்ததே. இத்தகைய சூழலில் மிகுந்த உறுதியோடு சில முடிவுகளை எடுத்தாக வேண்டும். மக்கள் கருத்தறிந்து முடிவு எடுப்பதற்கு கால அவகாசம் இருந்தால் அத்தகைய முறையை மேற்கொள்ளலாம் என்றும் கார்னே சுட்டிக்காட்டினார். கடன் பெறும் வரம்பு உயர்த்தப்படாவிட்டால், நிதிப் பொறுப்புகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும். இப்போதைய தேவையெல்லாம் அரசின் செலவினத்தை ஈடுகட்ட போதுமான நிதி தேவை. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் கடன் பெறுவதற்கு வாய்ப்பிருந்தும் அதை பெற முடியாத நிலையை உருவாக்கலாமா?

மக்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருந்தால், இதுபோன்ற சூழல் உருவாக அனுமதிக்கலாமா? வட்டி மீதான கடன் அதிகரிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதன் பாதிப்பு

(28ம் பக்கம் பார்க்க)

## தவறாக பாய்ந்தது அம்பு – பக்கத்துவீட்டு பாட்டி படுகாயம்

அமெரிக்காவில் மிசோரி மாநிலம் செயின்ட் லூயிஸ் நகரில் வசிப்பவர் மார்க்ரெட் ஷோப்னர். இவருக்கு வயது 80 ஆகும். இவர் தன் சமையல் அறையில் சமைத்துக் கொண்டிருந்த போது ஜன்னல் வழியாக பாய்ந்த அம்பு ஒன்று அவர் முகத்தில் தைத்தது. இதில் அவர் காயம்



அடைந்தார். முகத்தில் தைத்து நின்ற அம்பை அவர் கையால் பிடுங்கி எறிந்தார். இநத அம்பை அவரது பக்கத்து வீட்டுக்காரான 26 வயது



ரொபர்ட் ஜாய்னர் தான் எய்து இருக்கிறார். அவர் அம்பை எய்து பயிற்சி எடுத்து வந்தார். தற்போது, காவல்துறையினர் அவரை கைது செய்து, வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## மியான்மர் அரசிற்கு ஐ.நா. பாராட்டு

மியான்மரில் நீண்டகாலமாக காவலில் வைக்கப்பட்டிருந்த நோபல் பரிசு பெற்ற அரசியல் தலைவர் ஆங்சாங் சூகி விடுவிக்கப்பட்டுள்ளார். மேலும், இராணுவ ஆதரவு அரசுடன் பேச்சு நடத்தி வருகிறார். முதல் கட்டமாக, சமூக நலத்துறை அமைச்சர் அவுங் கீயை சந்தித்து பேசினார். இந்த நடவடிக்கையை ஐ.நா. பொதுச் செயலாளர் பான்



கீ மூன் வரவேற்றுள்ளார். இது குறித்து அவருடைய செய்தி தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், ஆங்சாங் சூகி மற்றும் அமைச்சர் அவுங் கீ இடையிலான பேச்சுவார்த்தை சுமூகமாக நடந்தது குறித்து மியான்மர் அரசியல் கட்சிகள் திருப்தி தெரிவித்துள்ளன. மியான்மர் மக்களின் நலனை கருத்தில் கொண்டு அனைத்து தரப்பினரும் முழு ஒத்துழைப்புடன் செயல்பட வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். ஆங்சாங் சூகி உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும்' என தெரிவித்துள்ளார். இதற்கிடையே, பான் கீ மூன் சிறப்பு ஆலோசகராக பணியாற்றும் விஜய் நம்பியார், விரைவில் மியான்மர் செல்கிறார். ஆங்சாங் சூகி உள்ளிட்ட அரசியல் தலைவர்களையும் ஆட்சியாளர்களையும் அவர் சந்திக்கிறார்.

### இறந்ததாக அறிவிக்கப்பட்டவர் உயிருடன்!

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்த ஆர்தர் ஜெரால்டு என்பவர், 1979ம் ஆண்டு மே மாதம் காணாமல் போனார். காணாமல் போனபோது அவருடைய வேலையும் பறிபோனது. மேலும், அதிகமான அளவுக்கு அவருக்கு கடன் இருந்தது. பல ஆண்டுகளாக அவரை கண்டுபிடிக்க முடியாததால் 1986ம் ஆண்டில், அவர் இறந்து விட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. அதன் பலனாக, ஆர்தர் குடும்பத்துக்கு பணமும் கிடைத்தது. தற்போது 25 ஆண்டுகள் கடந்த நிலையில், லாஸ் வேகாஸ் நகரில் ஆர்தர் ஜெரால்டு வசித்து வருவது தெரிய வந்துள்ளது. அந்த நகரில் புத்தகத் தயாரிப்பாளராக பணியாற்றி வருகிறார். இதனால், அவருடைய குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### இலண்டனில் நவீன உயிர் அணு வங்கி தொடக்கம்

குழந்தைப் பேறு இல்லாத பெண்களுக்காக உயிர்அணுக்களை அளிக்கும் வங்கிகள் வெளிநாடுகளில் செயல்படுகின்றன. ஆனால், அந்த அணுக்கள் யாருடையது? அவருடைய குணம், பாரம்பரியம் போன்றவை தெரியாது. இந்த நிலையில், 'இலண்டன் உயிர்அணு வங்கி' புதிய முயற்சியில் இறங்கியுள்ளது. அதன்படி, உயிர்அணு தானம் செய்பவர்களின் குணம், பாரம்பரியம், பழக்க வழக்கம், ஆளுமைத் திறன், சிந்தனை சக்தி, செயல்பாடு போன்ற பல்வேறு விவரங்களையும் பதிவு செய்கிறது. உயிர் அணுக்களுடன் இந்த தகவல்களும் இடம்பெறுகின்றன. எனவே, திருமண தகவல் மையங்கள் போலவே உயிர் அணு வங்கிகளும் இது பற்றிய துண்டு பிரசுரங்களை வெளியிட்டு விளம்பரப்படுத்தி வருகின்றன. இந்த நவீன முறை பற்றி உயிர் அணு வங்கியின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், இந்த புதிய முறையால் உயிர் அணு வாங்க வரும் பெண்கள், அதை அளித்தவரின் குணநலன்களை பற்றி முழுமையாக அறிந்து கொள்ள முடியும். மேலும், தங்களுக்கு எப்படிப்பட்ட குழந்தை வேண்டுமோ அதற்கு தகுந்தவாறு உயிர் அணுவை தேர்வு செய்ய முடியும்'' என்றார்.'

### ரஷ்யாவில் ஓய்வுபெறும் வயது உயர்கின்றது

ரஷ்யாவில் ஓய்வு பெறும் வயதை படிப்படியாக 65 ஆக உயர்த்தப்படும் என்று ரஷ்யா துணை நிதி →

வாகனக் கடன், வீட்டுக் கடன், கல்விக் கடன், கடனட்டை கடன் ஆகியவற்றில் ஏற்படும். இது அனைவர் மீதுமான மறைமுக வரி விதிப்பாகும். மத்திய பெடரல் ஒவ்வொரு ஆண்டும் 120 கோடி டொலர் தொகை பொறுப்பை நிறைவேற்றி வருகிறது. இதில் முதியோர் ஓய்வூதியம், சமூக பாதுகாப்பு திட்டம், மாற்றுத் திறனாளிகளுக்கான சமூக பாதுகாப்பு திட்டங்களும் நிறைவேற்றப் படுகின்றன என்றார்.

ஈரான்

## ஈராக் குர்து இன மக்கள் மீது தாக்குதல்

ஈரான் இராணுவத்துக்கும், ஈராக்கின் குர்து இன பிரிவினைவாதிகளுக்கும் நடந்து வரும் சண்டை காரணமாக வடகிழக்கு ஈராக்கின் கிராமப்புற மக்கள் ஏராளமானோர் இடம்பெயர்ந்து வருகின்றனர். செஞ்சிலுவைச் சங்கம் கடந்த 25ம் திகதி திங்கள்கிழமை இத்தகவலை தெரிவித்துள்ளது.

ஈராக்கில் உள்ள குர்து இன பிரிவினைவாதிகள் முகாம் மீது ஈரான் இராணுவம் நடத்திய தாக்குதலில், அப்பிரிவைச் சேர்ந்தவர்கள் 8 பேர் இறந்தனர். குர்து இன பிரிவினைவாதிகளின் ஆதரவு பிரிவைச் சேர்ந்த மேலும் இருவரும் பலியானதாக தகவல்கள் கூறுகின்றன. சண்டை காரணமாக இடம்பெயர்ந்துள்ள 800 பேருக்கு தேவையான அடிப்படை உதவிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர். ஏவுகணைத் தாக்குதல் காரணமாக சமீபத்தில் இவர்கள் அனைவரும் குவாதில் என்ற மலைப் பிரதேசத்தை விட்டு வெளியேறியவர்கள் ஆவர். இவர்களுக்கு தற்காலிக குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கிடையே, ஜெனீவாவைச் சேர்ந்த சர்வதேச தொண்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு தேவையான படுக்கை, பிளாஸ்டிக் பொருள்கள், குடிநீர் வடிகட்டி உபகரணங்கள் உள்ளிட்டவற்றை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.

மெக்சிகோ

## சிறைக் கலவரத்தில் 17 பேர் பலி

மெக்சிகோவில் உள்ள சிறைகளில் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் இடப்பற்றாக்குறை நிலவுகிறது. இந்நிலையில் அங்கு அடிக்கடி கைதிகளுக்கு இடையில் கலவரங்களும் உயிர்பலிகளும் ஏற்பட்டு வருகின்றன.

மெக்சிகோவில் போதைவஷ்துவினால் ஏற்படும் நெருக்கடிகள் மிகமோசமாக அதிகரித்துள்ளன. இதனால், கலவரங்கள், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இது சிறைச்சாலைகளை அதிகளவில் நிரப்பி வருகின்றது. இந்நிலையில் வடமெக்சிகோவின் க்யூடாட் ஜூவார்ஸ் பகுதியில் உள்ள சிறையில் கடந்த 26ம் திகதி செவ்வாயன்று கலவரம் வெடித்தது. அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 17 கைதிகள் உயிரிழந்தனர். கைதிகளை விசாரணைக்காக அழைத்துச் சென்றபோது, அவர்களுக்கு எதிரான வேறு கைதிகள் குழுவொன்று குறுக்கே புகுந்து தாக்கியதால் கலவரம் ஏற்பட்டது. இதன்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் பலியானார்கள். இதனையடுத்து அங்கு குவிந்த கைதிகளின் உறவினர்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே கலவரம் வெடித்தது. உறவினர்களை கட்டுப்படுத்த அதிரடிப்படையினர் அங்கு வரவழைக்கப்பட்டனர்.



# அழிவின் விளிம்பில் அல்—ஹைடா அமெரிக்க உளவுத்துறை தகவல்

அழிவின் விளிம்பில் அல்-ஹைடா இருப்பதாக அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அல்-ஹைடா தலைவர் பின்லேடன் கொல்லப்பட்டதும், கடந்த 7 ஆண்டுகளாக தொடரும் அமெரிக்க இராணுவத்தின் ஏவுகணை தாக்குதல்களாலும் அல்-ஹைடா அழிவின் விளிம்பில் இருப்பதாக நம்புவதாக அமெரிக்க உளவுத்துறையும், தெரிவித்ததாக அமெரிக்காவின் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.



உளவுத்துறையின் இந்த கணிப்பை தீவிரவாதத்துக்கு எதிரான அதிகாரிகளின் அறிக்கையும் பிரதிபலிக்கிறது. பாகிஸ்தானில் மிஞ்சி இருக்கும் தீவிரவாதிகளையும் இராணுவம் அழித்து ஒழித்து விடும் என்று நம்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அல்-ஹைடா இயக்கத்தால் அல்-ஹைடா தீவிரவாதிகளை மீண்டும் ஒன்று திரட்ட முடியும் என்றாலும் அது தற்காலிகமானதுதானே தவிர தொடர்ச்சியான ஒன்றாக இருக்க முடியாது. அந்த இயக்கம் அழிந்து போனாலும் கூட தீவிரவாத அபாயத்தை முற்றிலுமாக ஒழிக்க முடியாது. தீவிரவாத அபாயம் பயங்கரவாத எண்ணம் கொண்ட தனி நபர்களால் நீடிக்க தான் செய்யும். அல்-ஹைடாவின் வாரிசாக யேமனில் உள்ள தீவிரவாத இயக்கம் ஒன்று அல்-ஹைடாவை விட மிகப்பெரிய ஆபத்தாக வளர்ந்து வருகிறது என்றும் அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புதிதாக பதவி ஏற்ற அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா சமீபத்தில் ஆப்கானிஸ்தான் சென்றார். அங்கு அவர் அளித்த பேட்டியின் போது, தந்திரோபாய ரீதியில் அல்-ஹைடாவை தோற்கடிக்க கூடிய தூரத்தில் தான் இருக்கிறோம் என்று அவர் தெரிவித்தார். இதே கருத்தை தான் உளவுத்துறை அதிகாரிகளும் பிரதிபலித்து இருக்கிறார்கள்.

இது தொடர்பாக உளவுத்துறை அதிகாரிகள் கூறுகையில், இந்த அளவு அல்-ஹைடா வீழ்ச்சி அடைந்ததற்கு காரணம் பின்லேடனின் சாவு தான் என்றும் அவரது சாவு ஒரு திருப்புமுனை என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். பின்லேடன் தீவிரவாதிகளை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருந்தார். அமெரிக்கா மீது தாக்குதல் நடத்துவது என்ற நோக்கத்தில் மட்டும் முனைப்புடன் இயக்கத்தை காத்து வந்தார். அவரது மரணம் தான் அந்த இயக்கத்தின் மரணமாக அமையப்போகிறது. இந்த முடிவு விரைவில் எட்டப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். 2004ம் ஆண்டு முதல் நடத்தப்படும் ஏவுகணை தாக்குதல்கள் காரணமாக 1200 அல்-ஹைடா தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுஇவ்வாறிருக்க, பயங்கரவாதச் செயல்களுக்கு ஆட்களை தேர்வு செய்யவும், நிதி திரட்டவும் ஈரானும், அல்-ஹைடாவும் இரகசிய உடன்பாடு செய்துகொண்டுள்ளதாக அமெரிக்கா குற்றம்சுமத்தியுள்ளது. பாரசீக வளைகுடா பகுதியில், இருந்து ஆட்களை தேர்வு செய்து அவர்களுக்கு பயிற்சி அளித்து பின்னர் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானுக்கு அனுப்பி தாக்குதலை நிகழ்த்த அல்-ஹைடா திட்டமிட்டுள்ளது. அல்-ஹைடாவின் இந்த மோசமான திட்டத்துக்கு ஈரானும் உடந்தையாக இருக்க ஒப்புக்கொண்டுள்ளது. அல்-ஹைடா தமது செயலுக்கு ஈரான் மண்ணைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்து அந்நாடு இரகசிய உடன்பாடு செய்து கொண்டுள்ளது என்றும் அமெரிக்காவின் நிதித்துறை குறிப்பிட்டுள்ளது. அல்-ஹைடா முக்கிய தலைவரான அப்துல் ஆசி கலீல் உள்ளிட்டோருடன் ஈரான் உடன்பாடு செய்துள்ளது. இவர்கள் பாரசீக வளைகுடா நாடுகளில் தங்களது பணியைத் தொடங்க மும்முரமாகவுள்ளனர். இவர்களுக்கு அமெரிக்காவில் ஏதேனும் சொத்துக்கள் இருப்பின் அவை முடக்கப்படும். இந்த பயங்கரவாதிகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுகிறது என்றும் அமெரிக்காவின் நிதித்துறை தெரிவித்துள்ளது.

மொராக்கோ

## இராணுவ விமான விபத்தில் 78 பேர் பலி

வட ஆபிரிக்க நாடான மொராக்கோவில் இராணுவ விமானம் ஒன்று மலை மீது மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன அரசை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் குழந்தைகள், பெண்கள் கடத்தல் வியாபாரம்

உலகில் மக்கள் தொகை அதிகம் உள்ள சீனாவில், ஒரு தம்பதி ஒரு குழந்தைதான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற சட்டமே உள்ளது. ஆனாலும் அங்கு குழந்தைகள் வியாபாரமும் பெண்கள் வியாபாரமும் மிக அதிகமாக நடைபெறுகின்றது. சீனாவின் தென் பகுதியான குவாங்டாங், குவாங்சி பகுதிகளில் குழந்தைகள் விற்பனை மோசடி சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனர்கள் ஆண் குழந்தைகளை பெரிதும் விரும்புவதே இதற்கு காரணம் என்றும் தெரியவந்துள்ளது.



வியட்நாமில் இருந்து இந்த மாதம் மட்டும் விற்பனைக்காக கடத்திவரப்பட்ட 89 ஆண் குழந்தைகளை காவல்துறையினர் மீட்டுள்ளனர். அவர்களுடன் குழந்தைக் கடத்தல்காரர்கள் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக குழந்தைகள் கடத்தல் வியாபாரத்துடன் தொடர்புடைய மேலும் 369 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். வியட்நாம், கம்போடியா போன்ற நாடுகளில் வறுமையான குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளை பேரம்பேசி குறிப்பிட்ட தொகைக்கு குழந்தைகளை இவர்கள் வாங்கியும் அந்நாடுகளில் உள்ள




முகவர்களின் ஊடாகக் கடத்தியும் வந்து சீனாவில் பெரும்தொகைக்கு விற்பனை செய்து வந்துள்ளனர். மிகப்பெரும் தொழிலாளக இது அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்தவாரம் கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகள் எல்லாமே பிறந்து 10 நாள் முதல் 7 மாதங்கள் வரை உள்ள குழந்தைகள். கடத்தி வரும் போது குழந்தைகள் அழாமல் இருக்க தூக்க மாத்திரைகள் கொடுத்துள்ள கொடூரமும் அம்பலமாகியுள்ளது. அத்துடன், வியட்நாம் - சீன எல்லைகளில் உள்ள ஆறுகள் ஊடாக மூங்கில் படகுகளில் மிகவும் ஆபத்தான வழியின் ஊடாக இக் குழந்தைகளைக் கடத்திவருவதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனாவில் ஆண் - பெண் விகிதாசாரமும் சமநிலையில் இல்லை. இதனால் திருமணத்துக்கு பெண் கிடைக்காமல் சீனர்கள் பலர் பிரம்மசாரிகளாகவே வாழ்கின்றனர். மேலும், ஒரு குழந்தை பெறும் சட்டம் இருப்பதால், கருவில் வளர்வது பெண் என்றால், பெண் குழந்தைகளை விரும்பாதவர்கள் கருக்கலைப்பும் செய்து விடுகின்றனர். இதனால் அயல் நாடுகளில் இருந்து பெண்களை கடத்தி வந்து சீனர்களுக்கு விற்று பணம் சம்பாதிக்கின்றனர். 2009 ஏப்ரலில் இருந்து இதுவரை 39 ஆயிரத்து 194 கடத்தல் வழக்குகள் பதிவாகி உள்ளன. இதில் 14,090 பெண்கள் கடத்திவரப்பட்ட வழக்குகளும், 8717 குழந்தைகள் கடத்தி வரப்பட்ட வழக்குகளும் அடங்கியுள்ளன. இந்தக் கடத்தல்கள் சீன அரசை கதிகலங்க வைத்துள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை, சீனாவிற்குள்ளும் குழந்தைகள் கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. சீனாவில் நடைபெறும் இந்தக் கடத்தல்களைத் தடுப்பதற்காகவும், கண்டுபிடிக்கப்படும் குழந்தைகளின் பெற்றோர்களை அடையாளம் காண்பதற்காகவும் சீனா புதிய திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளது. அதன்படி பெற்றோர்கள் தங்கள் மரபணுக்களை (DNA) காவல்நிலையங்களில் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். பெற்றோர்கள் தங்கள் மரபணுக்களை பதிவு செய்துவைத்திருந்தால் கண்டுபிடிக்கப்படும் குழந்தைகளை பெற்றோர்களிடம் விரைவாக ஒப்படைக்க வசதியாக இருக்கும் என காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

60 இராணுவத்தினர் உட்பட 78 பேர் உயிரிழந்தனர். 3 பேர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். கடந்த 26ம் திகதி செவ்வாய்க் கிழமை சி-130 என்ற இராணுவ விமானம் 81 பேருடன் டாக்லா என்ற இடத்தில் இருந்து கினித்ரா என்ற இடத்துக்கு புறப்பட்டுச் சென்றுள்ளது. புறப்பட்ட சிறிது நேரத்தில் குலேமிம் என்ற நகரில் இருந்து 8 கிலோ மீற்றர் தூரத்தில் மலையில் மோதி விபத்துக்குள்ளானது. விபத்துக்கான காரணம் தெரியவில்லை. ஆனால் விபத்து நடந்த பகுதியில் கடுமையாகப் மூடுபனிவாக இருந்துள்ளது. எனவே, மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து நடத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. மொராக்கோவில் இதுவரை நடந்த விமான விபத்துகளிலேயே அதிக உயிர் இழப்பும், மோசமான விமான விபத்தும் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக 1994ம் ஆண்டில் நடந்த விமான விபத்தில் 44 பேர் பலியாயினர்.

சூடான்கள்

## புதிய நாணயத்தை வெளியிட்டன

தென் சூடான் தனி நாடாக பிரிவடைந்ததைத் தொடர்ந்து சூடான் உத்தியோகபூர்வமாக புதிய நாணயத்தினை வெளியிட்டுள்ளது. மத்திய வங்கியின் தகவல்களின்படி நாணயப் பரிமாற்ற நிலையங்களிலும் வங்கிகளிலும் புதிய நாணயத் தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம். கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தனிநாடாக பிரிந்து சென்ற தென் சூடான் புதிய நாணயத்தாளினை வெளியிட்டமையைத் தொடர்ந்து சூடானும் புதிய







நாணயத்தாளினை வெளியிட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் தீர்க்கப்படாத நிலையில் உள்ள பிரச்சினைகளின் ஒரு பகுதியாக நிதியியல் ஏற்பாடுகளும் உள்ள நிலையில் இரு தரப்புப் பொருளாதாரமும் பாதிக்கும் நிலையில் உள்ளது.

சகல பழைய நாணயத் தாள்களும் மூன்று மாதகாலப் பகுதிகளுள் மாற்றப்பட வேண்டுமென மத்திய வங்கி அறிவித்துள்ளது. ஆனால் இக்காலப்பகுதியானது கட்டாயமான வரையறையாக இருக்காது என்பதனையும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. 2 பில்லியனுக்கும் அதிகமான சூடான் பவுண்சுகள் புதிய சூடானில் புழக்கத்தில் உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

கொங்கோ

## படகு விபத்தில் 80 பேர் பலி

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் இடம் பெற்ற படகு விபத்தொன்றில் பலியான 80 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. சுமார் 220 பயணிகளை ஏற்றிக்கொண்டு துஷாபா ஆற்றில் பயணித்துக்கொண்டிருந்தபோது சரக்குக் கப்பலொன்றுடன் குறித்த படகு மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளதாக கூறப்படுகின்றது. கடந்த வியாழக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த படகில் பயணித்தவர்களில் 100



பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். சிலர் காணாமல் போயுள்ளதாக நம்பப்படுகிறது.

கொங்கோ நாட்டில் தொடருந்து மற்றும் வீதியூடான போக்குவரத்துக்கள் குறைந்தளவில் காணப்படுகின்றன.

ஆற்று வழியூடான கப்பல்கள் மற்றும் படகுகள் மூலமான போக்குவரத்துக்களே அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் அங்கு விபத்துக்களும் அடிக்கடி ஏற்பட்டு இழப்புக்களும் ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

துனிசியா

## முன்னாள் அதிபருக்கு 16 ஆண்டு சிறை

துனீசியா முன்னாள் அதிபர் சைன்எல் அபிடைன் பென்அலி மீதான கடத்தல், ஊழல், சொத்து மோசடி உள்ளிட்ட வழக்குகளின் விசாரணை முடிந்து, அதிபருக்கு 16 ஆண்டுகள் சிறைத் தண்டணையும் அவரது மனைவிக்கு 19 ஆண்டு

(31ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் செர்ஜி ஷட்டலோவ் அறிவித்திருக்கிறார். ஐரோப்பிய நாடுகளிலேயே ரஷ்யாவில்தான் ஓய்வு பெறும் வயது மிக குறைவாக இருந்தது. அந்த நாட்டில் பெரும்பான்மை ஆண்கள் 60 வயதிலும் பெண்கள் 55 வயதிலும் ஓய்வு பெற்று வருகிறார்கள். சுரங்க தொழிலாளர்கள், விமானிகள், விண்வெளி வீரர்கள் போன்ற சில விசேட பிரிவினர் இன்னும் குறைந்த வயதிலேயே ஓய்வு பெற்று வருகிறார்கள். ஓய்வு பெறும் வயதை படிப்படியாக 65 ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த 15 ஆண்டுகளில் அனைவரும் 65 வயதில் ஓய்வு பெறுவார்கள் என்று அமைச்சர் ஷட்டலோவ் கூறினார்.

## பலஸ்தீனம் ஆயுதக் கப்பல் கைப்பற்றப்பட்டது

சாக்கடலில் (செத்தகடல்) ஆயுதங்களுடன் பயணித்த படகொன்றை தாம் கைப்பற்றியுள்ளதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன், படகிலிருந்த பலஸ்தீனியர்கள் இருவரிடம் விசாரணை நடைபெற்று வருகின்றன. துப்பாக்கிகள், வெடிமருந்துப் பொருட்கள் மற்றும் ஏனைய ஆயுதங்கள் குறித்த கப்பலில் காணப்பட்டதாக இஸ்ரேல் இராணுவத்தினர் கூறினர். மேற்படி ஆயுதங்கள் ஜோர்டானிலிருந்து பலஸ்தீனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுக்கொண்டிருந்ததாக இராணுவத்தினரை மேற்கோள்காட்டி, சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் காஸாவுக்கு ஆயுதங்களை எடுத்துச் சென்ற கப்பலொன்றை இஸ்ரேலியர்கள் இடைமறித்திருந்தனர். அதன் பின்னர் இரண்டாவது கப்பல் இதுவெனக் கூறப்படுகின்றது.

## மகள்களை சுட்டுக் கொன்ற தந்தை

பாகிஸ்தானில் தந்தையொருவர் தனது 6 பெண் பிள்ளைகளையும் சுட்டுக் கொன்றுள்ளார். பாகிஸ்தான் பஞ்சாப் பகுதியில் வசிப்பவரான அரிப் முபாசீர் என்பவர் தனது மகள்களில் இருவர் அயலில் வசிக்கும் இரு மாணவர்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாக கேள்வியுற்றதைத் தொடர்ந்து, அதனால் தனது கௌரவத்திற்கு பங்கம் விளைவிப்பதாக கருதிய நிலையில் தனது 6 மகள்களையும் சுட்டுக் கொன்றுள்ளார்.

தனது மகள்கள் அனைவரையும் அறைக்குள் வரவழைத்த முபாசீர், தனது மனைவி உள்ளிட்டோர் பார்த்துக் கொண்டிருந்த வேளையிலேயே அவர்களை சுட்டுக் கொன்றுள்ளார். இச்சம்பவமானது அங்குள்ளவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளதுடன், முபாசீரின் மனைவி புகார் கொடுத்ததைத் தொடர்ந்து அவரைப் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். முபாசீரின் மகள்களில் சமீனா (14), ரஸியா (16) ஆகியோர் அயல் பகுதியில் வசிக்கும் கல்லூரி மாணவர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், ஏனைய சகோதரிகள் இவர்களின் உறவுக்கு உதவியதாகவும் கேள்வியுற்றதைத் தொடர்ந்தே அவர்களைச் சுட்டுக்கொன்றதாக முபாசீர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

La Gare
EXO MARCHE
DRANCY
RER
அனைத்து மளிகைத் தேவைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்.
214, rue Anatole France; 93700 Drancy
Tél : 01 48 95 24 80

MINI MARCHÉ
பலசரக்கு வாணிபம்
4, rue Ernest Prevost
93330 Aubervilliers
01 49 37 15 97

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.
COIFFURE VITHUSA
TÉL: 01 48 34 90 44
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

Spécialitées Indiene & Srilankaise
CAFÉ RIVAGE
உங்கள் அனைத்து இல்ல விழாக்களுக்குமான உணவு வகைகளுக்கும் பலகார வகைகளுக்கும்.
100 இடியப்பம் சொதி சம்பலுடன் 22 € கள் மட்டுமே !
Tél : 01 40 36 04 08
Port : 06 61 85 89 87
54, rue louis blanc
75010 Paris

Blanc Mesnil - Drancyயில் தமிழர்களுக்கான புதிய உதயம்
NARU COIFFURE
21, AV DE LA REPUBLIQUE
93150 LE BLANC MESNIL
06 59 49 16 80
RER: B - DRANCY

Mob: 06 13 06 20 29
Tel : 01 39 80 85 23
கேக், மணவறை, வீடியோ, போட்டோ அகன்ற திரை, உணவு வகை, மண்டப ஒழுங்குகள், மற்றும் உங்கள் விழாக்களுக்கான ஒழுங்குகள் அனைத்திற்கும்.
BABY
BALOON DECORATION

Akil
RANJANAAS S.A.R.L
பட்டுப்புடவைகள் - அன்பளிப்புப் பொருட்கள்
ஆண்கள், சிறுவர்களுக்கான ஆடைகள்
189, Rue du Fbg. St.Denis 75010 Paris
Tél.: 0142 05 16 88
203, Rue du Fbg. St.Denis 75010 Paris
Tél.: 01 40 34 28 90

A.S. சுப்பர் மார்க்கட்
New Trade center - import export
பல்பொருள் அங்காடி
மளிகை - புடவைகள் - தையல் வேலைகள்
Taxiphone - Fax - Photocopie
292, rue stalingrad
93700 Drancy
Tél.: 01 48 37 08 77 / 06 50 38 21 00
M° La Courneuve 8 mai 1945 - Tram 1 : Maurice Lachâtre France

திருப்பதி வீடியோ
வீடியோ
படப்பிடிப்புகளுக்கும்
மண்டப ஒழுங்குகளுக்கும்
மகேசன் Tel: 01 60 17 74 86
www.thiruppathyvideos.com

23, rue Cail - 75010 Paris
Tél.: 01 46 07 82 90
M° : Gare du Nord
La Chapelle
இந்திரா உணவகம்
இலங்கை இந்திய உணவுகளின் சுவையகம்.
INDRA
RESTAURANT

S.P TRADERS
உங்கள் மளிகைத்தேவைகள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ்!
197,Rue Faubourg Saint-Denis
75010 PARIS
M° : Gare du Nord / La Chapelle

Malayane Cafe
Spécialités Indiennes et Sri Lankaises
உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்கள் அனைத்திற்குமான உணவு வகைகள் ஓடர்க்கு செய்து தரப்படும்.
23, rue Perdonnet - 75010 paris Tél : 01 40 34 35 82

சிகையலங்காரச் சிற்பிகள்
லக்கி ஸ்டார் சலூன்
Lucky Star Saloon
23, Avenue P.V. Couturier
93120 La Courneuve
Port.: 06 59 39 50 50

ASIAN WEDDING PLANNER
Pour toutes vos réception dans le plus beaux salons
மலர்ச் சோடனைகள்
Décoration Florale
மண்டப ஒழுங்குகள்
Location De Salle
Traiteur
Animation DJ
உணவு பரிமாறுவதற்கான
உபகரணங்கள் வாடகைக்கு
Location de Matériel
உணவு பரிமாறுவதற்கான
ஆட்கள் ஒழுங்கு செய்தல்
Service de Restauration
புகைப்படம் மற்றும் வீடியோ
Video & Photo
மற்றும் உங்கள் மங்கள வைபவங்களுக்கான அனைத்துத் தேவைகளுக்குமான எங்களின் சேவைகள்
Contact : Bernard (Ravi) : 06 03 46 89 87 • Jeeva : 06 43 30 45 88

லா சப்பலில் உங்களை வரவேற்கின்றது.
S.A.R.L CEK
VANNI BOUCHERIE
வன்னி இறைச்சிக்கடை
26 rue perdonnet 75010 Paris
M°: La chapelle / Gare du nord
Tél : 01 40 36 15 63 / Port: 06 68 96 43 16

சகலவிதமான மளிகைப்பொருட்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்
ஸ்ரிபன் அன் சோபிகா
பல் பொருள் வாணிபம்
V.N. STEPHANE & SOPIKA
ALIMENTATION GENERALE & EXOTIQUES
IMPORT & EXPORT
10, avenue Henri Barbusse - 93150 Le Blanc Mesnil
TEL/FAX : 01 80 62 80 85
email : vnstephanesopika@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயானா

# தரையிறங்கிய விமானம் இரண்டாக முறிந்தது!

தென் அமெரிக்காவின் கயானாவில் ஒரு பயணிகள் விமானம் இரண்டாக உடைந்தது. இருப்பினும் விமானியின் சாதுரியம் காரணமாக ஒரு பயணிக்கும் ஆபத்து ஏற்படாமல் அத்தனை பேரும் பத்திரமாக தப்பியுள்ளனர். கரீபியன் ஏயார்லைன் நிறுவனத்துக்கு சொந்தமான இவ்



விமானம் அமெரிக்க நியூயோர்க் விமான நிலையத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை கயானாவின் ஜோர்ஜ்டவுன் விமான நிலையத்தில் தரையிறங்கியபோது ஓடுதளத்தில் நிறுத்தமுடியாமல் தொடர்ந்து ஓடி விபத்திற்குள்ளானதாக அரசாங்கத்தின் பேச்சாளர் ரோகர் புலை கூறினார்.

சறுக்கிச் சென்ற விமானம் இரண்டாக உடைந்தது. மேலும் அருகில் உள்ள பள்ளத்தாக்கில் விழும் வகையில் அது அபாயகரமாக சென்றது. இருப்பினும் விமானி மிகவும் திறமையாக செயல்பட்டு விமானத்தை நிறுத்திவிட்டார். விமானம் இரண்டாக பிளந்து நின்ற இடம் ஓடுதளத்தின் இறுதிப்பகுதியாகும். அதன் அருகே 200 அடி ஆழ பள்ளத்தாக்கு உள்ளது. அதில் விமானம் விழுந்து இருந்தால் பெரிய அளவில் உயிர் இழப்பு ஏற்பட்டு இருக்கும். இதனால் விமானத்தில் இருந்த 6 விமானப் பணியாளர்களும் 157 பயணிகளும் என 163 பேரும் பத்திரமாக உயிர் தப்பினர். விமானம் உடைந்ததற்கான காரணம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.


இதுகுறித்து கயானா நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் லெஸ்லி ராமசாமி கூறுகையில், விமானம் உடைந்தபோதிலும் அத்தனை பேரும் பத்திரமாக தப்பியுள்ளனர். 30 பேர் மட்டும் லேசான காயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். 3 பேருக்கு மட்டுமே கால் எலும்பு முறிவு ஏற்பட்



டுள்ளது என்றார். விபத்துக்குள்ளான விமானம் நியூயோர்க்கிலிருந்து கயானா வழியாக டிரினிடாட் சென்று கொண்டிருந்தது. கயானாவில் இறங்கியபோதுதான் இந்த விபத்து ஏற்பட்டு விட்டது.

# காதல் சின்னம் ஈட்டும் பெரும் வருவாய்!

இந்தியாவின் ஆக்ராவில் அமைந்துள்ள உலக அதிசயமான தாஜ்மகால், கடந்த ஆண்டில் மட்டும் 20 கோடி ரூபா வருவாய் ஈட்டியுள்ளது. ஆக்ராவில் அமைந்துள்ள காதல் நினைவுச் சின்னமான தாஜ்மகால், மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. தாஜ்மகாலைப் பார்வையிட தினந்தோறும், உலகின் பல்வேறு பகுதிகளில்



இருந்து ஏராளமான மக்கள் வந்து செல்கின்றனர். இதனால், நுழைவுச் சீட்டு விற்பனை மூலம், தாஜ்மகால் கடந்த ஆண்டில், 20 கோடி ரூபா வருவாய் ஈட்டியுள்ளது. இந்த வருவாய், முந்தைய ஆண்டைவிட 15 சதவீதம் அதிகரித்துள்ளது. 2008-09ம் ஆண்டுகளில் நுழைவுச் சீட்டு மூலம், 14 கோடி ரூபாவும், 2009-10ம் ஆண்டில், 17.24 கோடி ரூபாவும், 2010-11ம் ஆண்டில் 19.89 கோடி ரூபாவும் வருவாய் கிடைத்துள்ளது. இந்திய தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டில், நாடு முழுவதும் 116 பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் உள்ளன. இந்த நினைவுச் சின்னங்கள் மூலம், இந்திய தொல்பொருள் துறைக்கு, கடந்த 2010-11ம் ஆண்டில் 87 கோடி ரூபா வருவாய் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டில், டில்லியில் உள்ள குதுாப் மினார் மூலம், 10 கோடி ரூபாவும், ஹ?மாயூன் கல்லறை மூலம் 6.15 கோடி ரூபாவும், செங்கோட்டை மூலம் 5.90 கோடி ரூபாவும் வருவாயாகக் கிடைத்துள்ளது.

# மருந்து விலை தொடர்பான புதிய இணையத்தளம்

மருந்து தொடர்பான விபரங்கள், விலை, உற்பத்தியாளர்கள், மூலக்கூறுகள், தடை செய்யப்பட்டுள்ள மருந்துகள் மற்றும் புதிதாக அறிமுகமாகியுள்ள மருந்துகள் பற்றிய விவரங்களை நுகர்வோர் அறிந்து கொள்ளும் வகையிலும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் புதிய இணையத்தளம் ஒன்று இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் 20 இலட்சம் ரூபா நிதி உதவியுடன் டில்லியை சேர்ந்த வினோத்குமார் நினைவு அறக்கட்டளை இந்த இணையதளத்தை உருவாக்கியுள்ளது.

www.medguideindia.com என்ற இந்த இணையதளத்தை செல்பேசிகள் வாயிலாகவும் நுகர்வோர் அணுக முடியும். இதன் வாயிலாக பொதுப் பண்பு அடிப்படையிலான மருந்துகள் குறித்த பல்வேறு தகவல்களுடன், அவற்றின் விலையை இதர வணிகச் சின்னங்களின் விலைகடன் ஒப்பிட்டு பார்த்து தெரிந்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. செல்பேசி வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளபோதிலும், செல்பேசிகளில் இணையதள இணைப்பைப் பெற்றுள்ளோரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. எனவே இத்தகைய நுகர்வோர்களுக்கு வசதியாக மருந்துகள் குறித்த பல்வேறு விவரங்களை குறுந்தகவலாக (எஸ்.எம்.எஸ்.) தெரிந்து கொள்ளவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர் ராஜீவ் அகர்வால், புதிய இணையதளத்தை அறிமுகம் செய்து வைத்த பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர், 'மருந்துவர்கள் பொதுவாக விலை உயர்ந்த மருந்துகளையே எழுதிக் கொடுக்கின்றனர். அதே தரமுள்ள மருந்துப் பொருட்கள் குறைந்த விலையிலும் தாராளமாக சந்தையில் கிடைக்கின்றன. இந்நிலையில் விலை குறித்த தகவல்கள் பொதுமக்களுக்கு மருந்துகளை தமது விருப்பப்படி தேர்வு செய்து கொள்ள உதவும்`` என்று அவர் கூறினார்.

சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. துனிசியா நாட்டில் 23 ஆண்டுகளாக கொடுங்கோல் ஆட்சி நடத்தியவர் சைன்எல் அபிடைன் பென் அலி. இவர் மீது மக்களிடையேயான எதிர்ப்பு அதிகரித்து, போராட்டம் வெடித்தது. இதனால், கடந்த ஜனவரி மாதம் நாட்டை விட்டு, சவுதி அரேபியாவிற்கு தப்பியோடி, அங்கு தலைமறைவானார்.

இந்நிலையில், அதிபர் மீதான போதைப் பொருட்கள், ஆயுதங்கள் பதுக்கல், சொத்து மோசடி, ஊழல் உள்ளிட்ட வழக்குகளின் விசாரணை தலைநகர் டுனீஸ் குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்தது. பென்அலியை தங்களிடம் ஒப்படைக்குமாறு துனீசிய அரசு எழுப்பியுள்ள கோரிக்கையை சவுதி அரேபியா நிராகரித்துவிட்டது. எனினும், பென்அலியின் மீதான வழக்குகளின் விசாரணை முடிந்த டுனீஸ் நீதிமன்றம் தனது தீர்ப்பில், முன்னாள் அதிபர் பென்அலிக்கு 16 ஆண்டு சிறைத் தண்டனையும், அவரது மனைவிக்கு 19 ஆண்டு சிறைத் தண்டனையும் விதித்தது. மேலும் இருவருக்கும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, அவரது மகளுக்கு 8 ஆண்டு சிறைத் தண்டனையும், மருமகனுக்கு 16 ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

# மிராஜ் போர் விமானங்களை புதுப்பிக்க பிரான்சுடன் ஒப்பந்தம்



இந்திய விமானப்படையில் உள்ள மிராஜ்-2000 ரக போர் விமானங்களை 10,800 கோடி இந்திய ரூபா செலவில் புதுப்பிக்க பிரான்ஸ் நிறுவனத்துடன் இந்தியா கடந்த 29ம் திகதி ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. பிரான்ஸ் நாட்டு தயாரிப்பான மிராஜ் 2000 ரக போர் விமானங்கள், இந்திய விமானப்படையில் கடந்த 80ம் ஆண்டுகளில் சேர்க்கப்பட்டன. கார்கில் போரில் மிராஜ் ரக போர் விமானங்கள் முக்கிய பங்காற்றின. விமானப்படையில் இப்போதுள்ள 51 மிராஜ் விமானங்களை புதுப்பிக்க விமானப்படை முடிவு செய்தது. இது பற்றி பிரான்ஸ் நாட்டின் 'தலஸ் மற்றும் டசால்ட் ஏவியேஷன் (Thales and Dassault Aviation)' நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இது கடந்த ஐந்தாண்டுகளாக இழுபறியில் இருந்தது. இந்நிலையில், புதுப்பிப்பதற்கான செலவு 10,800 கோடி ரூபா என முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் செய்ய மத்திய அமைச்சரவையின் பாதுகாப்பு குழு சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. அதன்படி, பிரான்ஸ் நிறுவனத்துடன் அதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது. மிராஜ் விமானங்களில் தற்போதைய அதிநவீன வசதிகள் சேர்க்கப்பட உள்ளதாக கூறப்படுகின்றது. மேலும், இலத்திரனியல் போர் கருவிகளும், ரடார்களும் புதுப்பிக்கப்பட உள்ளன. இதன் மூலம், மேம்படுத்தப்பட்ட மிராஜ் விமானங்களை இன்னும் 20 முதல் 25 ஆண்டுகளுக்கு விமானப்படை பயன்படுத்த முடியும் என்று இந்திய விமானப்படை அதிகாரிகள் கூறியுள்ளனர். பிரான்ஸ் இப்போது மிராஜ் போர் விமானங்கள் தயாரிப்பதைக் கைவிட்டு புதிய நவீன ரபல் போர் விமானங்களை தயாரித்துவருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org